# தமிழ்ச்சமய
# இரண்டாம் சிறப்பு மலர்

## இறைமையில் தமிழ்மை
## தமிழ்மையில் இறைமை

வெளியீடு:
மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை

# பொருளடக்கம்

1. அருளுரை 1

2. சமயம் – விளக்கம் 2

3. தமிழ்ச்சமய வரையறை 3

4. தமிழ்ச்சமய இறையாண்மை 4

5. தமிழ்ச்சமய இறையியல் 5

6. தமிழ்ச்சமயப் பண் 6

7. வாழ்த்துப்பா 7–9

8. தலைமை செய்தி 10–12

9. தமிழ்ச்சமயத் தொகுப்புச் செய்தி 13–17

10. வாழ்த்துச் செய்திகள் 18–30

11. சிறப்புக் கட்டுரைகள் 31–82

12. தமிழர் மரபார்ந்த நிகழ்ச்சி வழிநடத்துனர்கள் 83

13. ஆதரவு இயக்கங்கள்

# தமிழ்ச்சமய அருளுரை

தமிழ்ச் சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பாரம்பரிய சமயம் மற்றும் வாழ்வியல் முறையாகும். ஆதியில் இயற்கையைப் போற்றும் வழிபாட்டுமுறையில் தொடங்கி, படிப்படியாக மரபு வழிப்பாடாகத் தமிழர் வாழ்வியல் வளர்ச்சி கண்டது.

பன்னெடுங்காலமாக வளர்ந்துவந்த வழிப்பாட்டு முறைகள் இன்றளவும் தமிழர்தம் சமயவாழ்வில் நிலைபெற்றிருப்பதைக் காணவியலுகின்றது

பழந்தமிழர் நிலப்பாகுபாடு அடிப்படையில் இனக்குழுக்களாக வாழ்ந்த காலந்தொட்டே கடவுட்கொள்கையை முன்னிலைப்படுத்தி வாழ்ந்துள்ளதைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. தமிழர்களால் போற்றிக் கருதப்படும் தமிழ் மொழி இறைமொழியாகவும் தமிழ்ச் சமயத்தில் ஆளப்படுகிறது.

தமிழர்தம் இறை வழிபாடு என்பது நன்றி நவிலும் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டது. தமிழர்களின் இறையியல் இமயம் முதல் குமரி வரை பல அடைமொழிகளைக் கொண்டு விரிந்தது. என்றாலும் தென் தமிழ் நாட்டில் நுண்ணிய தத்துவ நிலையில் செம்மைப்பட்டது.



# தமிழே இறைமொழி

# சமயம் – பொருள் விளக்கம்

சமை - சமைத்தல் (பக்குவப்படுத்தல்) -சமையம் -சமயம் மனிதனின் ஆன்மா இறைவனை அடையத் தகுதிப்படுத்தும் ஒழுக்கம் அல்லது நெறி. மனிதனைப் பக்குவப்படுத்தி இறைநிலை படுத்தும் ஒழுக்கமானது சமயம் என்றானது.

"சமயம்" என்பது வாழ்வின் பல்வகைச் சூழ்நிலைக்கும், ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனிதன் தன் நடத்தையை அமைத்துக்கொள்ள உதவியாய் அமைந்த ஒரு கருதுகோள்.

தனிமனிதர் பெறுகின்ற சமயத் தெளிவையும் செயல்பாடுகளையுமே தொகுத்த விளைவாக சமுதாய தாக்கமாக வெளிப்படுகிறது. சமுதாய தாக்கமே தனிமனித வாழ்வை உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ செய்கிறது.

இக்கருத்தையே திருவள்ளுவரும்,

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு" (குறள் - 595)

என்று கூறுகிறார்.



# தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமய வரையறை

தமிழர்களின் சமயம் நோக்கிய அணுகுமுறைகள், சிந்தனைகள், நடைமுறைப் போக்குகள், வரலாற்றுக் கூறுகள் அனைத்தும் தமிழ்ச்சமயம் என்ற வரையறைக்குள் அமைந்துள்ளன. தமிழ்ச்சமயம் என்பது மூன்று முகாமையான கூறுகளின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

1. தமிழால் ஆக்கம் பெற்றுள்ள அதன் வழிபாடுகள்தமிழையே மூலமாகக் கொள்ளுதல்.
2. தமிழர்மரபுக்கும் பண்பாட்டிற்கும் உள்ளடங்கிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்.
3. தமிழர் கண்ட மெய்யியலையும் அவற்றின் நூல்மரபுகளையும் மேற்கொள்ளுதல்.

தமிழர்கள் இவ்வரையறைக்குள் உட்பட்டுள்ள சமயங்களையும் அவற்றை ஒத்த மரபு நெறிகளையும் தமிழ்ச்சமயமாக ஏற்றுக் கடைப்பிடித்தல் வேண்டும்.



# தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமய இறையாண்மை

இறையாண்மை என்பது மேலானது அது எக்காலத்திற்கும் நிலையானது என்று பொருள்படும் தமிழ்ச்சமய இறையண்மை நான்கு நிலையான கூறுகளை உள்ளடாங்கியது. இந்த நான்கு கூறுகளும் தமிழ்ச்சமய இறையியல் மீது ஒரு மேலான மெய்யியலை வெளிப்படுத்துகின்றன அவை தனித்தனியே பிரித்துப் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

முதலாவது கூறு தமிழே இறைமொழி. தமிழ்மொழி என்பது இறையால் அளிக்கப்பட்ட மொழி அல்லது இறையை அடையும் முழுமையான தெய்வீக மொழி என்பதாகும். இது தமிழை ஒரு "தெய்வீகத் தன்மை" உடையதாகக் கருதுகிறது. திருமந்திரம், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் போன்ற தமிழ் மறைநூல்கள், இறைவனைத் தமிழில் தான் பாடி வழிபட்டன.

இரண்டாவது கூறு தமிழ்ச்சமயமே தாய்சமயம். தமிழ்ச்சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு பாரம்பரிய சமயம் மற்றும் வாழ்வியல் முறையாகும். தமிழரின் அசல், பழங்கால, தாய்ப்பால் போன்று இயல்பான சமயம் ஆகும். வேறு எந்த வெளிப்புற செல்வாக்கும் இல்லாமல் தோன்றிய சமயம். இங்கு "தாய்சமயம்" என்ற சொல் அதன் தனித்துவம் மற்றும் தன்னிறைவைக் குறிக்கிறது.

மூன்றாவது கூறு தமிழ்ச்சமய இறையியல் மரபு, சமயம், அகம் சார்ந்த வழிபாடாகும். தமிழ்ச்சமய இறையியல் என்பது பல்வேறு காலகட்டங்களில் பின்பற்றிய சமய மரபுகள் மற்றும் அவற்றின் கடவுள் தொடர்பான நம்பிக்கையைக் குறிக்கிறது. இது தனித்துவமான மரபுகளையும், சமயக் கோட்பாடுகளையும், வாழ்க்கை நெறிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

நான்காவது கூறு தமிழ்ச்சமய நான்மறை அறம், பொருள், இன்பம், விடு என்பதாகும். நான் என்றால் நான்கு. மறை என்றால் காப்பு அல்லது அரண். நான்மறை என்றால் நான்கு அரண் என பொருள்படும். உலக உயிர்களுக்கு அரண் அமைத்து, அவை நடைமுறையில் வாழ்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை எப்படி வாழ வேண்டும். பொருள் ஈட்ட வேண்டும், இறைவனை அடைய வேண்டும் என்று உலக உயிர்களுக்கு மறையாக இறைவன் அருளியதே நான்மறை ஆகும். இவை தமிழ்ச்சமயத்தின் நூல் மரபு என்றும் குறிப்பிடப்படும்.

தமிழ்ச்சமய இறையாண்மையானது ஒரு மேலான, நிலையான, தனித்துவமான, முழுமையான இறையியல் சார்ந்த வாழ்வியல் முறை என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது. இந்த வெளிப்பாடானது தமிழ்ச்சமய ஆன்மிக அடையாளத்தை வலுப்படுத்தும் ஒரு உன்னதமான விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

# தமிழர் இறையியல்

## மரபுசார் வழிபாடு

தமிழரின் மரபு சார் வழிபாடு இயற்கையிலிருந்து தொடங்குகிறது. இந்த வழிபாடு காலம்காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப் படுகின்றன.

1. இயற்கை வழிபாடு
2. நடுகல் வழிபாடு
3. குலதெய்வ வழிபாடு
4. நாட்டார் வழிபடு
5. தாய் தெய்வ வழிபாடு

## சமயம் சார் வழிபாடு

இறை, உயிர், உலகம் பற்றிய ஒரு நம்பிக்கை முறை. ஒவ்வொரு சமயமும் வழிபாட்டுத் தலங்களையும், சமயகுருமார்களையும், சமய சடங்குகளையும் கொண்டிருக்கின்றன.

1. சிவனியம்
2. முருகியம்
3. விநாயகம்
4. அம்மையம்
5. மாலியம்

## அகம் சார் வழிபாடு

இறைவனை மனதில் எண்ணி வழிபடும் முறை ஆகும். இறைவனை மனதில் இருத்தி வழிபாடு செய்வது அக வழிபாட்டின் இரண்டாம் நிலை. உயிரும், இறைவனும் ஒன்றாக ஆவது மூன்றாம் நிலை.

1. சித்தர் நெறி
2. சன்மார்க்கம்



# தமிழே இறைமொழி

# தமிழ்ச்சமயப் பண்

இறைமையில் தமிழ்மை தமிழ்மையில் இறைமை.
இரண்டறக் கலந்த இயற்கையில் ஒருமை..

இறைமையில் சார்பவர் தமிழ்மையை காண்பார்,
தமிழ்மையில் சார்பவர் இறைமையைக் காண்பார்...

இறைமையும் தமிழ்மையும் இசைந்த மறைமை.
இறைமயம் செய்வதால் இசைமொழி தமிழ்...

நிறைமொழி மாந்தர் மெய்கண்டு ஆணையில்,
இறைமொழி மறைமொழி தமிழென்றாரே...

இறைமொழி மறைமொழி தமிழென் றாரே... தமிழ்

இறைமையில் தமிழ்மை தமிழ்மையில் இறைமை,
இரண்டறக் கலந்த இயற்கையில் ஒருமை...

இறைமையில் சார்பவர் தமிழ்மையை காண்பார்,
தமிழ்மையில் சார்பவர் இறைமையைக் காண்பார்...

இறைமையும் தமிழ்மையும் இசைந்த மறைமை,
இறைமயம் செய்வதால் இறைமொழி தமிழே...

**மூலம்:**
இறைமையில் தமிழ்மை
தமிழ்மையில் இறைமை
**ஆக்கம்:** தமிழ்த்திரு. இர.திருச்செல்வனார்



வீழ்ந்துவிடா வீரம்! மண்டியிடா மானம்!

# நாம் தமிழர் கட்சி

செந்தமிழன் **சீமான்**

தலைமை ஒருங்கிணைப்பாளர்

பதிவு : 56/48/2013



நாள்: 26.08.2025

## மலேசியத் தமிழ்ச் சமயப் பேரவை ஐந்தாம் மாநாட்டுக்கு வாழ்த்துப் பா

அமிழ்தத் தமிழில் அனைவரும் போற்றும்
தமிழர் சமயம் தாங்கிய கருத்தை
எழுதிட முனைந்தேன் என்மன வித்தாய்
தொழுதனர் இயற்கையைத் தொன்மைத் தமிழர்
விழுதாய் விண்ணாய் விரிந்தது அறிவு!
வகுத்தனர் சான்றோர் வாழ்வியல் மெய்யியல்
புகுத்தினர் அறிவர் புறத்தில் அகத்தில்
சமய மேன்மைச் சமவெளி படர்ந்தது
இமயம் தாண்டியும் இவ்வுல கெங்கிலும்
தமிழர் சமயம் தழைத்து நிலைத்தது
வழிவழி வந்த வண்டமிழ் மாந்தர்
விழியாய் ஒளியாய் மலேசிய நாட்டில்
மரபியல் தவறா மாண்புறும் வகையில்
அரணாய்ச் சமய அருட்பணி புரிவதை
எவரும் மறுக்க இயலா தென்பேன்
தவறா தென்றும் தமிழில் வழிபடும்
ஐந்திணை வாழ்க்கை அமைத்த தமிழர்
ஐந்தாம் சமய அருள்மா நாட்டின்
அறத்தமிழ்ச் சமய அருமலர் சிறக்க
மறத்தமிழ் உணர்வில் மண்மிசை வாழ்த்தினேன்
இறைமொழித் தமிழின் ஏற்றம் ஓங்கவே
நிறைமொழி மாந்தர் நெஞ்சம் வாழ்த்தவே
என்றன் வாழ்த்தை இசைத்தமிழ்ப் பாவால்
தந்தேன் தமிழ்ச்சமயப் பேரவை
செந்தேன் மொழிபோல் செழித்து வளர்கவே!
தமிழ்ச்சமய மெய்யியல் தான்நனி மலர்கவே!
சமநிலை படைத்திடத் தமிழினம் எழுகவே!

அன்பின் மகிழ்வுடன்,

நாம் தமிழர் கட்சி எண்.8, மருத்துவமனைச் சாலை செந்தில் நகர், சென்னை-116.

சீமான்

தலைமை ஒருங்கிணைப்பாளர்

எண். 08, மருத்துவமனைச் சாலை, செந்தில் நகர், சின்னப்போரூர், வளசரவாக்கம், சென்னை–600116
தொடர்புக்கு : 044 - 43804084 / 9092529250 மின்னஞ்சல் முகவரி : naamtamizhar@gmail.com

# தமிழ்ச்சமய வாழ்த்துப் பா



**கவிஞர் அறிவன் அவர்கள்**
தைப்பிங், மலேசிய திருநாடு

இயற்கையைத் தெய்வமாய் எண்ணிடும் நெறியே
ஈன்றவர் முன்னோரை ஏற்றிடும் முறையே
இயல்புகள் சீராய் இயங்கிடச் செய்து
இலகுவாய் ஈகையைத் இயங்கிட வைக்கும்
உயர்ந்தவர் தாழ்ந்தவர் உணர்விலும் போக்கி
உயரிய அன்பினை உள்ளத்தில் ஊக்கும்
அயன்மையை அகற்றிடும் அத்தமிழ்ச் சமயம்
அறநெறி ஒன்றையே அன்பெனச் சொல்லும்

குறிஞ்சிக்குச் சேயோனைக் குறிப்பிடும் நெறியே
குறுந்தொடி மாயோனைக் கொண்டாடும் முறையே
வறநிலக் கொற்றவை வழிப்பாட்டின் மரபே
வருணனை நெய்தலில் வழங்கிய வாழ்வே
மருதத்தின் வேந்தனை விழவெடுத்த மாண்பே
வாழ்க்கையின் ஐந்திணை மறமெனப் போற்றும்
நெறிகளை காத்திடும் நயன்மிகு வழிகள்
நேரிய வழியினில் நேர்மையாய் வாழும்

சடங்கினில் மூழ்காது தடத்தினைக் கண்டு
சாதிகள் பேதங்கள் தடுத்திட நின்று
படமிலாக் கோயிலாய் பண்படும் உள்ளம்
பத்தியை அன்பினால் படைத்திட்ட செல்வம்
குடிசையின் வாசலில் கோலமாய் ஆகி
குணமெனும் ஆற்றினால் குறைகளைக் கழுவி
வடிவங்கள் பாராது வடிதமிழ்க் கண்டு
வையகம் போற்றிடும் வள்ளலாய் நிற்கும்

உடம்பினைக் கோயிலாய் உவந்தனர் தமிழர்
உள்ளுறை இறைவனை உணர்ந்தநல் அறிஞர்
உடன்படும் இடங்களில் உண்மையைத் தேடி
உருவத்தில் யாவையும் ஒன்றென உணர்ந்தார்
தடமனம் கொண்டிவர் தாங்கிட வாழ்வார்
தரணியில் என்றென்றும் தங்கிடும் நெறியால்
இடங்களில் அலையாது இயற்கையை நாடி
ஈங்கிவர் வாழ்கின்றார் ஏற்றத்தில் நாளும்

கோலங்கள் பலவாயின் கோராத சமயம்
குன்றிலும் ஆற்றிலும் குடியுறும் தெய்வம்
மூலங்கள் பலவாக முகிழ்த்திட வைத்து
மேதினில் ஒன்றிய மேன்மையின் சமயம்
காலங்கள் கடந்தும் கரையாத கொள்கை
கனித்தமிழ் மொழியோடு கலந்தநல் வாழ்க்கை
ஞாலங்கள் போற்றிடும் நற்றமிழர் நெறியே
நலமெலாம் பொங்கிடும் நம்தமிழ்ச் சமயம்.



# தமிழே இறைமொழி



# தலைமை செய்தி

## அருட்திரு கணேசன் சுப்புராயன்

தலைவர் மலேசிய தமிழ்ச் சமயப் பேரவை

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்..
மறுவாய் மலராய் மணியாய் ஒளியாய்..
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்க்..
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே..

**என்ற அருளாளர் அருணகிரிநாதரின் வரியில் தொடங்கி,**

வான்முகில் வாழாது பெய்க..
மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசு வெழ்க..
குறைவிலாது உயிர்கள் வாழ்க..

**என்ற அருளாளர் கச்சியப்பர் வரிகளுடன் வாழ்த்தி**

ஆதியாய் நடுவுமாகி அளவில்லா அளவுமாகிச்..
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி..
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி..
போதியா நிற்கும் தில்லை பொது நடம் போற்றி போற்றி..

**என்ற பெரிய புராணம் வரிகளை பாடி**

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்..
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு

**என்ற அருளாளர் திருமூலரை வணங்கி,**

இறை தந்த தமிழ் போற்றி,
தமிழ் தந்த மறை போற்றி
மறை தந்த அறம் போற்றி

தமிழால் தமிழரால் மெய்யியல் கண்டு, உலக இயற்கையையும் அறிவியலையும் உணர்ந்துஇ பகுத்து வகுத்து அமைத்த. தமிழ்ச்சமய நிலைகளின் வாழ்வியல் நெறிமுறைகள்இ வழிமுறைகள் மற்றும் தமிழர்களுக்கே உரிய உன்னத மரபுகளைக் கடைபிடித்துக் கற்பிக்கப்பட்டதை. வழி வழியே காத்தும் பற்றியும் அதன் தெளிவையும் அடையாளம் மீட்சியும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தார்மீகக் கடமையில் களப்பணியில் மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை களம் கண்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இது இன்று நேற்று தொடங்கப்பட்ட செய்தி அல்ல. நம் முன்னவர்கள் மூதாதையர்கள் அருளாளர்கள் என பல நூற்றாண்டுகள் தொன்று தொட்டு தொடர்ந்து வரும் தமிழரின் தனித்த தமிழ்ச்சமய நிலைகளின் இறை கோட்பாடு மீட்சியானதாகும்.

ஆயினும் இடையில் மழுங்கடிக்க வந்த அயலாரின் சூழ்ச்சியை முறியடிக்க. மீண்டும் புதிய முயற்சியாகஇ கடந்த நூற்றாண்டிலே இந்திய அரசு விடுதலைக்கு முன்பே ஆங்கிலேயர் ஆட்சியிலே 1940ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்கடல் தனித்தமிழ் இயக்கத் தந்தையும் பன்மொழியறிஞருமான மறைமலை அடிகளார் தலைமையில் தமிழ்ச்சமய மாநாடு நடந்திருப்பதை பலர் அறிந்திருக்கக் கூடும்.

அவ்வழியே அவர்களின் வாரிசுகளான நாங்கள, பல போராட்டங்களின் வழி இம்மண்ணில் இப்பேரவையை பதிவு செய்து. நம் முன்னவர்களின் அறிய முயற்சியின் வரிசையில் தொடர் முயற்சியாக அவர்கள் வழிகாட்டிய சரியான பாதையில்தான் பயணிக்கிறோம் என்பதை எங்களது செயல்பாடு காட்டுகின்றது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை எண்ணற்ற சந்திப்பு கூட்டங்கள் 2 அமர்வுகள் 4 மாநாட்டுகள் என மிகப்பெரிய கருத்தியல் நகர்வை நகர்த்தி வந்திருக்கிறோம்.

அண்மையில் அன்னை தமிழ் மண்ணில் நிகழ்ந்தஇ முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கு பேரவை சார்பாக ஆய்வு கட்டுரையும் தமிழ்ச்சமய இறையாண்மை பொதித்த திருமுருகன் திருவுருவ சிலையை தமிழ்நாடு அரசுக்கும் அறநிலை துறை பொறுப்பாளர்களில் ஒருவரான முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் அவர்களுக்கும் வழங்கி இருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழருக்கென்று ஒரு இறையியல் இருக்கிறது. அதற்கு ஒரு மெய்யியல் இருக்கிறது, அதற்கு ஒரு மரபியல் இருக்கிறது. அதற்கான ஒரு வாழ்வியல் இருக்கிறது. அதற்கான ஒரு வழிமுறைகள் இருக்கிறது, அதற்கான வரையறை இருக்கிறது. இவை அனைத்தையும் தாங்கி நிற்கிற இறையாண்மை எனும் கோட்பாடு இருக்கிறதுஇ அதை இனி மக்கள்மயமாக்குவதே தமிழ்ச்சமயப் பேரவையின் இந்த ஐந்தாவது மாநாட்டின் செயல்பாடாக நகர்கிறது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழருக்கே உரிய அறிவில் சிறந்தஇ இயற்கையில் இணைந்தஇ மெய்யறிவு பரந்த, இறைஞானம் நிறைந்தஇ தூய மாந்தநேயமும் ஆன்மநேயமும் அமைந்த தமிழ்ச்சமயத்தின் வழி நின்றுஇ பிறப்பு முதல் இறப்பு வரை அத்தனை வழிபாடும் சடங்கு முறைகளும் அன்னை தமிழ் மொழியிலே நிகழ்த்திஇ எங்கும் தமிழ்இ எதிலும் தமிழ்இ கருவறையிலும் தமிழ்இ தமிழே இறைமொழி என்பதை பறைசாற்றுவதோடு ”தமிழ்ச்சமய இறையாண்மை” எனும் அடிநாத கோட்பாடு விளக்கத்தை இம்மாநாடு உங்களுக்கு தரும் என்பதில் ஐயமில்லை.

நமது இனம் வீழ்ந்தது அந்நியர்களால் வீழ்த்தப்பட்டது சமயத்தில்தான். வீழ்ந்த இடத்தில் தான் மீண்டும் எழ வேண்டும்.

ஆகையால், இந்த வரலாற்று முயற்சியில் நம் மலேசிய தமிழர்களை ஒருங்கிணைத்து. தமக்கு பொருந்தாத தொடர்பு இல்லாத சமய மதங்களை பின்பற்றுபவர்களுக்கு சரியான இறைவழிபாட்டு வழிகாட்டுதலை உருவாக்குவும் தமிழருக்கே உரிய தமிழ்ச்சமய அடையாள மீட்சியை பறைசாற்றவும் மேலும. பேரவையின் நோக்கமாக. இனி வாழ்கின்றவர்களும் வாழப்போகிறவர்களும் நாம் தமிழர் என்பதை உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வேண்டும்.

தமிழர்களது இறையியல் தன்மையை வெளிப்படுத்திஇ அதன் தூய்மையை எங்கும் எதிலும் போற்றி புரக்க செய்வதோடு. தமது தனித்துயர்ந்த சமய நெறியை அடையாளம் கண்டு வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்.

எனவே, தமிழ்ச்சமய மெய்யியலை பரப்பஇ தமது தமிழ்ச்சமயப் பேரவை மூலம் நாம் எண்ணற்ற பல முன்னெடுப்புகளை செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப நம் தோள் மீது இருப்பதை நினைவுர்த்த, மெல்ல மெல்ல பெரும் பலத்துடன் நமது பேரவையை வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் நாம் அடுத்த கட்டத்திற்கு முன்னேற வேண்டும் என்பதையும் வலியுறுத்தி.

அந்த அரும்பெரும் பணியில் நம்மோடு களமாடுகிற அத்தனை அன்பு சொந்தங்களுக்கும் எனது வாழ்த்தும் நன்றியும் தெரிவித்து, இறுதிவரை உடனின்று இம்மாநாடு வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொண்டு.

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்..
நிலவுலாவிய நீர்மலி வேணியன்..
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்..
மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்..
**என்ற அருளாளர் சேக்கிழாரை வணங்கி,**

சிந்தை நிறைந்தினிதே செய்யும் தொழில் பெருக..
தந்தை அருகிருந்தே தாங்கும் அருள் போன்றே..
எந்த பதிஇறையே.! எம்மான் ஒளிவிளக்கே..
விந்தை வழிகாட்டி வெற்றி அளித்திடுவாய்..
**தமிழ்க்குயிலார் வரிகளுடன் நிறைவு செய்கிறேன்.**



# தமிழ்ச்சமய தொகுப்பு செய்தி


## தமிழ்த்திரு பாலமுருகன் வீராசாமி
மலேசிய திருநாடு


என் உயிருக்கினிய தாய்த்தமிழ் உறவுகளே..நம் முன்னோர்கள் விதைத்த தமிழ்ச்சமய மீட்சியை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏன் வந்தது.? மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை உருவாக வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? தமிழ்ச்சமய ஆய்வு, கருத்தரங்கம் மற்றும் மாநாடு என கூட்ட வேண்டிய தேவை ஏன் நமக்கு அவசியமானது? இதற்கு விடை காண்பதே இப்பதிவின் நோக்கம். நெறி மற்றும் வள்ளலாரின் சன்மார்க்கம் உட்பட தமிழால் தமிழர்களால் உலக இயற்கையும் அறிவியலையும் உணர்ந்து பகுத்து வகுத்து வழிபட்டு வந்தவர்கள் தமிழர்கள் நாம்.

உலகத்தின் மூத்த மொழி தமிழ்.! உலகத்தின் மூத்த மாந்தன் தமிழன்! உலகில் பெரும் வல்லரசை நிறுவி அகன்ற நிலப்பரப்பை ஆண்டவன்தமிழன்!
இமயம் முதல் குமரி வரை கங்கை தொடக்கம் கடாரம் வரை எட்டுத்திக்கிலும் வெற்றிக்கொடி நாட்டிப் புகழ் பரப்பியவ தமிழன்!இப்படிச் சுமார் 50,000 ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் தேசிய இனத்திற்கென்று ஒரு சமயம் இருந்திருக்காதா.? நமக்கென்று ஒரு மெய்யியல் கோட்பாடு இருந்திருக்காதா.? கி.மு 10,000 ஆண்டுகளுக்கு முன்பே குமரிநாட்டுத் தமிழ்மக்கள் மூவகை வாழ்வியல் நெறிகளைக் கொண்டிருந்தனர் என்கிறார் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்.

தமிழருகென்று தனித்த சமய நெறிகள் இருக்கின்றன. அதுவே தமிழர்களுக்கான தமிழ்ச்சமயம். இது என்ன புதியதாக இருக்கிறது என எண்ணுகிறீர்களா? ஆம், அதை மறுத்து மறக்கடித்து உன்னையும் என்னையும் மடைமாற்றி தமிழிறைச் சிந்தனைகளை தன்வசப்படுத்தியது தமிழருக்குத் தொடர்பில்லாத அயலாரின் பிறப்பின் அடிப்படையில் பேதத்தை கற்பிக்கும் நால்வகை வருணக் கோட்பாடு உள்ளடக்கிய ஒரு வரலாற்றுப் பிழை.

என் அன்பு சொந்தங்களே, அதை ஏற்பவர்களுக்கு எதிராக கருத்துக்களை மட்டும் நான் தெரிவிப்பதாக தயவு செய்து தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். நடுநிலை சிந்தனையோடு எது வரலாறு என்பதை தெரியப்படுத்த வேண்டியதே முகாமையான கடமையாகும்.அயலார் வழி இறக்குமதியான ரிக்வேதம் தோன்றுவதற்கு முன்னமே தமிழருக்கான முதற் தமிழ்ச்சங்கமானது 4440 ஆண்டும், இரண்டாம் தமிழ்ச் சங்கம் 3700 ஆண்டும் நடைபெற்றது என்று நக்கீரனாரின் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. அப்படியாயின் தமிழர்கள் நாம் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வரலாற்று பின்புலத்தைக் கொண்டவர்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்றைய காலகட்டத்தில் தமிழர்களின் வழிபாட்டு நெறிமுறைகளின் வளர்ச்சி என்ன.? மக்களின் அறிவு நிலைக்கு ஏற்ப முதல் தெய்வ வணக்கமான இயற்கை வழிபாடு, சூரிய வழிபாடு, மர வழிபாடு, முன்னோர்கள் வழிபாடான நடுகல் வழிபாடு, குலதெய்வ வழிபாடு, நாட்டார் வழிபாடு. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைக்கான இறையாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை வழிபாடு வரை நகர்ந்து, சமய மறுமலர்ச்சியாக சிவனியம், மாலியம், ஆசிவகம் உருவாகி கடவுள் பெருநெறியாக நேரிதின் உணர்ந்தோர் சித்தர் நெறி மற்றும் வள்ளலாரின் சன்மார்க்கம் உட்பட தமிழால் தமிழர்களால் உலக இயற்கையும் அறிவியலையும் உணர்ந்து பகுத்து வகுத்து வழிபட்டு வந்தவர்கள் தமிழர்கள் நாம்.

பின்னால் வந்த வரலாற்றுக்கேடாக, இடையில் கலந்த அயலாரின் பிறப்பின் அடிப்படையில் பேதத்தை கற்பிக்கும் நால்வகை வருணக் கோட்பாடனது மக்களிடையே எடுபடாத காரணத்தால், தமது பிற வழிமுறைகளை புகுத்தித் தமிழ்ச்சமய நிலைகளைக் கடத்தி, தமிழர்கள் எல்லாம் வெளியிலிருந்து வந்த வைதீகத்தினர், வைதீகத்தினர் எல்லாம் தமிழர்கள் என்ற வரலாற்றுப் பிழையை இழைத்து நம்மை நம்ப வைத்தது.

எந்தப் பண்டையத் தமிழ் நூல்களில் தமிழர்கள் அயலாரின் மதத்தைச் சார்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டு இருக்கிறது.? தமிழ் நிலத்தில் தோன்றிய 63 நாயன்மார்கள் 18 சித்தர்கள் 12 ஆழ்வார்கள் உட்பட அகத்தியர், திருமூலர், பட்டினத்தார். அருணகிரிநாதர், தாயுமானவர், இளங்கோவடிகள், ஔவை, வள்ளலார் வரையிலான நமது அருளாளர்கள் அனைவரும் தமிழ்ச்சமயத்தையும் பெருநெறியையும் தவிர எந்த இடத்தில் அயலாரின் மதத்தைப் போதித்தார்கள்?

என் அன்பு சொந்தங்களே, எனது அப்பா பெயர் வீராசாமி. நீ இராமசுவாமி என்று வைத்துக் கொள் என்று திணிப்பது எப்படி ஏற்க முடியாத மதிப்பிழப்போ, அப்படித்தான் நம் இனத்தின் அடையாளமும் சமயத்தின் அடையாளமும் அடுத்தவன் பெயரில் இருப்பதும் பெயரிடுவதும் என்பதை மறந்து விடாதீர்கள்?தமிழரின் தனித்த சமயத்தையும் இறை கோட்பாடுகளையும் மீட்பதற்கு பல நூற்றாண்டுகள் சான்றோர்கள் நம்மைக் கண்டித்தும் நமக்கு வழிகாட்டியும் உள்ளதை நாம் மறுக்க இயலாது. கடந்த நூற்றாண்டிலே இந்திய அரசு விடுதலைக்கு முன்பே ஆங்கிலேயர் ஆட்சியிலே 1940 ஆம் ஆண்டு தமிழ்ச்சமய மாநாடு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க்கடல் மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்றது என்பது நம் முன்னவர்களின் அரிய முயற்சியின் வழி நாம் சரியான பாதையில்தான் பயணிக்கிறோம் என்பதைக் காட்டுகின்றது.

மேலும் இந்நாள்வரை தாய்த்தமிழகத்திலும் சரி, புலம்பெயர்ந்த தமிழர்களிடத்திலும் சரி, தமிழ்ச்சமயம் என்ற சிந்தனையும் அதனைத் தொட்டு வாழ்வியல் செயல்முறைகளும் கூட்டங்களும் மாநாடுகளும் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழருக்கென தனித்து தமிழர் ஆட்சி அமைந்தால் தமிழ்ச்சமயம் தமிழகத்தில் மட்டுமல்ல உலகில் எத்திசையிலும் வாழும் தமிழருக்கும் உடனடியாக சரியான மாற்றத்தை வழங்கி, அடிமை நிலையிலிருந்து மீட்க முடியும்.

ஆனால், அக்காலம் வரை காத்திருக்க இயலாது, எனவேதான், தமிழிய ஆட்சி மலரும் முன்னமே மேல் குறிப்பிட்டது போல பலதரப்பினர் தங்கள் தமிழ்ச்சமய முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வரலாற்று முயற்சியில் நம் மலேசியத் திருநாட்டில் தமிழர்களை ஒருங்கிணைத்து சரியான இறைவழிபாட்டுப் பாதையை காட்டுவதே இம்மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் முதன்மை பணியாகும். பேரவையின் நோக்கமாக, இனி வாழ்கின்றவர்களும் வாழப் போகிறவர்களும் "நாம் தமிழர்" என்பதை உணர்ந்து பிறருக்கும் உணர்த்த வேண்டும். தமிழரின் இறையியல் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். அதன் தூய்மையை எங்கும் எதிலும் போற்றிப் புரக்க வேண்டும். தமிழரின் தனித்துயர்ந்த சமய நெறியைக் கண்டு காட்டி வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும்.

என் அன்பு சொந்தங்களே! தமிழர்களின் இறைவழிபாடு தமிழ்மொழியிலே செய்யப்பட்டது. தமிழருக்கான நான்மறை தமிழிலே இருந்தன என்பதற்கெல்லாம் சான்றுகள் ஏராளமாய் உள்ளன. ஏராளமாய் உள்ளதை எட்டிக் கூட பார்க்காத காரணத்தால் அந்நியரிடம் ஏளனமாய் ஆகிவிட்டோம்.

சான்றுகளுக்காக.."அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடு கென்றா தூமறை பாடும் வாயார்" எனத் தம்பிரான் தோழரை நோக்கி இறைவனே தமிழில் பாட பணித்தமை என்பதும், "செந்தமிழர், தெய்வமறை நாவர், செழு நன்கலை தெரிந்த அவரோடு அந்தம் இல் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரன் ஊர்" என்ற பாடலில், திருவீழிமிழலைக்குச் செல்கிறார் சம்பந்தர், அங்கு திருக்கோயிலில் செந்தமிழர்களே தமிழில் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள் என பாடுகிறார் என்பதும்,"ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள் ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து" என்ற பாடலில், தில்லை கோயிலில் தமிழ்த் துதிகளே ஒலித்ததாம்,"தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல முழவம் மொந்தை மல்குபாடல் செய்கை இடம் ஓவார்" என்ற பாடலில், எங்கெங்கே தமிழோசை கேட்கிறதோ அங்காங்கே அமர்ந்து விடுகிறான் இறைவன் என்று செய்தி தெரிவிக்கப்படுகிறது.

எனவே தமிழரின் வரலாற்றில் திருக்கோவில்கள் அனைத்திலும் தமிழில்தான் வழிபாடு நடைபெற்றது என்பது புலனாகிறது. "சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் மிதாசனியா திருந்தேன் நின்ற காலம்" சதாசிவ தத்துவத்தில் எழுந்தது முத்தமிழ் வேதம் என்று திருமூலர் கூறுகிறார். ஆதியிலே தமிழில் வேதம் இருந்தது. அது இடையில் மறைந்தது. அப்பழைய மறையைப் புதிய வடிவில் தமிழில் பாடி அருளினார்கள் என்பதை, "எதிர்கொளும் பதி தனில் எழுத் தருளினார் என்றும் புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசானார்" என்ற வரிகள் உணர்த்துகின்றன.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறியதோடு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறியவர்கள் தமிழர்கள் நாம். பல்வேறு தமிழ்ச்சமய நெறிகள் இருந்தாலும் அவற்றைப் பொறைகொண்டு அறஞ்சார்ந்து ஒருங்கிணைப்பதே தமிழினத்தின் நலன் ஆகும். சிவனியத்தில் திருஞானசம்பந்தர் "உள்ளங்கவர் கள்வன்" என்பது போல, திருமாலியத்தில் நம்மாழ்வார் "தாமரைக் கண்ணன் கள்வன்" என்கிறார், முறையில் வெவ்வேறாகினும் வீடுபெறுவது ஒன்றல்லவோ?

"பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த கணக்கறு நலத்தனன் அந்தமிலாதியம் பகவன்" என்கிறது திருவாய்மொழி, "அறிவினால் மிக்க அறுவகை சமயத்து அவ்வவர்க் காங்கே ஆரருள் புரிந்து" என்கிறது தேவாரம், ஆறு சமயத்தின் வழி ஒழுகியவர்கள் அந்நெறிகளின் முடிவாகச் செந்நெறியாகிய பெருநெறியை மேற்கொள்வர் என்று தெரிய வருகிறது. தமிழ்ச்சமயமானது முன்தொட்டு ஆறு சமயங்களும் அவற்றின் மேலான செந்நெறியும் கலந்து ஒரு பெருநெறியாய்த் திகழ்ந்து வருகின்றது.

ஆகவே அன்பு சொந்தங்களே, தமிழருக்குள் சமய ஒற்றுமை ஏற்படுமாயின் அது தமிழின ஒற்றுமைக்கு வழிவகுக்கும். தமிழின சீர்திருத்தத்திற்குச்சமயம் தடையாகாதென்ற கருத்து நமக்குள் பரவ தமிழ்ச்சமயம் என்ற இணைப்பு உறுதியாகி தமிழரால் பேணப்பட வேண்டும்.தமிழர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாபண்பாடு, சமயம், வாழ்வியல் கரணங்களைத் தமிழ்முறைப்படி தமிழிலேயே தமிழர்களை ஆட்கொண்ட அறம், அன்பு, பண்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அயலாரின் ஏற்றத்தாழ்வு, தீண்டாமை நால்வண்ண பூசல்கள் இல்லாமல் செய்வித்தல் வேண்டும். அதற்கான வழிகாட்டி நூல்களும் வழிகாட்டிகளூம் ஆட்களும் தமிழ்ச்சமயத்தில் உள்ளனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தமிழருக்குத் தீங்கு விளைவிக்கும் மாற்றானின் முறைகளைத் தேடித் தேடிக் கண்டறிந்து ஆட்கொள்ளும் தமிழர்கள் மனம் திருந்தி மெய்யான தமிழ்முறையையும் தேடித்தேடி ஆட்கொள்வது வரலாற்றுக்கடமையாகும்.

மேலும் தமிழ் கோவில்கள், தமிழ் இடுகாடு என இருந்தவை தற்போது தமக்கு தொடர்பில்லாத பெயர்களில் மடைமாறி மெல்ல மெல்ல நமது அடையாளம் அழிக்கப்படுவதிலிருந்து மீண்டு எழவேண்டிய காலத் தேவையாக தமிழ்ச்சமய மீட்சி, ஆய்வு, பேரவை, கருத்தரங்கு, மாநாடு என எம்மூதாதையர்களின் வரலாற்றுப் புரட்சி பயணங்கள் எங்களை நகர்த்துகிநன்றன. தமிழர்கள் தெளிந்து விட்டார்கள். தமிழியம் அறிந்து விட்டார்கள். இனி அவர்களை அறியாமலே வைத்திருக்கும் எண்ணம் ஒருபோதும் பலிக்காது. தமிழரின் தமிழ்ச்சமயம் நிலைபெற வேண்டுமாயின் தமிழ்மொழி பேணப்பட வேண்டும், தமிழ்மொழி நன்கு பேணப்படுவதற்கு அதனை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும், முன்னேற்றம் அடைவதற்கு தமிழரது பொருளாதார நிலை சிறக்க வேண்டும். அது சிறப்பதற்கு தமிழருட் செல்வந்தர்களாக இருப்பவர்களும் சொல்லாற்றல் செயலாற்றல் உடையவர்களும் தமிழினத்திற்குள் ஒருவருக்கொருவர்துணையாக இருத்தல் வேண்டும்.

ஆகவே உடன்பிறப்புகளே, தமிழர்களின் சமயம் நோக்கிய அணுகுமுறைகள், சிந்தனைகள், நடைமுறை போக்குகள், வரலாற்றுக் கூறுகள் அனைத்தும் தமிழ்ச்சமயம் என்ற வரையறைக்குள் அமைந்துள்ளன. தமிழ்ச்சமயம் என்பது மூன்று முகாமையான கூறுகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

1. தமிழால் ஆக்கம் பெற்றுள்ள அதன் வழிபாடுகள் தமிழையே மூலமாக கொள்ளுதல்.
2. தமிழர் மரபுக்கும் பண்பாட்டிற்கும் உள்ளடங்கிய நெறிமுறைகளைக் கடைபிடித்தல்.
3. தமிழர் கண்ட மெய்யியலையும் அவற்றின் நூல் மரபுகளையும் மேற்கொள்ளுதல்,

தமிழர்கள் இவ்வரையறைக்கு உட்பட்டுள்ள சமயங்களையும் அவற்றை ஒத்த மரபு நெறிகளையும் தமிழ்ச்சமயமாக ஏற்று. பற்றி. காத்து அடுத்த தமிழர் தலைமுறை பிள்ளைகளுக்கு பயிற்றுவிக்க வேண்டும் என உரிமையுடன் வலியுறுத்துகிறேன்.

மேலும் இவ்வரையறையின் ஆக்கமாக அனைத்துமாக இருக்கிற தமிழ்ச்சமய இறையாண்மை எனும் கோட்பாடான

1. தமிழே இறைமொழி
2. தமிழ்ச்சமயம் தமிழர்தம் தாய்ச்சமயம்,
3. தமிழ்ச்சமய இறையியல்- மரபு, சமயம், அகம்
4. தமிழ்ச்சமய நான்மறை-அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை அடிப்படையனது என்பதை நினைவுறுத்தி, எமது விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

தமிழ்ச்சமயம் ஏற்போம் தமிழ்ச்சமயம் காப்போம்

**ஆக்கம் : பாலமுருகன் வீராசாமி**
மாநாடு ஏற்பாட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர்.
மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை



# தமிழே இறைமொழி

# வாழ்த்துரை


| | |
|---|---|
| 1. ஐயா பெ.மணியரசன் | 19-20 |
| 2. இறைநெறி இமயவன் | 21 |
| 3. சிவபூசகர் சுந்தரம் | 22 |
| 4. முனைவர் தர்மலிங்கம் | 23 |
| 5. முனைவர் கலைமதி கலியபெருமாள் | 24-25 |
| 6. முனைவர் இரா.குமரன் வேலு | 26 |
| 7. முனைவர் மோகன் குமார் | 27 |
| 8. முனைவர் மனோன்மணி தேவி | 28 |
| 9. முனைவர் நிறைமலி மல்லிகா | 29 |
| 10. அருள்முனைவர் | 30 |



# வாழ்த்துரை

**தமிழ் இறைமையின் தனித்தன்மை வளர்க!**

**பெ. மணியரசன்**
தலைவர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்
ஒருங்கிணைப்பாளர், தெய்வத்தமிழ்ப் பேரவை
தமிழ் நாடு

மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் ஐந்தாம் மாநாடு தி.பி.2056 மடங்கல் 31 (16.09.2025) அன்று மலேசியாவில் அருள்மிகு பத்துமலை முருகன் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அம்மாநாடு சிறப்புற நடைபெற்று நல்ல விளைவுகளைத் தமிழ் இனத்திற்கு வழங்கிட நான் சார்ந்திருக்கும் தமிழ்த்தேசியப் பேரியக்கம் மற்றும் தெய்வத்தமிழ்ப் பேரவை சார்பில் நெஞ்சார வாழ்த்துகிறேன். அம்மாநாட்டில் பங்கேற்று உரையாற்ற எனக்கும் வாய்ப்பளித்துள்ள தமிழ்ச் சமயப் பேரவை பொறுப்பாளர்கட்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மொழி - இனம் தலைமைத் தாயகம் மூன்றுக்குமான பொதுச் சொல் தமிழ்! ”தமிழ்ச் சமயம்” என்ற பெயருக்குள் இவை உள்ளடக்கம்.

தமிழ்நாட்டில் தமிழர் ஆன்மிகத்திற்கான பாதிப்புகள கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கின. அயல் மொழி ஆதிக்க ஆன்மிகங்களிடமிருந்து தமிழர் ஆன்மிகத்தைத் தக்க வைக்கவும் மீட்கவும் ”தமிழைத்தான்” - நம் ஆன்மிகச் சான்றோர்கள் மெய்யியல் ஆயுதமாக ஏந்தினார்கள்.

”தமிழ் ஞான சம்பந்தர் என்று திருஞான சம்பந்தர் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். அப்பரடிகள் ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்” என்று கூறி, இறை ஒன்றாக இருந்தாலும் இனங்கள் இரண்டு என்று அடையாளம் காட்டினார். வெளியிலிருந்து வந்து தமிழர்களிடையே ஊடுருவி மனித நேயத்தை - மனித உரிமையை சீரழித்துக் கொண்டிருக்கும் வர்ண சாதி ஒடுக்குமுறைகளை பிளவுகளைச் சாடினார் அப்பர்! ”சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்தீர்?” என்று கேட்டார்.

தமிழின் முழுப்பொருளையும் உணர்ந்த திருமூலர் ”என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் - தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே” என்று அறிவித்தார்.

வள்ளலார் கூறியது போல் வாழையடி வாழையென வந்த அந்த திருக்கூட்டத் “தொடர்ச்சியாகத் தான் ”மலேசியத் தமிழ்ச் சமயப் பேரவை”யை நம் தமிழ்ப் பெருமக்கள் நடத்துகிறார்கள்.

துடிப்போடு செயல்பட்டு, அவர்கள் நடத்தும் ஐந்தாம் மாநாட்டிற்கு வாழ்த்துகள்! தமிழர்களிடையே சமநிலை ஒற்றுமையையும், கால மாற்றத்திற்கேற்ற அறிவு மற்றும் மனவளர்ச்சியையும் வளர்க்க இம்மாநாடு ஊக்கம் அளிக்க வாழ்த்துகிறேன்.



# தமிழே இறைமொழி



# வாழ்த்துரை

**இறைநெறி இமயவன்**
தெய்வத்தமிழ் தமிழ்ச்சமய ஓதுவார்
தமிழ் நாடு

தமிழ்ச்சமய மாநாடு இனிதே நடைபெற திருவருளை வேண்டுகின்றேன்!

மானுடத்தின் தாய்க்குடி தமிழ்க்குடி! உலக மொழிகளுக்கெல்லாம் தாய்.... தமிழ்த்தாய் ! மேலை நாடுகளில் தோன்றிய சமயங்களும் மெய்யியல் கோட்பாடுகளும் தமிழினத்திற்குத் விளங்கும். ஆனால் கீழை நாடுகளில் தோன்றிய சமயங்களும் மெய்யியல் கோட்பாடுகளும் இணைந்தே இருக்கும்.

தமிழர்களின் தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியம் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்து, அகம், புறம் என்று இரண்டாகப் பிரித்துக் கூறுகிறது. இறையியலைப் பேசுகின்றபோது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல்நூலாகும் (வேதம், மறை) என்றும் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்றும் கூறுகிறது.

தொல்காப்பியம் வாழ்க்கையின் உறுதிப் பொருட்கள் என்று உலகின் தமிழர்ஆதிமறைகளைஅறம், பொருள், இன்பம், வீடு என்று உணர்த்தும் அறத்தின் வழிநின்று பொருளீட்டி ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற இன்பம் துய்த்து வீடுபேற்றை அடைதல் என்று பொருளாகும். இதையொட்டியே ஔவையார் விளக்குகிறார்.

ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டல் பொருள்
எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து -
ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்து
இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு.

வேதம்-மறை என்பது இருவகைப்படும். ஒன்று பொருள்மறை! மற்றது புகழ்மறை! பொருள்மறை என்பது உலக நீதி! ஆதியில் இறைவன் கல்லால் மரத்தின் அடியில் வீற்றிருந்த பொருள் மறையை உலகுக்கு உணர்த்தி அருளினான் என்பது பழந்தமிழ் வழக்கு. காலவெள்ளத்தில் இறைவன் உரைத்த மறைகள் எல்லாம் அவன் திருவடியில் ஒடுங்க பின்பு இறைவன் அருளாளர்கல் உள்ளத்தில் எழுந்தருளி நீதி நூல்களாக இவ்வுலகுக்குத் தந்தருளினான். பிற்காலத்தில் அடியார்கள் இறைவன் மீது பாடியவை புகழ் மறைகளாகும். திருக்கோயில்கலில் அறம் உரைக்கும் பொருள் மறைகளும், சாத்திரங்களும் இறைவன் புகழ் பாடும் புகழ் மறைகலும் தோத்திரங்கள் ஓதப்பெறுதல் வேண்டும்.

ஆகவே, தமிழ்ப் பெருமக்கள் பழந்தமிழர் வழிநின்று தமிழ்ச் சமயம் காப்போம் என்று கூறி, தமிழ்ச் சமய மாநாடு இறையருள் துணைநின்று வெற்றிபெற வேண்டும் என வாழ்த்தி வணங்கி இன்புறுகின்றேன்



# வாழ்த்துரை

**ஐயா சிவபூசகர் இரா. சுந்தரம்**
தெய்வத் தொண்டர்
தலைவர், மலேசிய சுந்தர் சிவயோக ஆசிரமம்

தமிழ்ச்சமய விழுமியங்களைத் தக்காரைக் கொண்டு பரப்புரை செய்ய வேண்டியுள்ளது. "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" என்று சுந்தர மூர்த்தி நாயனார் அறுதியிட்டுச் சென்னதைப் போல இக்கால தமிழ்ச்சமய விழிப்புணர்வு தமினத்திற்கு தேவைப்படுகின்றனர்.

இவ்விதத்தில், பெருந்தகை தமிழறிஞர் பேராசிரியர் தமிழண்ணல் கூறிய தமிழ்ச்சமயம் ஒட்டிய ஒருசில கருத்திகளை உள்நோக்கி உய்த்துணர்வோம் வாரிர்!

- Ø தமிழ் போல் சிறந்த இனிய மொழி உலகில் இல்லை தமிழரைப் போல மானம் இழந்து, தன்னலம் தேடும் தாழ்வு மனப்பான்மையரும் உலகில் இல்லை. இதைப் போன்ற முரண்பாடு உலகிற் கான்பது அறிது.
- Ø எங்கள் கோயிலில் எங்கள் நன்கொடையால், உழைப்பால், பத்திமையால் உருவான கோயிலில் எங்கள் தாய்மொழியால் வழிபட உரிமை தருக எனக்கேட்பது குற்றமா? இதற்குச் சான்று காட்ட வேண்டுமா? அகல்வானின் கீழுள்ள எதுவும் இதை மறுத்தல் இயலாதே!
- Ø ஆகமங்கள் தமிழருடையன் தென்னாட்டில் மட்டுமே காணப்படுவன. இடைக்காலத்திலே தமிழாகமங்கள் அழிக்கப்பட்டு, வடமொழி மயமக்கப்பட்டன. ஆகமங்களுக்கும் வட மொழி வேததிற்கும் தொடர்பு கிடையாது. இவை முற்றிலும் வேறுபட்டவை. ஆகமவழிக் கோயில்கள் தமிழர்கள் மட்டுமே கட்டியவை் தமிழகத்தில் மட்டுமே காணப்படுபவை.
- Ø நாம் சமசுகிருத மொழிக்குப் பகைவர் அல்லர் அம்மொழியை வைத்து நம்மை அழுத்தாமல் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவே இவ்வளவு முயற்சிகளும். இது நாம் தற்காப்பு முயற்சியே. நாம் பார்ப்பனர்ளுக்குப் பகைவர்கள் அல்லர். அவர்கள் தான் கடந்த கால வரலாற்று உண்மைகளை அறிந்து, மனம் மாறித் திருந்த வேண்டும்.
- Ø அவர்கள் செந்தமிழுக்குத் துணையாகும் அந்தணர்கள் ஆக வேண்டும் பரிதிமாற் கலைஞர்கள் ஆக வேண்டும். பாரதிதாசன் போற்றிய மாகவிஞர் பாரதி ஆக வேண்டும். தமிழ்த்தாத்தா உவே.சா ஆக வேண்டும். பேரறிஞர் பி.டி சீனிவாசர் ஆக வேண்டும். அதற்கு மாறாகத் தடம் மாறித் தடுமாறக் கூடாது.

மேற்காணும் அறிஞர் பெருமகனார் பேராசிரியர் தமிழண்ணலார் கருத்துகளையே நாமும் முன்னெடுப்போம்.



# வாழ்த்துரை

திருமுறைச் செம்மல்
சைவ சித்தாந்த இரத்தினம்
**முனைவர் தர்மலிங்கம் நடராசனார்**

ஐந்தாம் தமிழ்ச்சமய மாநாட்டுக்கான வாழ்த்துச் செய்தி
எல்லா திசைகளிலும் சிறந்து விளங்கும் பெருமைகளை எல்லாம் தென்திசையில் வாழும் தமிழர்களின் திருநெறிய தமிழின் பெருமையே வெற்றி கொண்டு மேன்மை அடைய வேண்டும். மேல் உலகத்தையும் மற்ற உலகத்தையும் திருநெறிய தமிழால் இம்மண்ணுலகம் சிறப்படைந்து வெல்ல வேண்டும். அசைக்க முடியாத செழுந்தமிழ் வழக்கம் ஆகிய திருநெறிய தமிழ் வழக்கமே மற்ற மொழித்துறைகளின் வழக்கங்களை எல்லாம் வெல்ல வேண்டும். தமிழ் இசை அறிவும் திருநெறிய தமிழ்ச் சமய மெய்யறிவும் பெறும் நிலை பெருக வேண்டும். இவற்றிற்காகவே திருஞானசம்பந்தரைச் சிவபெருமான் இவ்வுலகில் தோன்றச் செய்தார் என்ற செய்தியை, ”திசையனைத்தின் பெருமைஎலாந் தென்றிசையே வென்றேற, மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல, அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல, இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக” என்று பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார்.

தாழ்ச்சி இல்லாத, செழுமை வாய்ந்த, தமிழ் மரபுகளே பிற மரபுகளை வென்று தனிச்சிறப்பெய்தவும் தமிழிசை அறிவு முழுமை பெறவும் தமிழ்ச்சமய மெய்யறிவு எங்கும் பரவி நிலவும் நிலை ஏற்படவும் திருநெறிய தமிழ்ச் சமயத்தின் மேன்மையைத் தமிழர் உணரவும் தெய்வச் சேக்கிழார் ஏற்படுத்திய முழக்கத்தை ஒவ்வொரு தமிழரும் உணர்தல் வேண்டும் என்ற அரிய நோக்கில் ஐந்தாம் தமிழ்ச்சமய மாநாடு, தமிழ்ச்சமய இறையாண்மை எனும் கருப்பொருளில் மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையினால் நடத்தப் பெறுவது போற்றத் தக்கது.

இறைவனை வழிபடுவதற்கும் தமிழ்ச்சமய உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கும் தமிழ்ச்சமய அடியார்களின் வரலாறுகளைக் கற்று அவற்றைப் பின்பற்றுவதற்கும் இறைவனால் அன்னைத் தமிழில் அளிக்கப் பெற்றத் தமிழ்ச் சமயக் களஞ்சியங்கள் எண்ணில் அடங்காதவை. வாழையடி வாழையாக வந்த தமிழ்ச் சமயத் திருக்கூட்டப் பரம்பரையோ தனித்தன்மை உடையது. இறைவனால் அருளப் பெற்றத் தமிழ்ச்சமயத்தைப் ஆழ்ந்து கற்பதும் அஃதை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவதும் ஒவ்வொரு தமிழ்ச்சமய அன்பரின் தலையாயக் கடமையாகும் என்பதை உணர்த்தவே இத்தகைய அரிய மாநாடு நடத்தப்பெறுகிறது.

இறைத்தமிழ் மந்திரங்களைக் கொண்டு வழிபாட்டினைச் செய்தல், கடவுள் மங்கலம், திருமணம், புதுமனைப் புகுவிழா, வளைக்காப்பு, காதணி விழா போன்றவற்றைத் தமிழர்களே முன்நின்று தமிழில் நடத்துதல், நடத்துவித்தல், தமிழ்ச் சமய அடியார்களின் அடியொற்றி நிற்றல், தமிழ்ச்சமய மீட்புக்கு உழைப்போருக்குத் தோள் கொடுத்தல் போன்ற எழுச்சியும் வீறுமே உண்மையான தமிழ்ச்சமய மாநாட்டின் வெற்றியாகும். அத்தகைய எழுச்சியையும் மீட்சியையும் இத்தமிழ்ச்சமய மாநாடு கொண்டுவர எல்லாம் வல்ல திருவருளை வாழ்த்தி வணங்குகின்றேன். திருச்சிற்றம்பலம்.



# வாழ்த்துரை

**பேராசிரியர்**
**கலைமதி கலியபெருமாள்**

தமிழ் மற்றும் புலம்பெயர்தமிழர் ஆய்வு நிறுவனர் தலைவர்
ராயல் சொசைட்டி ஆ∴ப் பயாலஜியின் உறுப்பினர் அமெரிக்கன் அகாடமி
ஆ∴ப் மைக்ரோபயாலஜியின் உறுப்பினர் முன்னாள் தலைமை ஆசிரியர், ஜர்னல் ஆ∴ப் மெடிக்கல் மைக்ரோபயாலஜி (மருத்துவ நுண்ணுயிரியல் மாதயிதழ்) மதிப்புமிகு பேராசிரியர், புளோரிடா உலகப் பல்கலைக்கழகம் விருந்தினர் பேராசிரியர், ஹார்வர்ட் மருத்துவ கல்லூரி.

***Professor Dr. Kalai Mathee Kaliaperumal***
***Founder and President, Tamil and Tamilar Diaspora Studies: Fellow of the Royal Society of Biology; Fellow of the American Academy of Microbiology: Former Editor-in-Chief, Journal of Medical Microbiology, Professor Emeritus, Florida International University; Visiting Professor, Harvard Medical School.***

வணக்கம். இந்தமாநாட்டு தொடர் ஆண்டுவிழா கொண்டாட்டத்திற்கு அல்ல மாறாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகால தமிழ்ப் பண்பாட்டின் ஆன்மிக வேர்களை மீண்டும் உணர்ந்து கொள்வதற்கும், அவற்றின் நிகரற்ற மதிப்பை உலகிற்கு உணர்த்துவதற்குமாகும். சங்க இலக்கியங்களில் வேரூன்றிய நமது தமிழ்ச்சமய தத்துவம், மாந்தனைக் கடந்து நிற்கும் இறைவனை உணரும் வழிமுறைகளின் கட்டமைப்பாக விளங்குகிறது. இந்த ஆழமான தத்துவம் வெறும் கொள்கையல்ல - இது வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளிலும் ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு படிநிலைகளிலும் நமது நடத்தையை வழிநடத்தும் உயிரோட்டமான கருதுகோளாகும். படம் பிடித்துக் காட்டுகிறார்.

இன்று தமிழ் சமுதாயம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால், இந்த அரிய தத்துவம் குறித்த உணர்வு இல்லாமையே. தமிழர்களின் முன்னோர்கள் கண்ட மெய்யியல், அவர்கள் வகுத்த நெறிமுறைகள், அவர்கள் உருவாக்கிய வழிபாட்டு மரபுகள்- இவை அனைத்தும் உலகளாவிய மதிப்புடையவை. ஆனால் இந்த உண்மையை போதுமான அளவில் உணராமல் இருக்கிறோம்.

சிவனியம், முருகியம், மாலியம், அம்மையியம் என்ற பெருஞ்சமய மரபுகள் தமிழகத்தில் மட்டுமல்ல, உலகெங்கும் பரவி வளர்ந்துள்ளன. ஐயனார், கண்ணகி, வீரன் போன்ற நாட்டார் தெய்வ வழிபாடுகள் நமது கிராமப்புற சமுதாயத்தின் ஆன்மிக அடிப்படையாக இன்றும் விளங்குகின்றன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் நடத்திய பத்தி மை நெறியும், அருட்பேரொளி வள்ளலார் மீண்டும் உணர்த்திய செந்தண்மை நெறியும் மனித குலத்திற்கே வழிகாட்டும் ஒளி தமிழ்ச்சமயம் மூன்று வலுவான அடிப்படைகளில் நிலைபெற்றுள்ளது:

1. முதலாவது, தமிழால் ஆக்கம் பெற்ற வழிபாட்டு முறைகள் - தாய்மொழியையே ஆன்மிக வெளிப்பாட்டின் ஊடகமாகக் கொண்டது. இது வெறும் மொழிப் பற்றல்ல; மாறாக, தமிழின் இனிய ஒலியிலேயே இறை அனுபவத்தின் முழுமையும் அடங்கியுள்ளது என்ற மெய்யியலாகும்.
2. இரண்டாவது, தமிழர்களின் மரபும் பண்பாடும் - இவை தமிழ்ச்சமய நெறிமுறைகளின் உயிர்நாடி தமிழர்களின் கலாச்சார அடையாளம் அவர்களது ஆன்மிக வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாதது.
3. மூன்றாவது, தமிழர் கண்ட மெய்யியலும் நூல் மரபுகளும்- திருக்குறள் முதல் திவ்யப் பிரபந்தம் வரை, தேவாரம் முதல் திருவாசகம் வரை நீண்டு கிடக்கும் இந்த இலக்கிய வெள்ளம் உலக இலக்கியத்தின் முக்கியமான பங்களிப்பு.

இந்த மூன்று தூண்களும் வலுவானவை. ஆனால் இந்த கட்டமைப்பு தற்போது ஒரு கருத்தாகவே இருக்கின்றது. இது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். இது தேவை என்ற ஒரு விழிப்புணர்வு தமிழர்களிடம் இருக்க வேண்டும். இல்லாவிடில் இது ஒரு கருத்தாகவே இருந்துவிடும். உலகளாவிய ஏற்றுக்கொள்ளுதலும் நிலைத்திருப்பும் சமுதாய விழிப்புணர்வையே அடிப்படையாகக் கொண்டது. தமிழ்ச்சமய மரபுகளின் தனித்துவத்தையும், அவற்றின் சமகால பொருத்தப்பாட்டையும், அவற்றின் உலகளாவிய முக்கியத்துவத்தையும் ஆழமாக உணர வேண்டும்.

இன்றைய உலகில் ஆன்மிக வறட்சி அதிகரித்து வருகிறது. பொருளாதார வளர்ச்சியும் தொழில்நுட்ப முன்னேற்றமும் மனித மனத்தின் அமைதியைத் தர முடியாமல் திகைத்து நிற்கின்றன. இந்நேரத்தில், தொல்தமிழர்கள் கண்ட இயற்கையோடு இசைந்த வழிபாட்டு நெறிகள், தமிழர்களின் நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள், சித்தர் மரபுகள்- இவை அனைத்தும் உலகின் கவனத்தைப் பெறத் தொடங்கியுள்ளன.

உங்களின் பொறுப்பு என்னவென்றால், இந்த அரிய பொக்கிசத்தை அடுத்த தலைமுறையினருக்கு முழுமையாகக் கொண்டு சேர்ப்பது. அதற்கு முதலில் தமிழ் சமுதாயமே இந்த மரபுகளின் ஆழத்தையும் அகலத்தையும் உணர வேண்டும். பின்னர் அந்த உணர்வை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த தொடர் மாநாடு அந்த உணர்வுணர்த்தலின் ஒரு கருவியாக விளங்க வேண்டும். உங்களின் கூட்டங்கள், உங்களின் ஆய்வுகள், உங்களின் வெளியீடுகள் இவை அனைத்தும் தமிழ்ச்சமயத்தின் மகத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் ஊடகங்களாக மாற வேண்டும்.

இன்றைய இந்த தொடர் மாநாடு ஆண்டுவிழா நாளில், உங்களின் உள்ளங்களில் ஒரு புதிய உணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தமிழ்ச்சமய மரபுகள் வெறும் கடந்த கால நினைவுகள் அல்ல - அவை எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்கள். அந்த உணர்வோடு, அந்த உறுதியோடு, உங்களின் பணியைத் தொடருங்கள். தமிழ்ச்சமயத்தின் ஒளி உலகெங்கும் பரவட்டும்! உங்களின் முயற்சிகள் வெற்றி பெறட்டும்!



# வாழ்த்துரை

**முனைவர் இரா.குமரன் வேலு**
*MEd., MSc., PhD* இலிங்கன் பல்கலைக்கழகம்,
கிளானா செயாகல்வியியல் ஆய்வாளர்

தமிழர் இறைமை - வாழ்த்துச் செய்திதான் காண்கின்ற இயற்கையில் இறைவனைக் காண்கின்ற மக்கள் தொகுதிதான் தமிழர் இனக்கூட்டம்அந்த இயற்கைதான் எல்லா உயினங்களுக்கும் பொதுவாக இருக்கிறது. அந்த இயற்கை பரந்து விரிந்திருக்கிறது. வீட்டில் பொருள்கள் இறைந்து கிடந்தால் ஆங்காங்கே பரவிக் கிடக்கிறது என்று பொருள். எங்கும் பரந்தும் விரிந்தும் கிடக்கின்ற இயற்கையின் வடிவே இறைமை. அதே இயற்கை உயிர்களின் வாழ்விடமாகத் திகழ்கிறது. உயிர்வாழ்வதற்கு இரையும் தருகிறது. அதனைப் பொதுப்பெயரிட்டு இறைவன் என்றனர் தமிழர். இறைவன் என்றால் எங்கும் பரந்து விரிந்து இறைந்து கிடப்பவன் என்று பொருள். அவனே உள்ளத்துள் பரவும்போது கடவுள் ஆகிறான் இயற்கையை வழிபட்ட தமிழர் பின்னர் மலையும் மலை சார்ந்த வனமும் இயற்கை அழகு மிளிர்ந்த பகுதி என்பதால் அந்தப் பகுதியின் இறையை முருகு என்றனர். அந்த இறைமைக்கு ஆண்பால் விகுதி வழங்கி முருகன் என்றனர். இயற்கை அழகாக இருப்பதால் அந்த இயற்கையின் தலைவனை முருகன் என அழைத்தனர் எனலாம். அவன் வேலொடு காக்கிறான் என்பதால் வேலன் என்றனர் தமிழர்.தொல்காப்பியம் “சேயோன் மேய மைவரை உலகம்“ மை- கருமை, வரை- மலை, கருமை படர்ந்த மலைப்பகுதிதான் சேயோன் எனும் இளமை அழகு மிகுந்த முருகன் உறையும் இடம். அந்தச் சேயோன் முதிர்ச்சி உற்று செம்மை அடையும் தருணத்தில் சிவமாக மிளிர்கிறான் என்பதை நம்மால் உய்த்துணர முடிகிறதுதமிழர் இறைமை இயற்கையை உய்த்துணர்வதில் இருந்தே தொடங்குகிறது.

அந்த இயற்கை நல்கிய பயனையும் காப்பையும் கொண்டே இறைமைக் கொள்கை உருவானது. அந்த இயற்கையையும் அதன் அத்தனை அங்கங்களையும் ஒரு பேரிறை படைத்தருளியது எனும் கொள்கையே ஒரு மூலப்பெருங்கடவுள் கொள்கைக்கு வித்திட்டது. எனினும் தமிழர்களின் ஆதிக்கடவுள் இயற்கையே. அந்த இயற்கையில் எல்லா உயிருக்கும் பங்கு இருக்கிறது. அந்த உயிர்கள் ஒன்று மற்றொன்றைச் சார்ந்து வாழும் தன்மையின. உயிர்நேயமும் இயற்கை நேயமும் தமிழர் இறைமைக் கொள்கையில் முதன்மை இடம் பெறுகின்றன. அதன் நீட்சிதான் கொல்லாமைக் கொள்கை.“யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் கணியன் பூங்குன்றனாரின் வரிகள் கூட உயிர் நேயத்தின் நீட்சிதான். அதனை மாந்த நேயம் என்கிறோம். இந்த உலகம் எல்லாரும் உரிமையோடு வாழும் இடம். இங்கு யாவரும் உறவுகளே என்பது கூட இயற்கை இறைமையின் குறியீடுதான்.

தமிழர் இறைமை என்பது ஆழமான ஆய்வுக்குரியது. அதனை எளிமையாகச் சொல்ல விழைந்தேன் அவ்வளவே. தமிழ்ச்சமயத்தினர் அனைவருக்கும் என்றன் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்



# வாழ்த்துரை

**முனைவர் மோகன் குமார் செல்லையா**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
ஆசிரியர் கல்விக்கழகம், ஈப்போ வளாகம்.

பேரன்புடையிர் வணக்கம், மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை தொடர்ந்து ஐந்தாம் ஆண்டாக நடத்தும் தமிழ்ச்சமய மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சி கொள்கின்றேன். இம்முறை "தமிழ்ச்சமய இறையாண்மை" எனும் கருப்பொருளில் மாநாட்டினை நடத்துவதும் மேலும் சிறப்பினைக் கூட்டுகின்றது.

தமிழ்ச்சமயம் என்பது தமிழருக்கு உரிய இறையாண்மையைக் கொண்டது என்பதை நற்றமிழர் உணர்தற்பாலது. மலேசிய திருநாட்டில் வாழும் பெருமைமிகு தமிழர்கள் தங்களின் தொன்மை தமிழர் வரலாற்றினையும், சமய வரலாற்றினையும் ஐயந்திரிபற ஆய்தறிவது உள்ளமை உன்னதத்தக்கன. உலகில் இருக்கும் சமயங்களுள் பேறுபெற்ற உயர்மெய்நிலையை அடைந்த சமயம் நமது சைவ சமயமும் அதனைத் தொடர்ந்து வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்க நெறியும் என்பது தமியேனின் பணிவான கருத்தாகும். பரம்பொருளான சிவனையும் சிவத்தையும் அருட்சோதி ஆண்டவரையும் உலக மாந்தர்களுக்கு வலியுறுத்திய செம்மாந்த நெறி நமது நெறியாகும். அதனாற்றான்தான் ”தென்னானுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்று முழங்கினர் தமிழர் தகைமேவிய நலஞ்சார் அருளாளர்கள் வகுத்தெடுத்த நெறி நமது சமயநெறிகளாலும். நால்வர் பெருமக்கள், 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், சந்தானக்குரவர்கள், சித்தர் பெருமக்கள் போன்றவர்கள் வளர்த்தெடுத்த நெறியாகும் நமது சமயம் என்பது நவில்தோறும் நயமாகும்.

மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை இதனைத் தமிழச்சமய இறையாண்மை எனும் பொருளில் முனைந்திருப்பது கழிபேரினையாகும். அவ்வம், பேரவையை மனம் நிறைந்து பாராட்டி மகிழ்ந்து கனிந்த வாழ்த்தினையும் கூறிக்கொள்வது கடமையாகும். இவர்கள் ஆற்றுவது நற்றொண்டு மட்டுமன்று, தமிழினம் மானம் காப்பாகும் என்பது தெள்ளிதின் புலனாகும். நம் மலேசியத் திருநாட்டில் நற்சமய முன்னெடுப்புத் தமிழர்களுக்கு ஒள்ளிய நெறியாகும். மேலும், இம்மாநாட்டில் திருப்பெருந்திரு சாத்தலிங்க அடிகளாரோடு, தமிழ்த்திரு பெ.மணியரசன் ஐயாவும், வரலாற்று நல்லாய்வறிஞர் தமிழ்த்திரு மன்னர் மன்னரும் இணைந்திருப்பது அளப்பெரும் பெருமையாகும். வாழிய தமிழர்இனம், வெல்க தமிழ்ச்சமயம்.

"அருட்பெருங்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"



# வாழ்த்துரை

**முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை**
இணைப்பேராசிரியர்,
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்.

மலேசியத் தமிழ்ச்சமயப் பேரவை மிகச் சிறப்பாக நடத்தும் ஐந்தாம் தமிழ்ச்சமய மாநாடு - 2025 பெருமைமிகு வகையில் நடைபெற, என் நெஞ்சார்ந்த வாழ்த்தினைப் பூக்களாய்த் தூவுகிறேன். உலகெங்கிலும் வாழும் தமிழர்களின் வாழ்வில் சமயமும், வழிபாடுகளும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. பன்னெடுங்காலமாகத் தமிழர்களின் கலை, இலக்கியம், வாழ்வியல் ஆகிய அனைத்தும் சமயத்தோடும், அதன் தத்துவங்களோடும் பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளன. இம்மாநாடு நமது சமய மரபுகளைப் பேணிக்காக்கவும், அதன் பெருமைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கவும் ஒரு நல்ல தளமாக அமையும் என்பது திண்ணம்.

இம்முறை, “தமிழ்ச்சமய இறையாண்மை” எனும் அருமையான கருப்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. “அன்பே சிவம்” என்ற திருமூலரின் கூற்றுத் தமிழ்ச் சமயத்தின் மையக் கருத்து. இறைவன்மீதும் சக உயிர்கள்மீதும் அன்பு செலுத்தி, பத்தி நெறியில் வழியில் இறைவனை அடையலாம் என்பதே மெய். பண்டைக்காலத் தமிழர்கள், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கைச் சத்திகளைத் தெய்வங்களாகப் போற்றினர். இது, இயற்கையைப் பேணிக்காப்பதன் அவசியத்தையும், மனிதன் இயற்கையோடு இசைந்து வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்ற திருமூலரின் திருவாக்கும், “யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனின் பொதுமைச் சிந்தனையும் நம் சமயத்தின் அடிப்படைச்சிந்தனை. அன்பை அடித்தளமாகவும், அறத்தை அதன் முகப்பாகவும் கொண்ட நமது மரபுகளை, இந்த மாநாட்டு விவாதங்கள் மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டில் கலந்துகொண்டு, தமிழ்ச்சமயத்தின் இறையாண்மை என்னும் தத்துவ முத்துக்களைக் கண்டெடுத்து, அடுத்த தலைமுறைக்குக் கடத்த வந்திருக்கும் சான்றோரையும், அறிஞர் பெருமக்களையும், தமிழ் நெஞ்சங்களையும் போற்றி வணங்குகிறேன்.

இம்மாநாடு, தமிழின் பெருமையையும், தமிழ்ச்சமயத்தின் சத்தியத்தையும் உலகெங்கும் பறைசாற்றட்டும்! நம் பண்பாட்டின் ஆணிவேராகத் திகழும் தமிழின் செம்மையும், சமயத்தின் மெய்யும் ஒரு சேரக் கலந்த நம் வாழ்வியலை மீண்டும் ஒருமுறை ஆய்ந்து, அதன் விழுமியங்களை உலகறியச்செய்ய ஒரு பொற்கால வாய்ப்பாக இத்தளம் அமையட்டும்!

இம்மாநாடு பெருவெற்றி பெற மீண்டும் ஒருமுறை என் உளங்கனிந்த வாழ்த்து உரித்தாகட்டும். நன்றி. வணக்கம்.



# வாழ்த்துரை

**முனைவர் நிறைமலி மல்லிகா**
தமிழ் வளர்ச்சிக் கழகம் நிர்வாகக் குழுவினர்

**தமிழ் வளர்ச்சிக் கழகம் வாழ்த்து மடல்**

எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே (நூற்பா எண்: 387)

அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த நெறியுடன் குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்" என்கிறது நன்னூல். இதன் பொருள் சொல்லையும் பொருளையும் மட்டும் அல்லாது அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் அவ்வாறே பின்பற்றுவதும் மரபே. "பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு". ஒரு காலத்தில் செய்யப்படுகின்ற செயல்களில் உண்மையும் நன்மையும் இருப்பின் அவை பின்வரும் தலைமுறையினரால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன. இவையே பின்னாளில் மரபாக நிலைத்துவிடுகின்றன. பழைமையைப் பேணுவதும் முன்னோர் வழியைப் பொன்னே போல் போற்றுவதும் மரபின் முக்கியக் கூறுகள் ஆகும். ஊர்தோறும் நாடுதோறும் மக்களினம் வாழும் இடந்தோறும் இம்மரபுகள் நீக்கமற நிறைந்துள்ளன.

மரபு என்ற சொல் இன்று மரபியல், மரபினம், மரபுக் கூறு, மரபுக் கலை, மரபுத் தொடர், மரபு நோய், மரபணு என்று பல்வேறு துறைகளில் பயன்பட்டு வருவதை நீங்கள் அறியலாம். இதில் பண்பாட்டுடன் சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், பழக்க வழக்கங்கள், ஒவ்வொரு இனத்திற்கும் முன்னோர்களிடமிருந்து தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது என்றாலும் கால மாற்றத்தாலும் பிற கரணியங்களாலும் தமிழர்கள் தங்கள் அடையாளத்தையும் மரபையும் காத்துக் கடத்தி வருவது பெரிய சவாலாக விளங்குகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வியல் புறம் தள்ளப்பட்டுத் தமிழர் மரபு போலப் பிற வாழ்வியல் கூறுகளைத் தமிழர்கள் தங்கள் சிந்தையிலும் செயலிலும் தற்போது ஊடுருவி நிற்கின்றது.

மலையக மண்ணில் தமிழர்கள் தங்களின் தொடக்கக் கால இயற்கை வாழ்வியல் முறைகளைத் தெளிவுடன் பின்பற்றிப் பேணிக் காத்து அறநெறியுடன் வாழ, தொடர்ந்து அரும்பணியைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையினருக்கு மனமகிழ் வாழ்த்துகள்.

மொழி, மரபு, பண்பாடு, சமயம், அறம் ஆகியவற்றை ஒருங்கே பேணும் **மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் தமிழர் நலன் காக்கும் இத்தொண்டு** மேன்மேலும் செழித்தோங்கி வெற்றியடையப் போற்றி வாழ்த்துகிறோம்.



# வாழ்த்துரை

**தமிழ்த்திரு அருள் முனைவனார்**
தலைவர்
மலேசிய தமிழ்நெறி வாழ்வியல் இயக்கம்

அமுதே தமிழே நீ வாழ்க என் ஆவியில் கலந்து நாவினிலே தவழும் அமுதே தமிழே நீ வாழ்க!

மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை ஏற்பாட்டில் நடைபெற விருக்கின்ற 5ம் தமிழ்ச்சமய மாநாடுத் தேனில் ஊறிய பலாவைப் போல் இனிமையாகவும் சிறப்பாகவும் நடைபெற மலேசிய தமிழ்நெறி வாழ்வியல் இயக்கத்தின் சார்பில் எங்களது மநமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தச் சமய மாநாட்டில் பங்கேற்கும் தமிழ்நாட்டு அறிஞர்கள் மற்றும் மலேசிய அறிஞர்களின் வாழ்த்துகளும் பங்களிப்பும் தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பெரும் பயனாக அமையும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. தமிழரின் பெருமையும் தனித்தன்மையும் வாய்ந்த வாழ்வியல் பண்பாட்டுக் கூறுளை எடுத்து இயம்புகின்ற இம்மாநாடு அறிவு வெளிச்சத்தையும் மறுமார்ச்சி விதைகளையும் மக்கள் மனங்களில் தூவும் என்பது திண்ணம். “தப்பு விதைகளே பாறையை உடைத்திடும்போது தரணி ஆண்ட தமிழனே முளைத்திடு! முளைக்கின்ற ஓசையில் அடிமை விலங்குகள் உடையட்டும்”, இம்மாநாடு எல்லா வகையிலும் வெற்றிபெற மனமார வாழ்த்துகிறேம்!

“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாது உஞற்று பவர்” என்று வான்புகழ் வள்ளுவனின் குறட்பா நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுகிறேன். வாழ்க வளத்துடன்! வாழ்க வையகம்!



## தமிழே இறைமொழி

# சிறப்புக் கட்டுரைகள்


1. சாந்தலிங்க மருதாசல அடிகளார்–இறையியல் 32
2. சக்திவேல் முருகனார் – நான்மறை 35
3. திருச்செல்வனார் – இறைமை 41
4. ஆய்வுச்செம்மல் இரா. மன்னர் மன்னன்
   தமிழர் சமய வரலாற்றுப் பார்வை 44
5. முனைவர் இளஞ்சோதி
   பேரவையின் காலச் சுவடு 56
6. முனைவர் திலகவதி
   தமிழ்ச்சமயத் தொன்மை 59
7. திருசுடர் நம்பி – செந்நெறி 62
8. வழக்கறிஞர் பாலமுரளி
   அடுத்த கட்ட வளர்ச்சியின் அச்சாணி 68
9. தமிழ்த்திரு த.செ. இளங்குமரன்
   பண்டை தொட்டு வளர்ந்த தமிழ்ச்சமயம் 74
10. தமிழ்த்திரு மோகனராசன் மோகன் குமார்
   தகவல் தொழில்நுட்ப உலகில் தமிழ்ச்சமயம் 79



# இறையியல்

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட
சந்தானம் கோவை பேரூராதீனத்தின்
இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள் கயிலைப்
புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல
அடிகளார் அவர்கள்
கோவை, தமிழ்நாடு

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்" என்று தமிழ் எனும் சொல்லுக்கு விளக்கம் தருகிறது பிங்கல நிகண்டு. சிறப்புமிக்க நம் தமிழ்மொழி ஆதியும் அந்தமும் இல்லாப் பெருமையைத் தன்னகத்தே நிலையாகக் கொண்டுள்ள மொழியாகும். இச்சிறப்புமிக்க நம் தமிழ்மொழியில் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானதாகவும் முதல்நூலாகவும் விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியர் இருநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் என்ப, என்மனார், இயல்புணர்ந்தோர், என்றிசினோர் போன்ற தான் பயின்ற நூல்களை எழுதியோரையும் தனக்குக் கற்றுக் கொடுத்தவர்களையும் குறிப்பிடுகிறார். அவ்வகையில் தொல்காப்பியம் காட்டும் இறையாண்மையை நம் தமிழ்ச்சமயத்தின் நிலங்கள் குறித்த பாகுபாட்டினைக் கூறும் தொல்காப்பியர்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணம் உலகமும்"** எனக் குறிப்பிடுகிறார். முல்லைக்குத் திருமால், குறிஞ்சிக்கு முருகப்பெருமான், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் எனக் குறிப்பிடுகிறார். இதில் சிவபெருமானின் சேய் எனப்படுதலால் முருகப்பெருமான் சேய் எனப்பட்டார். அவ்வகையில் இத்தய்வ வழிபாடுகள் அந்தந்த நிலங்களில் பெரும்பான்மையாக அமைந்தாலும் அனைத்து நிலங்களிலும் காணப்பட்ட வழிபாடாக சிவ வழிபாடு இருந்ததை கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய புறத்துறைகள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் கொற்றவை வழிபாடு குறித்தும் நடுகல் வழிபாடு குறித்தும் தொல்காப்பியப் புறத்திணையியல் பேசுவது குறிப்பிடத்தக்கது.

**சங்க இலங்கியங்களில்**

தொல்காப்பியம் இத்தகைய வழிபாட்டு மரபுகளையும் வழிபாட்டுக் கூறுகளையும் சொன்னாலும் தொல்காப்பியத்தை அடுத்து வந்த சங்க இலக்கியங்கள் ஆல்கெழு கடவுள் (திருமுருகாற்றுப்படை - 256), ஆலமர் கடவுள் (புறநானூறு - 198), மணிமிடற்று ஒருவன்(புறநானூறு - 123),காரியுண்டிக் கடவுள் (மலைபடுகடாம் 83) எனப் பல்வேறு இடங்களில் சிவ வடிவங்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருப்பது பழங்காலந்தொட்டுத் தமிழ்ச்சமூகம் தோன்றிய காலந்தொட்டு சிவபெருமான் வழிபாடு இருந்து வருவதைத் தெளிவுபடுத்துகிறது.

**மந்திரங்களும் வேள்வியும்**

வழிபாடுகளைச் செம்மையாக்கத் தோற்றுவிக்கப்பட்டவை வழிபாட்டு நெறிகள். இத்தகைய நெறிகளுள் தமிழ்ச்சமய வழிபாட்டு நெறிக்கு அடிப்படையாக அமைவன அருளாளர்கள் அருளிச் செய்த அருட்பாடல்களாகிய மந்திரங்கள்,

> **“நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப” (தொல் - பொருள்)**

என்பது தொல்காப்பியம். இதையொட்டித் திருவள்ளுவரும்

> **“நிறமொழி மாந்தர் பெருமை நிலத்து**
> **மறைமொழி காட்டி விடும்”** (குறள் - 28) என்கிறார்.

அவ்வகையில் இத்தகைய மந்திரங்களாகத் திகழ்வன அருட்பதிகங்கள். அவற்றை ஓதி வழிபாடுகளை மேற்கொண்டதை, “மந்திர மரபின் தெய்வம் பேணி” (பதிற்றுப்பத்து) எனவரும் பாடலின் மூலம் அறியமுடிகிறது.

மேலும் வாழ்வியல், அருளியல் வழிபாடுகளில் வேள்வி செய்து வழிபடும் முறைமை தமிழர்களுடையது அல்ல என்ற ஒரு கருத்து இன்றைய சூழலில் நிலவி வருகிறது. ஆனால் நமது இலக்கியங்களில் தொன்மையான இலக்கியமான திருமுருகாற்றுப்படை, ”வேள்வி முற்றிய வென்றடு கொற்றம்”

(திருமுருகாற்றுப்படை 156) என்று கூறுவதிலிருந்து வேள்வி செய்து வழிபாடுகளை மேற்கொள்வது தமிழ்ச்சமய நெறியாக இருந்ததை அறியமுடிகிறது.

**முன்னோர் வழிபாடு**

முன்னோர்ரை நினைந்து வழிபடுதல் என்பது தமிழ்ச்சமயத்தில் தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கமாகும். இதைப் புறநானூறு, ”களிறு எறிந்து வீழ்ந்தெனக் கல்லே பரவின்” (புறம் 335) என்று நடுகல் வழிபாடாகக் குறிக்கிறது. திருவள்ளுவரும் தென்புலத்தார் வழிபாடு என்று இதைக் குறிக்கிறார். இன்று தை, ஆடி, புரட்டாசி ஆதிய திங்கள்களில் வரும் நிறைநிலா நாளன்று முன்னோர்கள் வழிபாட்டை மேற்கொள்வதைத் தமிழர்கள் தங்கள் கடமையாகக் கொண்டுள்ளனர்.

**இயற்கை வழிபாடு**

இயற்கையையும் இறையாகப் போற்றி வணங்கியவர்கள் தமிழர்கள். இதைப் புறநானூறு, ”கடவுள் ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம் நெருநல் உண்டனம் (புறம் - 199)” என்ற பாடலடிகளின் வழி கடவுள் உறைகின்ற ஆலமரம் என்று குறிப்பிடுகிறது. மேலும் குறுந்தொகையின் 87ஆம் பாடல், ”மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்” என்று குறிப்பிடுகிறது. கடம்ப மரத்தில் வாழும் தலைவனின் முன்னிலையில் தலைவன் பேசியதாக இப்பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு இயற்கையைப் போற்றி வழிபட்டமையையும் அறியமுடிகிறது.

இவ்வாறாக பழந்தமிழ் மக்கள் இயற்கை, முன்னோர், சிவபெருமான், திருமால், முருகப்பெருமான், காடுகிழாள், இந்திரன், சூரர மகளிர், அணங்கு, கானமர் செல்வி எனப் பல நிலைகளில் இறைவனை வணங்கியுள்ளதை தமிழ்ச்சமய இறையாண்மையாகக் காணமுடிகிறது. அவ்வகையில் இயற்கை, மனிதன்,தெய்வம் என்ற மூன்று நிலைகளில் தமிழர்தம் இறையாண்மை அமைந்துள்ளதையும் அவை இன்றுவரை தொடர்ந்து வருவதையும் அறியமுடிகிறது.

உ
முருகா



செந்தமிழ் வேள்விச் சதுரர், முதுமுனைவர்
மு.பெ.சத்தியவேல் முருகனார்
B.E., M.A., M.Phil., D.D., D.Lit., (USA)
12, முருகா அடுக்ககம், 11வது தெரு, நியூகாலனி,
ஆதம்பாக்கம், சென்னை-600 088.
கைபேசி : 91-9444042770 மின்னஞ்சல் : mpsvelmurugan@gmail.com

# தமிழ்ச்சமய நான்மறைகள்
# அறம், பொருள், இன்பம், வீடு

மலேசிய தமிழ்ச் சமயப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற இருக்கும் ஐந்தாம் தமிழ்ச் சமய மாநாட்டில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் தமிழ்ச் சமய நான்மறை பற்றிய சிந்தனைகளை சிந்தனைச் செல்வர்களாகிய தமிழ்ச் சமயப் பேரவை அன்பர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நான்மறையா, தமிழிலா என்று திகைப்புடன் கேட்கிற தமிழ் அன்பர்களே அதிகம். அதோடு நில்லாது நான்மறை என்றாலே அவை ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்று பேசப்படுவதைத் தானே காலம் காலமாகக் கேட்டு வருகிறோம். எத்தனையோ பிற்கால இலக்கியங்களும், பிற்காலத் தமிழ் அறிஞர்களும் அப்படித் தானே சொல்கிறார்கள். இதென்ன தமிழ்ச் சமயம் என்கிறீர்கள், அதன் நான்மறைகள் ரிக், யசுர், சாமம், அதர்வணம் ஆகியவை இல்லாமல் புதிதாக அறம், பொருள், இன்பம்,வீடு என்று சொல்லி கொண்டு கிளம்பி இருக்கிறார்களே என்று ஏற இறங்கப் பார்க்கிற தமிழர்களை என்ன சொல்ல? விதி என்று சொல்வதா அல்லது சதி என்று சொல்வதா? சதி என்று சொல்வதே மிகச் சரியாகப் பொருந்தும். சற்று மூளையின் ஆய்வைத் தட்டிவிட்டால் அதுவே தெளிவு படுத்திவிடும். ஆனால் அதற்கு இன்றியமையாத தேவை சரியாக வேலை செய்கிற மூளை!

இப்பொழுது வாங்க! எனதருமைத் தமிழ்ச் சகோதரர்களே ! நம்மை நம்பி இறைவன் அளித்துள்ள மூளையின் செல்களை முடுக்கி வேலை செய்யவிட்டு அதனுள் அறிவு மின்சாரத்தை அகலப் பரப்புங்கள்! ரிக் என்ற சொல் தமிழ்ச் சொல்லா? அதை விடுங்க! யசுர்? அது தான் தமிழ்ச் சொல்லா? விட்டுத் தொலையுங்கள்! சாமம் தமிழ்ச் சொல்லா? போய்விட்டுப் போகட்டும்! அதர்வணம் என்றாவது ஒரு தமிழ்ச் சொல் உண்டா? எந்தத் தமிழ் அகராதியிலாவது, தமிழ் நிகண்டிலாவது, அல்லது பழந்தமிழ் இலக்கியத்திலாவது இந்த சொற்கள் தலைகாட்டி இருக்கிறதா! நான் சொல்வது பழந்தமிழ் இலக்கியத்தை! பின்னால் வந்த தமிழர்களின் நூல்களை விடுங்கள்! அவர்கள் தான் இந்த குளறுபடிக்கே காரணமானவர்கள் ஆயிற்றே!

வேதங்கள் நான்கு என்று அடையாளம் காட்டப்படுகிற இந்த சொற்கள் நான்கில் ஒன்றாவது தமிழா? சொல்லுப்பா தமிழா? அப்புறம் எப்படி தமிழே அல்லாத இந்த நானலயும் தமிழருடைய வேதம் என்று சொல்லப் போயிற்று? சொந்தமாக யோசிக்க வேண்டாமா? தமிழே அல்லாத ஒன்று எப்படி தமிழனுக்கு வேதமாகும்? அப்புறம் ஏன் அந்த வடநாலை உடல் நூலாய் தோளில் போட்டுட்டு தமிழர்கள் அலைகிறார்கள் என்பது தெரியவில்லை!

சரி! அப்படியாவது வடவேதங்கள் நான்கா என்றால் அதுவும் உண்மை இல்லை. வடமொழி அகராதி நூலான அமரகோசம் வட ”வேதம்த்ரயே” என்று வடமொழி வேதங்கள் மொத்தம் மூன்று தான் என்று ஆணித்தரமாகச் சொல்கிறது. அதற்கும் மேலே, ரிக் வேதம், யசுர் வேதம் மற்றும் சாம வேதம் ஆகிய மூன்று வேதங்களிலும் கூட வேதங்கள் மொத்தம் மூன்று என்று தான் பல இடங்களில் வருகிறது.

அப்புறம் எப்படி வட வேதம் நான்மறை ஆகும்? சமஸ்கிருதம் என்ற சொல்லுக்கு நன்றாகச் செய்யப்பட்டது என்று பொருள். அம்மொழி அகராதியே சொல்லுகிறது! அப்படியானால் சமஸ்கிருதம் உருவாவதற்கு முன்பே வேறு பல மொழிகள் இருந்திருக்கின்றன் அவற்றைப் பார்த்து அந்தந்த மொழிகளில் இருந்து குறிப்பாக அதற்கு முன்னமே புழக்கத்தில் இருந்த தமிழ், பிராகிருதம், பார்சி போன்ற மொழிகளில் இருந்து நல்லனவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு நன்றாகச் செய்யப்பட்ட மொழி சமஸ்கிருதம் என்று அந்தச் சொல்லே வெளிப்படுத்துகிறது. குறைந்தளவில் சமஸ்கிருதம் உலக முதல் மொழி அல்ல என்பதை அதன் பெயரே சான்று சொல்லிக்கொண்டு இருக்கிறது.

அப்படித் தான் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு வேதங்கள் நான்கு என்பதைப் பார்த்து தன்மொழியிலும் வேதம் நான்கு எனக் காட்ட மிகப் பிற்காலத்து கிளம்பிய, கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று அறிஞர்களாலும் நிறுவப்பட்டிருக்கிற அதர்வண வேதத்தைச் சேர்த்து வடவேதம் நான்கு என்று தமிழைப் பார்த்து அதற்கு இணைப்படுத்தி ஒரு கருத்தைத் தூவிப் பரப்பினார்கள்.

ஆனால் முன்னால் வந்த அதர்வண வேதத்திலேயே முதல் நான்கு செய்யுட் கண்ணிகள் ஏனைய மூன்று வேதங்களோடு இதையும் தயவு செய்து சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சுகின்றன என்பதை அதைப் படித்தாலே குட்டு வெளிப்படுகிறதே! மற்ற மூன்று வேதங்களும், அதர்வணத்தைத் தாந்திரீகம் என்று இழிவுப்படுத்தி ஒதுக்குகின்றனவே! அதனால் தானே ஏனைய மூன்று வேதங்களுக்கு உபகர்மா அதாவது பூணூல் மாற்றும் ஆவணி அவிட்டம் அதர்வணத்தில் சேர்த்தி இல்லையே! அதர்வண வேதத்தவர்களுக்கு அந்தச் சடங்கு ஒரு மாதம் தள்ளி அல்லவா இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது . இதனால் நான்மறை என்றால் அது ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்பது அக்மார்க் பொய் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறதே!

எனவே, நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற தமிழ் வேதங்களே என்பது வெட்ட வெளிச்சம் ஆயிற்றே! இந்த தமிழ் நான்கு கோட்பாடுகளே வடவர் தம் வேதங்களில் அல்லாமல், வேத வியாக்கியான நூல்களில் (பிற்காலத்தவை) தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று அப்படியே தழுவி, நான்மறை என்பன அவையே, என்றும் அவை தம் வேதத்தில் இல்லாவிட்டாலும், தமிழில் இருக்கின்றவை தாம் என்றாலும் அவையே உண்மையான புருஷார்த்தங்கள் என்று தாமே அவற்றைக் கண்டு பிடித்தது போல ஒரு புரட்டைச் செய்கிறார்களே! அவர்கள் வேலையே புரட்டு வேலைகள் தாம் என்று பி.டி. சீனிவாச ஐயங்கார் மற்றும் சூரியநாராயண சாஸ்திரிகள் (பர்திமாற் கலைஞர்) போன்ற அவாளே விதம்விதமாக அவர்களது நூல்களிலே எடுத்துக் காட்டி இருக்கிறார்கள்! எதையும் படிப்பது இல்லை என்ற அறியாமை ஒரு புறம், ஆனாலும் நான்மறை என்றால் அவை ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்பனவே என்று சில தமிழர்களும், தம்மை அடையாளம் படுத்திக் கொண்டு அலைவதை என்ன சொல்ல!

இதுவரை நான்மறை என்பன வடவேதங்கள் நான்கைக் குறிக்கவே வாய்ப்பில்லை என்பதை மறுக்க ஒண்ணா சான்றுகளைக் காட்டி நிறுவினோம். அடுத்து அறம், பொருள், இன்பம், வீடு என்ற உண்மைத் தமிழ் நான்மறைகளை பழந்தமிழ் நூல்களில் வழியே சான்றுகாட்டி நிறுவலாம். ஏதாவது ஒன்றை தர்க்க அளவை நூல் வழி நிறுவ வேண்டும் என்றால் அப்படித்தான் முதலில் எதிர்ப்பக்கக் கருத்துக்களை ”அவாள் மொழியில்” த்வம்சம் செய்து விட்டு, அதனை ஒட்டி தன்பக்க சான்றுகளைக் காட்டி உறுதி செய்ய வேண்டும் என்பது பெரியோர் காட்டிய மரபு.

இந்து மாக்கடல் உருவாவதற்கு முன் இருந்த தமிழ் நிலமான குமரிக்கண்டத்தில் இருந்த முதல் தமிழ்ச் சங்கப் புலவர்கள் பாடிய பாடல்கள் அடங்கிய பழந்தமிழ் தொகை நூலாகிய புறநானூறு 166 ஆம் பாடலில் சிவபெருமான் தான் முதன் முதலில் தமிழ் நான்மறையை வெளிப்படுத்தினான் என்று வருகிறது.

> “நன்றாய்ந்த நீள்நிமிர் சடை
> முதுமுதல்வன் வாய் போகா
> தொன்று புரிந்த ஈரிரண்டின்
> ஆறுணர்ந்த ஒருமுதுநூல்”

"தொன்று புரிந்து ஈரிரண்டு மிகப் பழங்காலத்தில் உருவாகிய நான்கு (ஈரிரண்டு) பழநூல் எனப்படும் தமிழ் வேதமும், அதன் ஆறு அங்கங்களும் சடைமுடி வேணிப்பிரானாகிய சிவபெருமானின் வாயிலிருந்த வெளிவந்தவை" என்பது மேல் வரிகளின் பொருள்.

இதற்கு மாறாக வடவேதங்களை சிவன் வெளிப்படுத்தவில்லை, அவை தாமாகவே வெளிப்பட்ட சத்தங்கள், அதாவது சுயம்பு என்று பிதற்றுவது வடவேதம் ஓதுவோர் கூற்று. ஒரு வேதம் எப்படி தானே தோன்றும் என்று கேட்கக் கூடாது! தவடையில் போட்டுகிட்டு அப்படியே ஏத்துக்கணும், இல்லையா? வேதவாக்கு என்றாலே அது தானே மரபு! அட பாவமே!

சரி, புறநானூற்றிற்கு வருவோம் ! மேல் பாடல்களில் சிவனே நான்மறையை வெளிப்படுத்தியது வெளிப்படுத்தப்பட்டது புறநானூறே சொல்லுகிறது. அவை யாவை என்பதையும்

சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல

என்பது புறநானூற்றுப் பாடல் 31-ன் முதல் இரண்டு வரிகள் இங்கே, அறம், பொருள், இன்பம், சிறப்பு (வீடு) ஆகிய நான்கும் கூறப்பட்டதைக் காண்கிறோம்.

இதையே பிற்கால இலக்கண நூலான நன்னூலும் வழி மொழிகிறது.

"அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே"

ஒரு நூலின் முடிவான பயனே வீடுபேறு தான் என்று இன்னொரு இலக்கண உரையில் காணப்படும் ஒரு தனிப்பாடல் திரட்டில் இப்படிக் கூறப்படுகிறது.

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணாந்து
கட்டறுத்து வீடு பெறும்.

சிறப்புகளுக்கெல்லாம் ஆகச் சிறந்த நிலையான சிறப்பு இறைப் பேரின்பத்தில் ஒன்றி அதில் இரண்டற மூழ்குதல். அதனால் சிறப்பு என்பதே வீடுபேற்றை குறிக்கும். அதனால் தான் அடியார்கள் இந்த நாளில் சிறந்தார்கள் என்று பெரியோர் வகுத்துக் கூறுவர். வள்ளுவப் பேராசானும் இறைவனையே சிறப்பொன்றும் செம்பொருள் என்றார். இறைப் பேரின்ப வீட்டை எப்படி அடைவது?

அறத்தால் அடையாளம் என்பது தமிழர் கருத்து. அதனால் தான் புறநானூறு 31ம் பாட்டும் சிறப்பாகிய வீடுபேறு அறத்து வழிப்படூஉம் தோற்றம் என்று கூறியது. அதனால் தான் சிவபெருமான் ஏறி அமர்ந்ததைத் தமிழ்ச் சமயங்களும் அறவிடை ஏறியவன் என்று சுட்ட முடியாத இறையைச் சுட்டிக் காட்டியது.

அறத்தில் நிற்க; அறத்தால் - பொருள் ஈட்டுக, அறத்தால் இல்லற இன்பம் பெறுக! இந்த அறத்தின் வழியில் வாழ்க்கையில் ஏறிவந்தால் அறத்தின் மேல் அமர்ந்த இறை சிவன் உன்னை அணைத்து இரண்டறக் கலந்து பேரா இயற்கைப் பேரின்பத்தை நல்குவான் என்பது தமிழர் பின்பற்றிய நெறி.

இவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஏராளமான நூல்கள் தமிழில் உண்டு.

| | |
|---|---|
| அறநூல்கள் | - பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் (திருக்குறள் உட்பட) |
| பொருள் நூல்கள் | - அறத்தொடு பொருள் ஈட்டுவதை சில நூல்கள் தவிர பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும். |
| நெறிபிறழா இன்ப நூல்கள் | - ஏராளமான அகத்துறை நூல்கள் |
| வீட்டியல் நூல்கள் | - திருக்குறளில் மெய்யுணர்வுப் பகுதி, திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய பழந்தமிழ் நூல்கள், பின் வந்த சைவ சமய பன்னிரு திருமுறைகள், வைணவ நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 14 சித்தாந்த சாத்திர நூல்கள். |

இவை தாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் தமிழ் வேதங்கள். இதைத் தான் ஆலமர் செல்வன் (தட்சிணாமூர்த்தி) தமிழ் முனிவர்கட்கு உரைத்தான் என்றும், அது மிகப் பழங்காலத்தில் என்பதைக் குறிப்பாக உணர்த்த திருமுதுகுன்றப் பதிகத்தில் கீழ்வருமாறு திருஞானசம்பந்தர் உறுதி செய்கிறார்.

சுழிந்தகங்கை தோய்ந்த திங்கள் தொல்அரா நல்லிதழி
சழிந்தமேனி சைவவேடம் தானினைத்து ஐம்புலனும்
அழிந்தசிந்தை அந்தணார்க்கு அறம்பொரு ளின்பம்வீடு
மொழிந்தவாயான் முக்கண்ஆதி மேயது முதுகுன்றே.

அறம், பொருள், இன்பம், வீடு என்பதே தமிழ்வேத நான்மறை என்று ஒன்றல்ல இரண்டல்ல 135 இடங்களில் நால்வர் பெருமக்கள் பாடியதாக பன்னிரு திருமுறையில் காண்கின்றோம்.

இவற்றையே பண்டாய நான்மறை என்று மணிவாசகர் பாடினார். "புதிய செந்தமிழ்ப் பழமறை" என்றும், "தமிழ்வேதம் பாடினார் தானம் பெற்றார்" என்றும் சேக்கிழார் தமிழ் வேதத்தை உறுதிப்படுத்திப் பாடி இருக்கிறார்.

மேற்கண்ட குறிப்புகளின் உள்ளுறையை உணர்ந்து இக்கட்டுரை, வரையும் அடியேன் ஏற்கெனவே அறந்தமிழ் வேதம், பொருட்டமிழ் வேதம், இன்பத்தமிழ் வேதம் என்பவற்றைத் தொகுத்து விரிவான விழாக்களில் வெளியிட்டிருக்கிறேன். அடுத்து இவற்றைத் தொடர்ந்து வீட்டியல் தமிழ் வேதம் 7 தொகுதிகளாக தொகுக்கப்பட்டு அச்சு வாகனத்தில் ஏறக்காத்திருக்கின்றன.

இந்த நிலையில், மலேசியாவில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஐந்தாம் தமிழ்ச் சமய மாநாட்டில் தமிழ்ச் சமய நான்மறை அறம், பொருள், இன்பம், வீடு என்பதை ஆய்வு செய்ய இருப்பதைக் கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். மாநாடு அதன் நோக்கத்தில் வெற்றி பெற்று சிறக்க எனது வாழ்த்துக்கள்!

**முதுமுனைவர். மு.பெ.சத்தியவேல் முருகனார்**



# தமிழே இறைமொழி



# இறைமை

**தமிழியல் ஆய்வறிஞர் இர. திருச்செல்வனார்**
தலைவர் தமிழியல் ஆய்வுக் களம்,
மலேசியா.

இறைவாழ்க! இறைதந்த தமிழ்வாழ்க! தமிழ்தந்த மறைவாழ்க!
மறைதந்த மாசில் நெஞ்சத்து அறம்வாழ்க!
அறவாழி அந்தணன்செந் தண்மைவாழ்க!
தாள்சேர்க்கும் பிறவாழி நீந்துநெறி வாழ்க வாழ்க அனைத்துலகே!

உலகத்தின் இயற்கை அல்லது இயல்பு என்பது "நிலையில்லாத்தன்மை" எனப்படும் "நிலையாமை" உடையது. நிலையில்லாத உலகநுகர்ச்சிகளில்- உலகப்பொருள் நுகர்ச்சிகளில் மனம் கானல்நீரை உண்மையான நீர் என அருந்த நினைத்து அதன்பின்னால் ஓடியோடி உரங்கெட்டு ஒழிந்துபோய்விடும் மானின் கணக்கைப்போல் மாந்தரின் உலகியல் பொருள்களை அடிப்படையாக வைத்து வாழ்க்கையின் கணக்கு வாழ்க்கையின் இலக்கு என்பதும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

உலகத்துப் பொருள் அனைத்தும் நிலையில்லாதவை. அவற்றை தனக்கேன உரிமையாக்கிக்கொண்டு உடைமையாக்கிக்கொண்டு எப்படித்தான் பாதுகாத்துக்கொண்டு வந்தாலும் அவை நிலையாக யாரிடத்திலும் இருப்பதில்லை ஏன் அவையும் நிலையாய் இருப்பதில்லைலை. இவற்றின் பின்னால் ஓடிக்கொண்டுள்ள வாழ்க்கையும் நிலையாக இல்லை. பொருள்களும் பொருள்களைச் சார்ந்து போகின்ற வாழ்க்கையும் என எல்லாமே நிலையற்றவை. "உண்டதெல்லாம் மலமே": "கண்டதெல்லாம் அநித்தியமே" என்று முடித்துச்சொன்னார் வள்ளலார்.

நிலையில்லாத்தன்மையில் அலுத்துபோகும் நிலையில், நிலைத்தன்மை உள்ளதாக நித்தியமானதாக "எதுவுமே இல்லையா" - "யாருமே இல்லையா" என்னும் வினா மனத்தில்வந்து முனைத்து நிற்கும்போது கைமுத்திரை என்னும் அறிவு முத்திரையைக் காட்டியருளி இறைவணால் ஆன்றோர்கள் வழியாக அனைவருக்குமாக வழிகாட்டப்பட்டிருக்கிறது.

இறைமயம் அதாவது கடவுள் மயமாதல் என்பதுதான் ஆன்மிகத்தின் மீயுச்சமான இலக்கு என்பது வள்ளலார் நமக்கு மீண்டும் நிலைநிறுத்தித்தந்த அருளியல் நிலைபாடு. இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், சீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என நான்கு நிலைசார்ந்த ஒழுக்கங்களை யாவர்க்குமாகப் பொதுமையறத்தில் வைத்து அருளிச்செய்தார்.

ஒழுக்கத்துக்கு வருதல்“ என்று இதனை வேறிடங்களிலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இந்த ஒழுக்கத்தின் வழியாகத்தான் - அதில் கொள்ளுகின்ற பிடிமானம்தான் ஒருவரை தீயவற்றிலிருந்து நல்லதன் பக்ககமாக வரச்செய்து - வழிநடக்கச் செய்கிறது. அதிலேயே அதனோடேயே பின்னர் “நீத்தல்-நிலையற்ற தன்மைகொண்ட சார்புகளில் பற்றை நீத்தல்“ என்னும் ஒழுக்கம் உறுதியடைகிறது.

மனம் நிலையற்ற உலகியல் சார்பிலிருந்து விடுதலையாகிச் நித்தியமான நிலையில் சார்ந்திடும் சார்பு இறைதிருச்சார்பு. அந்தச் சார்தல்தான் “சேர்தல்“ என்னும் வழிபாட்டு நெறி -வழிபடு நெறி. அதற்கு, “ஒழுக்கத்து நீத்தல் (ஒழுக்கத்திற்கு வந்து அங்கிருந்துகொண்டு -அதிலே நிலைகொண்டு நிலையற்றவற்றின்மேல் பற்றை நீத்தல் -நிலையற்றவற்றின் சார்புனை நீத்தல்” என்று பெயர்.

இது ஒவ்வொருவருக்கும் தன்னிடத்தில் மனம்மொழிமெய் எனும் மூன்றினாலும் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டிருக்கும். அப்படி நீத்து ஒழுக்கமுற்றவர்கள் “ஒழுக்கத்து நீத்தார்“ எனக் கொண்டாடப்படுவர். அதுவரைக்கும் இருந்துகொண்டு வந்துள்ள “நான்-எனது-எனக்கு“ என்னும் தன்வெறிப்பு நிலையிலிருந்து நீங்கி முதலில் உலகியல் நுகர்ச்சிகளில் அறத்தோடு இருந்தவண்ணமாகப் பற்றுகொண்டு வாழ்வது - வளர்வது பின்னர் அப்பற்றுகளையும் விட்டுவிடுகின்ற - விட்டுநீங்கி மேற்செல்லுதல் என்னும் துறவு - அகத்துத் துறவு நிலைக்கு உயர்வது. துறத்தல்-நீத்தல் -விடுதல்-அகலுதல்-.. எல்லாம் ஒருபொருள் பற்றியவை.

பற்றுதலும் பற்றுவிடுதலும் ஒன்றன் தொடர்ச்சியே ஆகும். இதனைக் அரும்புமலர்காய்கனி எனத் தாயுமானவப் பெருமானார் உருவகப்படுத்தி விளக்குவார். இந்த உண்மை முழுவதையும் அணுச்சுருக்கமாக அருளிச்செய்திருகின்றார் ஔவை பெருமாட்டியார்.

ஈதல்-அறம் தீவினைவிட்(டு) ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர்கருத்தொருமித்(து)-ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்(து)-இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு -ஔவையார் தனிப்பாடல்

தோன்றுதல் இருத்தல் மறைதல் என்னும் சுற்றுமுறையில் பிறப்பு ஒன்று கிடைத்து அதிலே மனம் அவாவுகின்றபடி எல்லாம் அங்கலாய்த்து அறம்பாவம் என்பதைப் பற்றியெல்லாம் பெரிதாய்க் கருதாமல் ஆட்டமாய் ஆடிக்களித்திருக்கையில் இடையிடையே இடர்களும் இடையூறுகளும் அங்கிருந்தே தொடக்கமாகித் துன்பத்திற்குள் தள்ளிடும்போது சற்றே பக்குவம்வந்து ஏரணமாகத் தான்செய்துகொண்டிருக்கும் காரணகருமியங்களை மெல்லெனத் தன்னிடத்தில் தானே பொறுப்பெடுத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்குகையில், வாழ்க்கையிலே தன்பிழைக்கும் தன்நிலைக்கும் தானே - தனது அவாவே அடிமூலமாக இருப்பதைக் கண்டுபிடித்துக்கொள்ளும் வாய்ப்பு வருகின்றது.

தான் - தனக்கு - தன்னுடையது (நான் - எனக்கு - என்னுடையதுஸ என்று தன்னை மட்டுமே அடிப்படையாக வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் எல்லாரையும் தன்பொருட்டாகப் பயன்படுத்திக்கொள்ளும் தன்வெறிப்பு - தன்னல மிகைப்பு அந்த அவாவின் இயல்பு என்பது இன்னது என்று புரியவரும்போதுதான் அறிவறிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்தம் பக்கமாக மனம் திரும்புகின்றது - அவர்களிடத்தில் இதற்குத் தெளிவும் தீர்வும் பெற்று உய்வுபெற எண்ணம் வந்து திண்ணமுண்டாகிறது.

இந்த நிலையில் அவர்களிடத்தில் அடிசார்ந்துகொண்டு மனம்மொழிமெய் மூன்றாலும் அவர்களின் வழிநடந்து வரும்போது குருவருள் வாய்த்து அதனோடு திருவருள் வந்து வளர்க்கின்றது- வளர்க்கின்றது. இதற்குத்தான் பொய்தீர் ஒழுக்கநெறி என்று பெயர்- அதைத்தான் தனித்தனி மெய்யியல் (கருத்தியல்) கட்டமைப்புசெய்துகொண்டு சமயம், மதம், செந்தண்ணெறி (வட சன்மார்க்கம்).... என்ற வழிமுறைகளாகக் கொண்டிருக்கின்றோம்.

ஆதலின், அப்பெரியோரிடத்துக் கொள்ளுகின்ற பணிவன்புநிலைதான் அகமதிப்புநிலைதான் வணக்கம் வணக்கநிலை. அப்பெரியோர்தம் சொல்வழிக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுதல்தான் வழிபாடு. இந்த இரண்டுக்குள்ளும் இரண்டறக் கலந்திருந்து அருள்செய்துவருவதுதான் இறையருள். பற்றற்றவர்களுக்குப் “பற்றற்றான்“ என்று ந்பெயர். பற்றற்றவர்களுக்குப் பபற்றிடமாய் இருப்பது இறை. அதனால் அதற்குப் “பற்றற்றான் பற்று“ என்று பெயர்.

எனவே, அறத்தோடு தொடங்குங்கள் அறத்தோடு பொருள்கொண்டு (அகப்பொருள், புறப்பொருள்) எின்பத்தை நுகருங்கள் தன்பொருட்டுப் பற்றுநிலைக்குள் இருந்து பரன் ஆகிய இறைவனை நினைந்து நிலையற்ற உலகியல் சார்ந்த பற்றுகளையெல்லாம் தநுகர்ந்திருந்து மெல்லமெல்லத் துறந்துவந்து பற்றற்ற நிலைக்குக் குருவருளால் உய்வுற்ற நிலையில் “இறைமயம் ஆதல்“ என்பது அமைவதாகுக. இந்த இலக்கினை முன்னெடுக்க முனைப்போடு முன்னிற்கின்ற தமிழ்ச்சமயப் பேரவையின் பணிகளெல்லாம் மக்களுக்கு மெய்ப்பயன் நல்குக! வெல்க! வாழ்க!



## தமிழே இறைமொழி



# தமிழர் சமய வரலாற்றுப் பார்வை

**ஆய்வுச்செம்மல் இரா. மன்னர் மன்னன் அவர்கள்**
வரலாற்றுப் பேராய்வாளர்
தமிழ்நாடு

**வரலாற்றில் தமிழர்சமயம்**

சுற்றுச்சூழல் மீதான நேசம், முன்னோர் மீதான அன்பு இவற்றில் இருந்து பிறந்த ஒன்றுதான் தமிழரின் வழிபாட்டு நெறி. எந்த உவப்பும் காழ்ப்பும் இன்றி தமிழரின் மெய்யியல் மற்றும் இறையியல் நம்பிக்கைகளை ஆய்வு செய்வது, தமிழர்கள் தங்கள் இன அடையாளத்தையும் பண்பாட்டையும் காத்துக் கொள்வதில் மிக முக்கியமான நடவடிக்கை ஆகும். தமிழ்ச்சமய மாநாட்டின் நோக்கமாகவும் அதனையே நான் பார்க்கிறேன். அந்த நோக்கத்திற்கு இந்த ஆய்வுக் கட்டுரை உதவும் என நம்புகிறேன்.

**சமயமும் மதமும்:**

மதம் என்ற சொல் பண்டைய தமிழ் இலக்கியங்களில் வலிமை, செருக்கு, அறியாமை, அழகு, கொள்கை ஆகிய பொருள்களில்தான் பயன்படுத்தப்பட்டது. “மக்கள் பின்பற்றத் தகுந்த நெறி“ என்ற பொருளில் அச்சொல் எடுத்தாளப்படவில்லை. சங்ககாலத்தின் இறுதியில் வந்த சமயம் என்ற சொல்தான் “மக்கள் பின்பற்றத் தகுந்த நெறி“ என்ற பொருளில் தமிழில் புழங்கிய முதல் சொல் ஆகும். அதற்குப் பின்னர்தான் மதம் என்ற சொல் இக்காலப் பொருளில் தமிழில் புழங்கத் தொடங்கியது.

சமயம் என்பது தமிழ்ச் சொல்லாக இருந்தாலும், அதனைத் தமிழர் தாங்களே முன்னின்று உருவாக்கவில்லை. அது பிறரால் ஏற்பட்ட தேவைகளின் விளைவாக தமிழில் எழுந்த சொல் ஆகும். இதனைப் புரிந்து கொள்ள சமயம் என்ற சொல் எப்போது எப்படி தமிழில் புழங்கத் தொடங்கியது என்பதைப் பார்க்க வேண்டும்.

களப்பிரர் கால இலக்கியமான ஆசாரக் கோவையில் சமயம் என்ற சொல் 62ஆவது பாடலில் பயன்படுத்தப்படுகின்றது. அந்தப் பாடல்

**கால்வாய்த் தொழுவு சமயம் எழுந்திருப்பு**
**ஆசாரம் என்ப குரவர்க் கிவையிவை**
**சாரத்தால் சொல்லிய மூன்று.**

பாடலின் பொருள்: (குரவர்களின்) காலில் விழுந்து வணங்குதல், அவர்களுடைய சமய நெறியைப் பின்பற்றல், எழுந்து குரவருக்கு மரியாதை செய்தல் இவையே ஆசாரங்கள். இதிலிருந்து களப்பிரர் காலத்தில் சமயம் என்ற சொல், “மக்கள் பின்பற்றத் தகுந்த நெறி“ என்ற பொருளில் பயன்பட்டது என்பதை அறியலாம். ஆனால், ஆசாரக் கோவை என்பது பிராமணிய சார்பு இலக்கியம் என்பதனால் சமயம் என்பதை நாம் நமது (தமிழரின்) முன்னோர்களின் கண்டுபிடிப்பாகப் பார்க்க இயலாது.

வடக்கில் கி.மு.6ஆம் நூற்றாண்டில் நடந்த சமய மறுமலர்ச்சிகளின் தமிழக எதிரொலியாகவே தமிழகத்தில் வந்த “சமயம்“ என்ற கருத்தியலை நாம் பார்க்க வேண்டியுள்ளது. கைபேசியைத் தமிழர்கள் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அதன் பயன்பாடு தமிழகத்திற்குள் வந்ததால் அதற்குத் தமிழில் பெயர் வைத்தோம். அதே நிலைதான் சமயம் என்பதிலும். சங்ககாலத்திற்குப் பின்வந்த இன்னொரு இலக்கியமான மணிமேகலையை நோக்கும் போது இது நன்றாக விளங்கும்.

மணிமேகலை நூலின் “சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை“ பகுதியில் “காப்பிய நாயகியாகிய மணிமேகலை பிற சமயங்களின் கோட்பாடுகளை அறிந்து கொள்ள விரும்புகிறார், அதனால் ஒவ்வொரு சமயத்தின் கோட்பாடுகளிலும் தேர்ந்தவர்களாக உள்ளவர்களிடம் பேசி அந்த அந்தக் கோட்பாடுகளை அறிகிறார் என்ற கதைப்போக்கு உள்ளது. சமயங்களைப் பற்றிய அறிவுடையவர்களை மணிமேகலை நூல் “சமயக் கணக்கர்“ எனக் குறிப்பிடுகின்றது. இப்பகுதியில் சைவ சமயவாதி, வைதீக சமயவாதி, ஆசீவக சமயவாதி, சாங்கிய சமயவாதி, பௌத்த சமயவாதி உள்ளிட்டோரை மணிமேகலை சந்திப்பதாக உள்ளது.

இப்பகுதியைப் படிக்கும்போது, வட இந்திய சமயங்களின் வருகையால்தான் தமிழர்கள் தங்களது இறையியல் அல்லது மெய்யியலை வட இந்திய சமயங்கள் போல அறுதியிட வேண்டிய தேவை வந்தது. அப்போதுதான் விவாதங்களில் பங்கேற்க இயலும் என்பது அறியலாகின்றது.

சைவ சமய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டுமே நூல்கள் இல்லை. இலக்கியங்களுக்குள் தமிழர்கள் தாங்களே முதலில் கால்வைக்கவும் இல்லை. சமயத்தைப் பரப்பும் நோக்கமும் தேவையும் உள்ள பவுத்த சமண சமயங்களே முதலில் சமய இலக்கியங்களைப் படைத்தன. அவற்றில் தங்கள் சமய சகிப்புத்தன்மையை அல்லது சமய உயர்வைக் காட்ட தமிழரின் சமயங்களைப் பற்றியும் அவை கூறியுள்ளன என்று பார்ப்பதே இங்கு சரியான பார்வை ஆகும்.

சங்க இலக்கிய நூல்களில் ஆங்காங்கே தமிழரின் கடவுள்கள் குறித்த செய்திகள் காணப்பட்டாலும் அவை முழுதும் பக்தி இலக்கியங்களாக இல்லை (திருமுருகாற்றுப்படை பக்தி இலக்கியமாக இருந்தாலும் இன்று சங்க இலக்கியங்களுள் ஒன்றாக வைக்கப்பட்டாலும் கடைச்சங்க நூல்களின் ஒன்றாகக் கூறப்பட்டாலும் அந்நூலின் அமைப்புமுறை சங்க நூல்களுக்கு உரியதாக இல்லை).

களப்பிரர் மற்றும் பல்லவர் காலங்களில் பிற சமயங்களின் வருகையால்தான் தமிழர்கள் தங்கள் சமயங்களை வரையரை செய்யவும் சமய இலக்கியங்களை வகுக்கவும் முற்பட்டு உள்ளனர். எனவே சமயம் என்பது தமிழருக்கு முதன்மையும் அல்ல, தமிழர் தமக்காக உருவாக்கிக் கொண்டதும் அல்ல. அது சூழலால் தேவையால் தமிழர்கள் உருவாக்க நேர்ந்த ஒன்று. இப்போதும் தமிழர் சமயம் குறித்து நாம் பேச வேண்டிய சூழல் பிறரால்தான் ஏற்பட்டு உள்ளது. இது விரும்பத் தக்கது அல்ல என்றாலும் ஒதுக்க இயலாதது. சரி. தேவையின்போது சமயம் என்ற கருத்தியலை தமிழர்கள் எங்கிருந்து உருவாக்கினார்கள்?

**தமிழர் மெய்யியல்:**

மூக்கு சுவாசிப்பதைபோல, கண் பார்ப்பதைப் போல, மூளை சிந்திக்கின்றது. அப்படி சிந்திக்கும் மூளைக்கு நிறைய கேள்விகள் பிறப்பது இயல்பானது. அதிலும் உணவுத் தேவையில் தன்னிறைவு பெற்ற சமூகங்களில் அறிவுப்பசி தானே பிறக்கும். அவ்வகையில் தமிழர்கள் மிக நீண்ட சிந்தனை மரபை உடையவர்கள்.

அனைத்து முற்கால மனிதர்களுக்கும் இயற்கை குறித்தும் சமூகம் குறித்தும் அடிப்படைக் கேள்விகள் நிறைய இருந்தன. ஏனென்றால் இவை இரண்டோடும் இணைந்துதான் அன்றைய மனிதர்கள் வாழ வேண்டிய நிலை இருந்தது. அப்படிப்பட்ட கேள்விகளின் பதில்களில் இருந்து பிறந்ததுதான் மெய்யியல். உண்மையை அறியும் தேடல் - என்று மெய்யியலை எளிமைப்படுத்திக் கூறலாம். மெய்யியலில் ஏரணம் (Logic), விவாதம் (Discussion), நிரூபணம் (Proof) ஆகியவை உண்டு.

உலகாயதம், எண்ணியம் (சாங்கியம்), அளவியல் (நியாயவியல்), சிதைவுக்கோட்பாடு (உக்கேதவாதம்), வினைமறுப்பு (தற்செயல்) ஆகிய மெய்யியல் கோட்பாடுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன (இவை ஒவ்வொன்றையும் விரித்துக் கூறினால் கட்டுரை பெருகும் என்பதால் தவிர்க்கிறேன்). தமிழர்கள் தங்கள் இலக்கியங்களை அகம் புறம் எனப் பிரித்ததும், ஐந்து திணைகளுக்கும் ஐந்து கோட்பாடுகளை வகுத்ததும் மெய்யியல் மூலம் கிடைத்த அறிவினால்தான்.
மெய்யியல் மூலமாக உலகைப் புரிந்துகொண்ட தமிழர்கள், அதே மெய்யியலைக் கொண்டு கடவுளையும் அறிந்து கொள்ள முயன்றபோது தமிழரின் "வழிபாட்டு மெய்யியல்" அல்லது "இறையியல் (வுாநழடழபல)" தோன்றியது. ஆடு மேய்த்த மக்கள் தங்கள் கடவுளை ஒரு மேய்ப்பனாகவும், நகரங்களைக் கட்டிய மக்கள் தங்கள் கடவுளை ஒரு அரசனாகவும் பார்ப்பது இயல்பானது. மெய்யியல்தான் இறையியலைத் தீர்மானித்தது.

இவ்வுலகம் சார்ந்த அறிவான மெய்யியலில் நிரூபணம் உண்டு, ஆனால் வானுலகம் சார்ந்த அறிவான இறையியலில் நிரூபணம் இல்லை என்பது இவற்றிடையேயான மிக முக்கிய வேறுபாடு ஆகும். இவ்வுலக அளவு கோல்களை வைத்து, அவ்வுலகை அளப்பது என்பது எளிதாக இல்லை. அதனால் இறையியலில் நிறைய மெய்யியல் கோட்பாடுகள் பயன்படுத்தப்பட்டன. முடிவற்ற சிந்தனைகள் கிளைத்தன.

ஆரியர்களின் நூல்கள் அனைத்தும் சமய நம்பிக்கைகள் சார்ந்தவையாக உள்ளபோது, சங்க இலக்கியங்கள் மனித வாழ்வு மற்றும் இயற்கை சார்ந்ததாகவே இருக்கக் காரணம் மெய்யியலுக்குப் பின்னரே நமக்கு இறையியல் இருந்தது என்பதால்தான். ஆனால் பக்தி இலக்கியங்களின் காலத்திற்குப் பின்னர் மெய்யியலைவிட இறையியலுக்கு முக்கியத்துவம் அதிகமானது.

**இறையியல்**

இறைவனைப் பற்றி அறிந்து கொள்வது அல்லது அறிந்து கொள்ள முயற்சிப்பது என இறையியலை எளிமையாக வரையறுக்கலாம்.

கடவுள்தான் உலகைப் படைத்தார் என்ற எண்ணம் உள்ளவர்கள், எந்தக் கடவுள் உலகைப் படைத்தார்? மனிதனுக்கும் கடவுளுக்கும் என்ன தொடர்பு? கடவுளை மனிதன் உணர முடியுமா? கடவுளை மனிதன் அடைய முடியுமா? கடவுளை அடைய யார் வழிகாட்டுவார்கள்? என்றெல்லாம் தங்களுக்கு எழுந்த கேள்விகளுக்கு விடைகளாக உருவாக்கிக் கொண்டவைதான் இறையியல்

அதனால் இறையியலில் நீண்ட விவாதங்கள் உண்டு. கடவுளும் மனிதனும் ஒன்றா? கடவுள் வேறு மனிதன் வேறா? கடவுளுக்கு மனிதன் என்ன உறவு? - என்ற ஒவ்வொரு கேள்விக்கும் மிக நீண்ட விவாதங்கள் உண்டு. ஆனால் இதுதான் முடிவு என்று எதையும் இறையியலில் கூறிவிட இயலாது.

இந்நிலையில், சாமானிய மக்கள்... விவாத அறிவோ விவாதிக்க நேரமோ இல்லாதவர்கள்... பிறரின் விவாதங்களையும் அவர்கள் காட்டிய வழிகளையும் ஏற்றுக் கொண்டார்கள். இவையே மார்க்கங்கள் என அழைக்கப்பட்டன. சைவத்தில் சமயக் குரவர்கள் நால்வரும் நான்கு மார்க்கங்களில் வழிகாட்டுகிறார்கள்.

“சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாதமார்க்கம் மென்றுஞ்சங் கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம்“ என்று சிவஞான சித்தியார் இதனை விளக்கும்.

மார்க்கங்களைப் பின்பற்றுவோர் இறைவனோடு சேர்ந்து தங்களுக்கு வழிகாட்டியவர்களையும் வணங்கத் தொடங்கினர். இப்படியாகத்தான் தீர்த்தங்கரர்கள், புத்தர், மகாவீரர், ஏசு, நபிகள் நாயன்மார்கள், ஆழ்வார்கள் அனைவரும் வணங்கப்படுகின்றனர். அனைத்து மதங்களிலும் மூலங்கள் இறைவனைப் பற்றியவையாகவே உள்ளன. இறைத் தூதர்கள் “தங்களை வணங்கக் கூடாது“ என எவ்வளவோ கண்டிப்போடு கூறியும் உள்ளனர். ஆனால் மக்களால் தூதர்களை வணங்காமல் இருக்க முடியாது என்பதே காலம் காட்டும் முடிவாக உள்ளது.

இதன் காரணம் மனிதர்கள் தங்களது வடிவுள்ள, தங்களின் சுக துக்கங்களை அறிந்த தங்களோடு தொடர்புடைய ஒருவரே தங்களைப் புரிந்து கொள்வார்கள் என நம்புவது ஆகும். அனைத்து மதங்களிலும் இது நிகழ்ந்து உள்ளது.

தமிழர்கள் இதை அறிந்ததாலோ, மனித இயல்பை உனர்ந்ததாலோ என்னவோ தமது இறையியலின் அமைப்பை முன்னோர், தெய்வம், கடவுள்- என்ற வரிசையில் வைத்தனர்.

**முன்னோர், தெய்வம், கடவுள்**

தமிழரின் மெய்யியலில் முன்னோர். தெய்வம், கடவுள் ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளை அறிவது முக்கியமானதாகும்.

முன்னோர் என்போர் நமக்கு முன்பு வாழ்ந்தவர், நமது உடலுக்கும் உயிருக்கும் ஏதோ ஒரு வகையில் காரணமாக இருந்தவர். நாமோ நம்முடன் வாழ்ந்த பிறரோ இவர்கள் வாழ்ந்ததற்கு சாட்சிகளாக இருப்போம் (இதைப் புரிந்து கொள்வதில் அதிகக் கடினம் இருக்காது என நினைக்கிறேன்).

தமிழர்கள் முன்பு அதிக அளவில் வாழ்ந்த நிலம் தமிழகத்தின் தெற்குப்பகுதியாக இருந்தது. அது கடலுக்குள் சென்றுவிட்டதால் அங்கு புதைப்பட்டிருந்த முன்னோரை தென்திசை நோக்கி தமிழர்கள் வணங்கினார்கள். இப்படியாக நமது முன்னோர்களுக்கு “தென்புலத்தார்“ என்ற பெயரும் கிடைத்தது

**கடவுள்**

கடவுள் என்பது அனைத்திற்கும் மூத்த பரம்பொருள். கடவுள்தான் உலகத்தைப் படைத்தார். அவரே உலகத்தை இயக்குகிறார்- என்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான இறை வடிவம்.

நம்பிக்கையாளர்கள் “ஒரு படைப்பு உள்ளது என்றால், படைத்தவனும் இருக்க வேண்டுமல்லவா?“ என்ற எண்ணத்தோடு கடவுளை நம்புகின்றனர். அந்தக் கடவுள் குறித்து மேலும் அறிய முற்படும்போதுதான் பல்வேறு சமயக் கொள்கைகள் தோன்றின.

“ஐதே கம்ம, இவ் உலகு படைத்தோனே“- என்ற நற்றிணை வரியும்

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்“ என்ற திருக்குறளும் உலகைப் படைத்தவன் என்று கூறுவது கடவுளைத்தான் (கடவுள்தான் உலகைப் படைத்தார் என்பதை ஏற்றுக் கொண்டவர்களுக்குள், யார் அந்தக்கடவுள் என்பதில் மாறுபட்ட கருத்து இருந்தது தனி).

தமிழக அகச் சமயங்களில் சிவன் பொதுவாகக் “கடவுள்“ என்று குறிக்கப்படுகிறார். அதனால்தான் காளமேகப் புலவர்தனது கேலிப்பாட்டில் “கடவுள்“ என்று சிவனையே குறிப்பிட்டார். அப்பாடல்

கன்னபுர மாலே கடவுளிலு நீயதிகம்
உன்னிலுமே யானதிக மொன்றுகேள்- முன்னமே
உன்பிறப்போபத்தாம்முயர்சிவனுக் கொன்றுமில்லை
என்பிறப் பெண்ணத் தொலையாதே

பொருள்: திருக்கண்ணபுரம் கோயிலில் குடிகொண்டிருக்கும் திருமாலே! நான் சொல்வது ஒன்றைக் கேள். கடவுளைவிட நீ பெரியவன். உன்னைக் காட்டிலும் நான் பெரியவன். எப்படி? உனக்கு பத்தே பத்து பிறப்புதான். கடவுளான சிவனுக்கோ ஒரு பிறப்பும் இல்லை. எனக்கோ எண்ணமுடியாத பிறப்பு. அதனால் நான் பெரியவன்.

சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களில், ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நான்கு நூல்களிலும் கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்கள் சிவபெருமானைப் பற்றியவை.

திருக்குறளில் சிவன் குறிப்பிடப்படவில்லை. ஆனால் திருக்குறளும் ஒரு கடவுட் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டது என்பது கடவுள் வாழ்த்தில் உள்ள "தனக்கு உவமை இல்லாதான்" என்ற சொற்களால் அறியப்படுகிறது.

சைவர்கள் பிறர் கடவுள்கள் என்று வணங்குவது எல்லாம் சிவனின் வேறு வடிவங்களே என்று நம்பினார்கள்.

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"** என்பதன் பொருள் இதுதான்.

பெரிய புராணத்தை சேக்கிழார் எழுத முற்பட்டபோது, சிவனே முதல் சொல்லாக "உலகெலாம்" என்பதைக் கொடுத்தார் என்பது சைவ நம்பிக்கை. அதனால்தான்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்"- எனத் தொடங்குகிறது பெரிய புராணம்.

ஆனாலும், பல்வேறு பாடல்கள் திருமாலை கடவுள் என்றும் சிவனை தெய்வம் என்றும் கூறுவது உண்டு. அது எழுதியவரின் சார்பையும் தேவைகளையும் பொருத்தது (அதுகுறித்து விவாதிக்க இங்கு இடமோ தேவையோ இல்லை என நம்புகிறேன். அவரவர் நம்பிக்கை அவரவருக்கு. உலகைப் படைத்தவர் பிரம்மா என்றும் விஷ்ணு என்றும் மாறுபட்ட புராணங்களும் உண்டு. தெய்வ, மார்க்க வழிபாடுகள் அனைத்தும் அவற்றின் அடுத்த நிலையான "கடவுள்" என்பதில் சென்று நிறைவடைவதையே இவை காட்டுகின்றன.

இசுலாமிய சமயத்தில் நபிகள் வழிகாட்டியாக இருந்தாலும் கடவுள் அல்லாதான் (அல்லா என்பதன் பொருள் கடவுள். அது தனிப்பட்ட கடவுளின் பெயர் அல்ல). ஆப்ரஹாமை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட யூத மதத்திலும், ஏசுவை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவ மதத்திலும் யாவே அல்லது யகோவா என்பதுதான்கடவுள்.

**தெய்வம் என்பது என்ன?**

மெய்யியல் பார்வையில் இறந்தோருக்கும் கடவுளுக்கும் இடைப்பட்டதுதான் தெய்வம்!

கடவுளைப் போன்ற குணத்தையும் (வள்ளுவர் கடவுளை "எண்குணத்தான்" என்பார்) மனிதனைப் போன்ற வினைகளையும் (பிறப்பு, இறப்பு, இன்பங்களை நுகர்தல், மனதால் அறிதல் உள்ளிட்டவை) உடையவை என தெய்வங்களைக் கூறலாம். ஒரு மனிதன் தனது கடவுளை அடைய யாரை, எதையெல்லாம் வழிகாட்டியாகப் பார்க்கிறாரோ அனைத்தும் தெய்வம்தான்! அதனால்தான் தெய்வம் என்பது எந்தப் பாலாகவும், எந்தத் திணையாகவும் இருக்கலாம் எனத் தொல்காப்பியம் வரையறுக்கிறது.

பொதுவாக உயிர்களை உயர்திணை, அஃறிணை என்று இரண்டாகப் பிரிக்கிறது தொல்காப்பியம். ஆனால் அனைத்தையும் இந்த இரண்டு திணைகளுக்குள் அடக்க இயலாது என்பதையும் தொல்காப்பியம் கூறுகிறது.

**“காலம் உலகம் உயிரே உடம்பே**
**பால்வரை தெய்வம் வினையே பூதம்**
**ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்**
**ஆயீரைந் தொடு பிறவு மன்ன**
**ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்**
**பால்பிரிந்திசையா புயர்திணை மேன”** (தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், 58)

என்ற தொல்காப்பிய சூத்திரத்தின் பொருள்: காலமும் உலகப்பகுதியும் உயிரும் உடம்பும் பால்வரை தெய்வமும் வினையும் பூதமும் ஞாயிறும் திங்களும் சொல்லும் என எண்ணப்பெற்ற பத்துடனே இவைபோன்ற பொருள்களிற் பயின்று வருவன பிறவும் ஆகிய சொற்களெல்லாம் ஐம்பாலுள் இன்னபால் எனப் பிரிந்து இசைப்பன அல்ல, பொதுவாக உயர்திணைப் பொருள்மேல் நிகழ்வனவாம்.

இதை எளிமைப்படுத்திச் சொன்னால் “தெய்வத்தின் பெயர்கள் பொதுவாக உயர்திணைதான்.

பொதுவாக ஒரு தொடரில் வினைச்சொல் எப்படி முடிகின்றது என்பதைக் கொண்டுதான் நாம் பாலைப் புரிந்து கொள்வோம். எடுத்துக்காட்டாக “ரமணி“ என்பது இரண்டு பாலுக்கும் பொதுவான சொல்லாக இருந்தாலும் “ரமணி வந்தான்“ என்றால் அது ஆண்பால், “ரமணி வந்தாள்“ என்றால் அது பெண்பால்.

ஆனால் தெய்வத்தை பெயர்சொல்லாகக் கொண்ட ஒரு வாக்கியத்தில் இறுதியில் உள்ள வினைச்சொல்லைக் கொண்டு பாலினத்தை நாம் சரியாகக் கூறிவிட முடியாது.

அவள் வந்தாள்.
அவன் வந்தான்.
தெய்வம் வந்தது.

இந்த மூன்று தொடர்களில் முதலில் உள்ளது ஆண்பால், இரண்டாவதாக உள்ளது பெண்பால், மூன்றாவதாக உள்ளது? இதில் பால் இல்லை! காரணம் வினைச் சொல்லின்படி இந்த சொல் உயர்திணையாகவே இல்லை!

ஆடு வந்தது
மாடு வந்தது
என அஃறிணைக்கான இறுதிச் சொற்கள் முடிவதைபோல. தெய்வத்திற்கான இறுதிச் சொல் முடிந்தாலும் அது அஃறிணையாகாது. இதைத் தொல்காப்பியம்
**“தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே**
**உயர்தினை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்”** என்கிறது.

உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன் றில்லை.
ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்;
பயிலுமுயிர் வகைமட்டு மன்றி யிங்குப்
பார்க்கின்ற பொருளெல்லாம் தெய்வம் கண்டீர்
வெயிலளிக்கும் இரவி, மதி, விண்மீன், மேகம்,
மேலுமிங்குப் பலபலவாம் தோற்றங் கொண்டே
இயலுகின்ற ஜடப்பொருள்கள் அனைத்தும் தெய்வம்;
எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்.

என்று பாரதியார் எழுதியது இலக்கணப்படி சரியானது!

**தெய்வத்தின் முக்கியத்துவம்**

தொல்காப்பியம் தமிழர்களின் கருப் பொருளாக "தெய்வம்" என்பதைக் குறிப்பிடுகிறது.

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகை**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப** (தொல்காப்பியம், பொருளதிகாரம், 964)

இதன் காரணம் கடவுளை மறுப்பவர்கள் இருக்கலாம் ஆனால் தெய்வத்தை மறுப்பவர்கள் இருக்கவே இயலாது என்ற தமிழ்ச் சமூகத்தின் புரிதல்தான்!

தமிழர்களில் கடவுள் மறுப்பு பேசியோர்கள் உண்டு, ஆனால் தெய்வ மறுப்பு பேசியோர் இல்லை! காரணம் நமக்கு நன்மை செய்யும் வலிமையுடையது மட்டுமல்ல தெய்வம், நமக்கு முன்பே நன்மை செய்து, அதனால் நமது நன்றிக்கு உரியதாகவும் உள்ளதுதான் தெய்வம்.
அதனால்தான் தமிழர்கள் நடுகற்களை தெய்வமாக வணங்கினர்!

"ஒன்றாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறேந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லேபரவின் அல்லது
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே" என்ற புறநானூற்றின் 335ஆவது பாடல் தெய்வ வணக்கத்தையும் கடவுள் மறுப்பையும் ஒன்றாகப் பாடுகின்றது. கடவுள் மறுப்பு என்ற பெயரில் குல தெய்வங்களைக் கைவிடுவது எப்படிப்பட்ட நன்றிகெட்டத்தனம் என்பதை இது உணர்த்துகிறது.

தமிழர்கள் அனைவருக்கும் தமிழ் மொழி தெய்வம்தான். அதனால்தான் மனோன்மணீயம் பெ.சுந்தரம்பிள்ளை அவர்கள் தான் எழுதிய தமிழ்த்தாயைப் போற்றும் பாடலுக்கு "தமிழ்த் தெய்வ வணக்கம்" என்று பெயரிட்டார். கடவுள் மறுப்புக் கூட்டம் அதைத் "தமிழ்த்தாய் வாழ்த்து" என்று பெயரிட்டதோடு, அதன் வரிகளையும், உரையையும் மாற்றியது மிகத் தவறான செயல் ஆகும்.

தெய்வ நம்பிக்கை என்பது அறிவுக்கு ஒவ்வாதது அல்ல. அது உலகியலின் ஒரு அங்கம். மனிதர்கள் அரிய செயல்களைச் செய்வதால் தெய்வமாகலாம் என்பது தமிழர்களின் நம்பிக்கை என்பதை,
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள், 50) என்ற குறளால் அறியலாம்.

கடவுளை தனக்கு உவமை இல்லாதவன் என்று கூறும் அதே திருக்குறள் சிறந்த பண்புடைய மனிதர்களை தெய்வத்திற்கு ஒப்பானதாகக் கூறுகிறது!

“ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்“ (குறள், 702)
என்பதன் பொருள் “குறிப்பறிந்து நடந்து கொள்பவன் தெய்வத்திற்கு சமமானவன்“ என்பதாகும்.

இன்றும் நாம் நமக்கு உதவுபவர்களை “தெய்வமே“ என அழைப்பது இதனால்தான்! பகுத்தறிவாளர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்வோரும் தங்கள் வழிகாட்டிகளின் நினைவிடங்களை அலங்கரித்து மாலை வைப்பது தெய்வ வணக்கம்தான். அதை “வணக்கம்“ என அழைக்காமல் “வாழ்த்து“ என்று பிரிக்க அவர்களாலேயே முடியாது. தமிழ்த்தாய்க்குத்தான் இதையெல்லாம் கேட்க நாதியற்றுப்போய்விட்டது.

தமிழர்களால் வணங்கப்பட்டோர் அனைவரும் முன்னோர்கள் மட்டும்தானா? என்றால் இல்லை. மனித வாழ்க்கைக்குக் காரணமான இயற்கையையும் வானியல் அறிவின் வடிவங்களையும் தத்துவங்களின் வடிவங்களையும் சேர்த்தே தமிழர்கள் வணங்கியுள்ளனர். ஆனாலும், தமிழர்கள் தெய்வமாகக் கருதியோரில் பெரும்பான்மையானோர் முன்னோர் என்பது தெளிவு.

ஒரு தமிழனுக்கு, பலகாலம் முன்பு இருந்த முற்கால முன்னோர்களான தெய்வங்கள் முக்கியமானவர்களா? சமீபத்தில் மறைந்த தங்கள் பிறப்புக்குக் காரணமான சமீப முன்னோர்கள் (தென்புலத்தார்) முக்கியமானவர்களா? என்று பார்க்கும்போது, அதற்கான பதிலை
“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை“ (குறள், 43) என்ற குறள் தருகிறது.

இதில் தென்புலத்தாருக்குப் பின்னர்தான் தெய்வம் உள்ளது! ஆம், தமிழர்கள் தங்கள் நேரிடையான முன்னோர்களுக்கு தெய்வங்களை விடவும் உயர்ந்த இடம் கொடுத்தனர். இன்று இறந்தோர் வணக்கம் என்பது மிகவும் குறைந்துவிட்டது. இறந்தோர் வணக்கம் செய்யாத குடும்பங்களில் வாரிசுகளுக்கு முன்னோரின் தியாகங்கள் தெரியாமல் போகின்றது. தங்கள் பெற்றோர் அவர்களின் பெற்றோரை எப்படி நேசித்தார்கள் என்பது தெரியாமல் போகின்றது. குடும்ப முறை தோல்வியடைய இது ஒரு முக்கியக் காரணம் ஆகின்றது.

இறந்தோர் வணக்கம் என்பது தமிழர் மெய்யியலிலும் இறையியலிலும் சமயத்திலும் ஒரு முக்கிய அங்கம் ஆகும். ஆரியக் கலப்பற்ற தமிழ்ப் பண்பாடாக வெகுகாலம் அது தொடர்ந்து வருகின்றது.

ஏனெனில், இறந்தோரை வணங்குவது என்பது ஸ்டெப்பி புல்வெளியில் இல்லை! குடும்பத்தினர் யாராவது இறந்தால், பிணத்தின் காலில் கயிறு கட்டி இழுத்துச் சென்று அப்புறப்படுத்தும் வழக்கம்தான் ஆரியர்களிடம் இருந்தது. இந்தியாவிற்குள் வந்த பின்புதான் ஆரியர்கள் “இறுதிச் சடங்கு“ என ஒரு வழக்கம் இருந்ததை அறிந்தனர். அதை மண்ணின் மக்கள் பெரிதும் மதிப்பதைப் பார்த்தனர். அதன் பின்னர்தான் நாம் முன்னோருக்குச் செய்யும் சடங்குகளில் ஆரிய கற்பனைகள் புகுந்தன. அவர்களும் இறுதிச் சடங்குகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

**தமிழரின் இறுதிச் சடங்கு**

தமிழர் மரபில் திருமணத்திற்கு இணையான சடங்காக இறுதிச் சடங்கு இருந்தது. முன்னோரை மரியாதையோடு வழியனுப்புவதை தமிழர்கள் முக்கியக் கடமையாகக் கருதினர். தமிழர் பண்பாட்டில் சில இடங்களில் பாடைகளும் சில இடங்களில் தூளிகளும் அதற்குப் பயன்பட்டு உள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், வடகாடு அருகிலுள்ள கும்மாளமரத்துப் பட்டியிலுள்ள மலையில் வாக்கரிசிப் பாறை மலைக்குகை உள்ளது. அங்கு காணப்படும் பாறை ஓவியம் இது.





பாறை ஓவியம். புகைப்படமும் வரைபடமும்
படங்கள் உதவி: ஆய்வாளர் பாலா பாரதி

வாய்க்கரிசிப் பாறை என்ற இடத்தின் பெயரும். இதில் காணப்படும் சின்னங்களும் இவை இறுதிச் சடங்குதான் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

அந்த மலையில் முன்பு வாழ்ந்த பளியர் மக்களை ஆய்வாளர் பாலா பாரதி அவர்கள் நேரில் சந்தித்து இது குறித்துக் கேட்டபோது, அவர்களும் இது இறுதிச் சடங்குதான் எனக் கூறியதோடு, இந்த ஓவியத்தில் உள்ளதுபோல பாடைக்கு பதில் தூளியில் வைத்து இறந்தவர்களை தூக்கிச் செல்வது தங்கள் முறை என்றும், அப்போது தாரை தப்பட்டைகளை இசைப்பதும் வழக்கம் என்றும் விளக்கி உள்ளனர்.

இந்தப் பாறை ஓவியம் தமிழர்களின் மிகத் தொன்மையான இறுதிச் சடங்கைக் காட்டுகின்றது. அது இன்றுவரை அதிகம் மாறவில்லை என்பது வியப்பு தருகிறது. இதுபோல இன்னும் சில பாறை ஓவியங்களில் 7 படிகளைக் கொண்ட ஏணி காணப்படுகின்றது. இது பூமிக்கும் வானுலகுக்குமான பாதையின் குறியீடு ஆகும். பாடைகள் இந்த பாதையைக் குறிப்பதாகவே வடிவமைக்கப்பட்டு உள்ளன.

இறப்பின் பின்னர், இரண்டு பச்சை மூங்கில்களில் ஏழு மூங்கில் குச்சிகளைக் கட்டி தென்னை ஓலைகளால் அவற்றின் அடிப்பக்கத்தை உருவாக்கி பாடை கட்டுவதும், மறைந்தவர்களைத் தூக்கிச் செல்லும்போது தமிழ் நூல்களை வாசிப்பதும், தாளங்கள் முழங்குவதும் தமிழரின் இறையியலை ஆரியரின் இடையீடு இல்லாமல் இன்றும் தக்கவைத்து உள்ளன.

சங்க இலக்கியங்களில் புல் பரப்பி மறைகள் ஓதப்பட்டு இறுதி நிகழ்ச்சி நடந்தது என உள்ளதைப் பார்த்து, அதுவும் இப்போதைய இறுதிச் சடங்கும் வேறானவை என்று சில தமிழர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது சரியல்ல.

தொல்காப்பியம் மூங்கிலையும் தென்னையையும் புல் என்ற பிரிவில்தான் வைக்கின்றது. நவீன அறிவியலின்படியும் அவை புல் வகையைச் சேர்ந்தவைதான். அதனால்தான் சங்க இலக்கியங்கள் பாடை கட்டுவதை “புல் பரப்புதல்“ எனக் குறிப்பிட்டன. மேலும் இவற்றில் மறை என்று குறிக்கப்படுவது பண்டைய தமிழரின் மெய்யியல் நூல்கள். அவை இப்போது அழிந்துவிட்டதால் தமிழர்கள் இப்போது இறுதிச் சடங்குகளில் தேவாரம், திருவாசகம் படிக்கின்றனர். எனவே இறுதிச் சடங்கில் எதுவும் மாறவில்லை (இது குறித்து ஆதித்த கரிகாலன் கொலை நூலில் விளக்கி உள்ளேன்).

**வணங்குதலின் நோக்கம் என்ன?**

“கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கினால் அவர் இதெல்லாம் கொடுப்பார்“ என்று சொல்வது இன்றைய மக்களுக்கு நன்றாகப் புரியும். அவர்களுக்கு, “முன்னோர்களை வணங்கினால் அவர்களால் என்ன கொடுக்க முடியும்?“ என்ற கேள்வி இங்கு எழுவது இயற்கைதான்.

இன்றும் தமிழர்கள் வயதில் மூத்தோர்களையும் அரிய செயல்களைச் செய்த பெரிய மனிதர்களையும் கண்டால் காலில் விழுந்து வணங்குகிறோமே... அவர்களால் என்ன கொடுக்க முடியும்? அதே ஆசீர்வாதத்தை முன்னோர்கள் கொடுப்பார்கள் என நம்பி மட்டுமே நமது வணக்கங்கள் இருந்தன.

வணங்குவதும் நன்றியோடு இருப்பதும்தான் இன்று ஜப்பானியர்களை உலகிலேயே அதிக ஆயுள் உடையவர்களாக வைத்திருக்கின்றது. அதை அணு குண்டுகளால்கூட மாற்ற முடியவில்லை.

அதனால்தான் மெய்யியல் வழிவந்த சைவ சித்தாந்தம் ஆன்மீகத்தின் இலக்காக "முக்தி"யடைதலைக் கூறினாலும், தொண்டர்களுக்கு வணங்குவது என்பது என்பது முக்தியை விடவும் முக்கியமானது என்றும் கூறுகின்றது!

**"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"** என்ற பெரிய புராண வரிகள் இதனைக் காட்டும். தமிழர்களுக்கு வணங்குவது என்பது பேராசையின் வெளிப்பாடு அல்ல. நன்றியின் வெளிப்பாடு.

கடவுளிடம் நாம் "அதைத்தா... இதைத்தா..." என்று பேரம் பேசப் போகவில்லை. இந்த இடத்தில்தான் ஆரியரின் கடவுள் நம்பிக்கையும் தமிழர்களின் தெய்வ நம்பிக்கையும் மாறுபடுகின்றன. வேதத்தைப் பார்த்தால் அது முழுக்க முழுக்க மனிதன் கடவுளிடம் நடத்திய பேராசை பேரமாகவே இருந்துள்ளது. நீ இதைக் கொடுத்தால் நான் அதைக் கொடுப்பேன்-என்றே அவை உள்ளன. ஆனால் தமிழர்களின் பக்தி இலக்கியங்கள் அப்படி இல்லை. அவை நன்றி செலுத்துவதாக உள்ளன. இந்த வேறுபாட்டை நாம் உணர வேண்டும்.

"குறிப்பிட்ட கடவுளை வணங்குவது என்பதுதான் மதம் மதத்தின் இன்னொரு பெயர்தான் சமயம்" என்ற புரிதலே இன்று மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனால் தாங்கள் வணங்கும் கடவுளை வணங்கும் மாற்று இனத்தவரைத் தங்களில் ஒருவராகவும், தாங்கள் வணங்காத கடவுளை வணங்கும் தம் இனத்தவரை மாற்றாராகவும் பார்க்கும் மனநிலையும் தமிழர்களிடம் காணப்படுகின்றது. ஆனால் வரலாறு சொல்லும் உண்மை அதுவல்ல. நீண்டகாலம் நிலைக்கும் நாகரிகங்களில் கடவுள்கள்கூடக் காணாமல் போகின்றார்கள், மாற்று கடவுளர்கள் வருகின்றார்கள், ஆனால் அந்தக் கடவுளை மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள்? என்ற பார்வையும், எப்படி வணங்குகிறார்கள்? என்ற வழிமுறைகளும் மாறாமல் இருக்கின்றன! எனவே இன அடையாளம் சார்ந்த பார்வையில் எந்தக் கடவுளை வணங்குகிறார்கள் என்ற கேள்விக்கு மட்டுமல்ல "கடவுளை எப்படிப் பார்க்கிறார்கள்? எப்படி வணங்குகிறார்கள்?" என்ற கேள்விகளுக்கும் இடம் உள்ளது.

நாம் "தமிழர் சமயம்" என்று சொல்லும்போது "எந்த எந்த கடவுள்கள் இந்த சமயத்திற்கானது?" என்ற கேள்விதான் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், தமிழரின் வரலாற்றின்படி பார்க்கும்போது இந்தக் கேள்வியே சரியானது அல்ல!

தமிழர் தங்கள் முன்னோரையும் தெய்வங்களையும் கடவுள்களையும் தமிழர் நெறியில்நின்று வணங்குவதுதான் தமிழர் சமயமாக இருக்க முடியும். தெய்வங்களையும் முன்னோர்களையும் கைவிட்டு எந்த கடவுளை வணங்கினாலும் அது தமிழர் சமயம் அல்ல. தமிழர்களின் தெய்வங்களோடும் கடவுளோடும் ஆரிய வழியில் பேரங்களை நடத்துவதும் தமிழர் சமயமாக இருக்க முடியாது. இவை சமயச் சீரழிகளாக மட்டுமே இருக்க இயலும்.

தமிழர்கள் தங்கள் மெய்யியலையும் இறையியலையும் அந்நியக் கலப்புகளைத் தாண்டி அடையாளம் காண மலேசிய தமிழ்ச்சமய மாநாடு போன்ற நிகழ்வுகள் மிக முக்கியமானவை. ஆய்விதழ்களும் ஆய்வுக் கட்டுரைகளும் அத்தியாவசியமாவை. இந்த நிகழ்வும் இந்நூல் போன்ற ஆவணப் பணிகளும் இன்னும் முனைப்போடும் ஆழத்தோடும் தொடர வேண்டும் என்பவே என் அவாவும் வேண்டுதலும்.



# பேரவையின் காலச் சுவடு

**இளஞ்சோதி த/பெ தேவராசு PhD.**
பெட்டாலிங் பெர்டானா மாவட்டக்கல்வி
அலுவலகம், சா ஆலாம், மலேசியா.
பள்ளி மேம்பாட்டு நிபுணத்துவ பயிற்றுனர்

மாநாட்டு தமிழ்ச்சமயப்பேரவையின் ஆண்டுவிழாவிற்கு வருகை தந்தவர்களுக்கும், எங்கிருந்தாலும் வற்றாத ஆதரவை அளித்து வருவோர்க்கும் மற்றும் புதிதாய் இதனைக் கேள்வியுற்று மேலும் விடயம் அறிய விழைவோர்க்கும் வணக்கம்!

எழில் மிகு மலேசிய மண்ணில் கருவாகி, இன்று ஐந்து வயது குழந்தையாய் வீற்றிருக்கும் தமிழ்ச்சமயப் பேரவை கொண்டிருக்கும் வீரியம் தமிழே இறைமொழி: தமிழ்ச்சமயமே தமிழர்களின் தாய்சமயம். மலேசிய மண்ணில்தாம் இ∴து மறு பிறப்பெடுத்தக் குழந்தைத் இந்தக் குழந்தையா நம்மை வழி நடத்த போகிறது என வினவும் நபர்களுக்கு ஒரு கொசுறு தகவல். தமிழ்ச்சமயம் உண்மையில் தமிழ் மண்ணில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் பல பெயர்களில் பிறப்பெடுத்து மக்களை வழி நடத்தி வந்த மெய்யியலின் வாழ்வியல் தமிழருக்கென்று தனித்த சமய நெறிகள், வழிபாட்டு முறைகள் இருந்திருக்கின்றன எனத் தெளிவாக்குகிறது தேவநேயப் பாவாணர் எழுதிய பாடல்கள். இமயம் முதல் குமரி வரை, கங்கை தொடக்கம் கடாரம் வரை, எட்டுத் திக்கிலும் வெற்றிக்கொடியை நாட்டிய தமிழன் (பாபு சகாதேவன், 2018, ப59) நாகரீகத்தின் உச்சம் கண்டப்போது தமிழில் பக்தி இலக்கியம் வளர்த்தபோதே வளர்ந்த சமயம். அப்போது தமிழர்வழிபாடுகளில் தமிழ் கமழ்ந்து வாசம் வீசியது் மொழியும் பக்தியும் இரண்டற கலந்து எத்திக்கும் பரவி, விரவி மக்களைக் காத்து அரணாய் விளங்கியது.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்மறைகள்தாம் தமிழ்ச்சமய பேணும் நான்மறை. தமிழில் தமிழர்களால் படைக்கப்பட்ட தமிழ் மறை நூல்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே இருந்துள்ளன. அதற்கான சான்றில் ஒன்று கீழ்க்கண்ட பாடல் வரிகள்:
"பாண்டியன் அவையத்து அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டு ஆசாற்கு" என்கிறது தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரம்.

இதில் "நான்" என்றால் நான்கு மறை என்றால் காப்பு அல்லது அரண். நான்மறை என்றால் நான்கு அரண் என பொருள்படும். நான்கு அரண்களான அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பதே நான்மறை ஆகும். உலக உயிர்களுக்கு அரண் அமைத்து, அவைகள் நடைமுறையில், வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை எப்படி வாழ வேண்டும். பொருள் ஈட்ட வேண்டும். இறைவனை அடைய வேண்டும் என்று உலக உயிர்களுக்கு மறையாக இறைவன் அருளியதே நான்மறை ஆகும்.

அறம் செய்து, பொருள் ஈட்டி, இன்பம் பெற்று. இறுதியில் வீடு பேற்றை அடைய பற்றியிருக்கும் உலக ஆசையை அறு என்பதுதான் அதன் பொருள். அகத்தியர், ஔவை 63 நாயன்மார்கள், 18 சித்தர்கள், 12 ஆழ்வார்கள், சமய குரவர்கள் நால்வரோடு திருமூலர், பட்டினத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார் வரையிலான நமது அருளாளர்கள் அனைவரும் அறம் சார்ந்த பெருநெறியை மட்டுமே செய்யுட்கள் வழி வலியுறுத்தினர் மொழி வழியே செவிச்செல்வம் புகுத்தி செதுக்கினர். பண்டைத் தமிழரின் முதுநூல் ஆகிய நான்மறை சொன்ன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு கூறுகளையே திருக்குறளும் சொல்கின்றது. இன்றைய தமிழர் கையில் இருக்கும் நான்மறை திருக்குறளே!

சுமார் 5,000 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட தமிழர்கள் இறையியலை மூன்று வகையில் ஒழுகி வந்துள்ளனர் என்கிறார் சீனிவாச அய்யங்கார் (1989, ப3). இ஁து இந்தத்தமிழ்ச்சமயம் மக்களின் பக்குவ நிலைக்கேற்ப மூவகை இறையியலில் அழைத்து செல்வதை காட்டுகிறது. அவையாவன மரபு சார் வழிபாடு, சமயம் சார் வழிபாடு மற்றும் அகம் சார் வழிபாடு ஆகும். இது படி நிலை சார்ந்தது. இது மக்களின் அறிவு நிலைக்கு ஏற்ப தெய்வ வணக்கத்தை வலியுறுத்தும் உக்தி. ஆதிகாலத்தில் இயற்கையை தங்கள் கடவுளாக வணங்கி வந்த தமிழர்கள் பின், தாங்கள் வாழ்ந்த நில (ஐந்திணை) பின்னணிக்கேற்றவாறு தங்களைக் காத்த மக்களையே வழிபடத் தொடங்கினர் (தேவநேயப்பாவாணர். 2000 ப6-10). சூரியன்஁ஒளி போன்ற இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு. குலதெய்வ வழிபாடு போன்ற மரபு வழிப்பாடு. இதன் அடுத்த நிலையில் ஐந்திணை கடவுள்களான மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை வழிபாடு, சிவனியம், மாலியம் மற்றும் ஆசிவகம், போன்ற சமய வழிப்பாடு. அடுத்ததாக இறை சக்தியை உருவ நிலையை விடுத்து அருவ நிலையில் காணும் சித்தர் நெறி மற்றும் வள்ளலாரின் சன்மார்க்கம் போன்ற அக வழிப்பாடு. தமிழ்ப்பெருமக்கள்கண்ட சமய வாழ்க்கை ”பிறர் நலம்பேணுகின்ற பேரறம்” என்கிறார் குன்றக்குடி அடிகளார், (1963.13).

கண்ணால் காணாத கடவுளுக்கு இத்தனை வடிவமா? அதெல்லாம் ஏற்புடையது அல்ல் மாறாக வாழும் காலத்தில் தம் நிலம் சார்ந்த மக்களுக்கு ஒரு முன்னுதாரண நாயகனாக, காப்பானாக, மேய்ப்பானாக வாழ்ந்தவர்களே வணக்கத்திற்குரியவர்கள் இறை தூதர் இறை அவதாரத்தின் முன்னோடிகள் என மக்கள் கொண்டாடினர். இந்நாயகர்களின் நல்ல பண்புகள், குணங்கள் போற்றப் பட்டன் பின்பற்றப் பட்டன.

இவர்களுக்கென்று கடல் கடந்து, நிலம் கடந்து, இனம் கடந்து, மொழி கடந்து, கொள்கை சார்ந்து மக்கள் கூட்டம் உருவாகியது. புத்தர், நபிகள் நாயகம், இயேசு கிறித்து, குரு நானாக், சையிட் அலி முகமது, சாய்பாபா போன்றோர் பின்னனியில் பல சமயங்கள் தோன்றியபோது தமிழர்கள் மத்தியில் வழிபாடு குழப்பங்கள் தலைதூக்கின் மொழியிலும் மார்க்கதிலும் ஊடுருவல் ஏற்பட்டு வாழ்வியல் மயக்கம் ஏற்பட்டதால் இன்று தமிழர்களின் வழிப்பாட்டில் தமிழ் தள்ளி நிற்கிறது. இதனை மீட்டெடுக்கவே தமிழ்ச்சமயப்பேரவை. தமிழகத்தில் மட்டுமல்ல உலகில் எத்திசையிலும் வாழும் தமிழருக்கும் சரியான தமிழ் வாழ்வியலுக்குத் திரும்பவும் அயலார் மதஅடிமை நிலையிலிருந்து மீட்டெடுக்கவும் தமிழ்ச்சமயம் மறுமலர்ச்சி கண்டுள்ளது.

தமிழ்ச்சமயத்தின் தத்துவம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய பாரம்பரிய வாழ்வியல் முறை மற்றும் ”ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்பதுதான். ”பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று கூறியபடி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்து பல்வேறு தமிழ்ச்சமய நெறிகள் இருந்தாலும் அவற்றைப் பொறைகொண்டு அறஞ்சார்ந்து ஒருங்கிணைப்பதே தமிழினத்தின் நலன் காக்கும் செயல் என தத்துவத்தை கொண்டிருக்கிறது தமிழ்ச்சமயம் (அயடயலளயைனௌசர, 2018).

தமிழ்ச்சமயம் நிலைபெற நாம் சிந்தனை தெளிய வேண்டும். தமிழ்ச்சமயத்தின் சிந்தனைகளில் முதன்மையானது தமிழ்மொழி பயன்பாடு. தமிழர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா பண்பாடு, சமயம், வாழ்வியல் நிகழ்வுகளை தமிழிலேயே நிகழ்த்த வேண்டும். அறம், அன்பு, பண்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அயலாரின் சமய குறுக்கீடு இல்லாமல் செய்வித்தல் வேண்டும். இரண்டாவது சிந்தனை கோவில்கள் இடுகாடுகள் தொடர்பில்லாத பெயர் மாற்றம் கண்டு தமிழர் அடையாளம் அழிக்கப்படுவதிலிருந்து தடுக்கப்படவேண்டும். இதற்காக 2018-இல் மலேசியாவில் தோற்றம் கண்ட தமிழ்ச்சமய பேரவை, பேராக் வாழ்வியல் இயக்கத்தின் துணையுடன், ஆய்வுக் கருத்தரங்கு. மாநாடு போன்றவற்றை நிகழ்த்தி வருகிறது. மூன்றாவது சிந்தனை தமிழ்மொழி பேணப்பட வேண்டும், தமிழ்மொழி நன்கு பேணப்படுவதற்கு அதனைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். நான்காவது சிந்தனை தமிழரது பொருளாதார நிலை சிறக்க ஆவன செய்ய வேண்டும். மேலும் தமிழரில் செல்வந்தர்களாக இருப்பவர்கள் சொல்லாற்றலும் செயலாற்றலும் உடைய தமிழர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருத்தல் வேண்டும்.

தமிழர்தம் இறை வழிபாடு என்பது நன்றி நவிலும் கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டது. அந்த அடிப்படையில் வணங்கப்பட்டவர்தாம் முருகப்பெருமான். நம் முருகப்பெருமான் வழி வந்த சமயத்தை மீட்கவே மலேசிய மண்ணில் தமிழ்ச்சமயப் பேரவை செயல்பட்டு வருகிறது. தமிழை இறைமொழியாய்க்கொண்டு தமிழ் மக்கள் சிந்தனை தெளிய, தமிழ்ச்சமயம் காக்க மலேசியாவில் தமிழ்ச்சமயப் பேரவையின் கருதியல் சார்ந்த இறுதி கட்ட பணிதாம் இந்த ஐந்தாம் தமிழ்ச்சமய மாநாடு.

கடந்த ஏழு ஆண்டுகள் தமிழ்ச்சமயம், தமிழர்களின் அடையாள மீட்போடு கருத்தியலையும் மக்களுக்குப் போய்ச் சேர்க்க பல பட்டறைகளையும் மாநாடுகளையும் நிகழ்த்தி வந்தது. தமிழ்ச்சமய இறையாண்மை தமிழே இறைமொழியாககொண்டு தமிழ்ச்சமயமே தமிழர்களுக்கு தாய்ச்சமயம் என ஏற்கின்றது. இ∴து மரபு- சமயம்-அகம் என்ற மூவகை இறையியலையும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்மறையை பேணுகிறது. இதுவே பத்துமலை தமிழ்ச்சமயப் பரந்துரையின் சாரமும் ஆகும். இனி மக்கள் முடி வெடுக்க வேண்டிய காலம். இம்மாநாடு மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் அல்லது அறைக்கூவல். அகத்தின் இயற்கையான வளர்ச்சியான தமிழரின் மரபுச்சமயத்தை வள்ளலார் ஒரு புதிய உயரத்திற்கு கொண்டு சென்றார். இன்று இது ஒரு தனித்துவமான, அறிவியல் சார்ந்த, மனிதநேயம் மிக்க ஆன்மீக முறையாக உலகிற்கு விளங்குகிறது. இந்த மரபு தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும். இனி வரும் தலைமுறையினர் அதற்கான முயற்சிகளை நோக்கி பயணித்தல் மிக மிக அவசியம். நன்றி வணக்கம்!



# தமிழ்ச்சமயத் தொன்மை

**முனைவர் திலகவதி கிருஷ்ணன்**
செயலாளர்,
மலேசிய வள்ளலார் அறநிறுவனம்
Vallalar Charitable Mission Malaysia

ஐந்தாம் தமிழ்ச்சமய மாநாட்டை முன்னெடுத்து நடத்தும் தங்களின் அறப்பணிக்கு என் மனமார்ந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ச் சமயம் என்பது பண்டைய தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு தொன்மையான வாழ்வியல் முறையாகும். நமது உயிர் நூலான தொல்காப்பியத்தின் மூலமே தமிழ்ச்சமயத்தின் மெய்யியலை ஆழமாக புரிந்து கொள்ள முடியும். சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு நமது ஐயன் தொல்காப்பியர், தொல்காப்பியத்தில் தமிழ் மொழியின் தொன்மையயையும் மரபையும் தமிழர்களின் வாழ்வியலையும் அறத்தையும் இறை கோட்பாடுகளையும் செம்மையாக பதிவு செய்துள்ளார். குறிப்பாக பொருள் அதிகாரத்தில், மரபியல் 27வது சூத்திரத்தில் பரிணாம வளர்ச்சிக் கொள்கை பதிவில் தொல்காப்பியர், உயிர்த் தோற்றத்தின் வளர்ச்சியை அறிவு வளர்ச்சியின் அடிப்படையிலேயே குறிப்பிட்டுள்ளார். ஓரறிவிலிருந்து ஐந்தறிவு வரையிலான புலன் வளர்ச்சிக்கு பிறகு ஆறாம் அறிவாகிய மனவளர்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

மனிதனின் மன வளர்ச்சியின் மூலமே பொருளியல் உலகையும் அருளிய உலகையும் அனுபவிக்க முடியும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றார். மேலும் எழுத்ததிகாரத்தில் பிறப்பியல்“ எனும் தலைப்பின்கீழ் மொழியின் ஒலிகளுக்கான பிறப்பு இலக்கணம் கூறுகிறார்.

உந்தி முதலா முந்து வளி தோன்றி.
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலை.
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புஉற்று அமைய நெறிப்பட நாடி.
எல்லா எழுத்தும் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான
(தொல். எழுத்து.83)

மொழி பிறப்பு இலக்கணத்தை இன்றைய மொழியியலார்கள், விஞ்ஞான வளர்ச்சியின் அடிப்படையில் ஒலிகளின் பிறப்பை ஆராய்ந்து பார்க்கும்போது தொல்காப்பியர் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிறப்பியலில் சொன்ன கருத்துகள் ஒத்துப் போகின்றன.

மேலும் தொல்காப்பியர் உயிரெழுத்துகளின் பிறப்பைப் பற்றிக் கூறும்போது, "பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் மிடற்றின்கண் பிறந்த காற்றால் ஒலிக்கும்" என்று கூறுகிறார். உள்ளே இருந்து எழும் மூச்சுக்காற்றானது மிடற்றின் (கழுத்து) முயற்சியால் வாயின் வழியாக எந்த விதமான தடையுமின்றி வெளிப்படுவதால் பிறக்கின்ற ஒலிகள் உயிர் ஒலிகள் ஆகும் என்று இக்கால மொழியியலாளர்களும் தொல்காப்பியரின் கருத்தோடு உடன்படுகின்றனர். தொல்காப்பியர் மெய்யெழுத்துகளின் பிறப்பினைக் குறிக்கும் போது, வல்லின மெய்கள் தலையில் தங்கிய காற்றினால் பிறக்கின்றன என்றும்மெல்லின மெய்கள்மூக்கில் தங்கிய காற்றினால் பிறக்கின்றன என்றும் இடையின மெய்கள்கழுத்தில் தங்கிய காற்றினால் பிறக்கின்றன என்றும் விளக்குகிறார். இவ்வாறு மொழி பிறப்பியலை விளக்கிய தொல்காப்பியரின் கூற்றுப்படி தம் தமிழ் மொழியானது தொன்மையான மொழி மட்டுமல்ல அது ஒரு இயற்கையாக பிறந்த மொழியாகும் தோற்றுவிக்கப்பட்ட மொழி அல்ல என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மொழியில் வேர்ச்சொல் ஆராய்ச்சியை செய்த தேவநேய பாவாணரும் தமிழ் மொழியானது எல்லா மொழிக்கும் உயிர் மொழியாகும் என்று கூறியுள்ளார். வள்ளல் பெருமான் தமிழ் மொழி தந்தை மொழி என்றே கூறியுள்ளார். மொழியிலேயே உயிரையும் மெய்யையும் இணைத்து பிறந்த மொழியே தமிழாகும். இம்மொழியே இறை இயலை உணர்த்தும் ஞான மொழியாகும். தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் 12 உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களும் இணையும் இடத்தில் "∴" எனும் ஆயுத எழுத்து குறிக்கப்பட்டுள்ளது. இவ்வெழுத்தை "திருநிலை" என்றும் கூறுவர். உயிரும் மெய்யும் இணைந்து நிலை பெற்று இறை நிலை அடைய முடியும் என்ற குறிப்பை மொழியிலேயே வகுத்துக் கொடுத்துள்ளனர்நம் தமிழ் சான்றோர்கள்.

தொன்று தொற்று நம் தமிழர்கள் இயற்கையையும் நிலத்திற்கேற்ற தெய்வத்தை வணங்கி வந்துள்ளனர். இவ்வுலக உயிர்கள் தழைக்க ஒளி இன்றி அமையாதது என்பதற்கு ஒப்ப தமிழர்களின் வழிபாட்டு முறைகளும் விழாக்களும் ஒளியை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. குறிப்பாக பொங்கல் திருவிழா, தைப்பூசத் திருவிழா, திருக்கார்த்திகை போன்றவற்றைக் கூறலாம். தமிழர்களின் வழிபாட்டு முறைகளின் பதிவுகளை சங்க இலக்கிய நூட்களான பத்துப்பாட்டு எட்டுத்தொகையில் குறிப்பிட்டு காணப்படுகின்றன. மனிதன் அறநெறியை கடைப்பிடித்து தன் ஊழை அறிவால் வெல்வதற்காக தமிழில் பல அற நூல்கள் படைக்கப்பட்டன. அவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகிய அற நூல்கள், அகத்தினை நூல்கள், புறத்திணை நூல், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம் எனும் காப்பிய நூல்கள் போன்றவையாகும். இவை சங்கம் மருவிய கால நூல்கள் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இவற்றுள் திருக்குறள் சங்க மருவிய காலத்திற்கு முற்பட்ட நூல் என்று கூறப்படுகிறது. சங்ககாலத்தில் தமிழர்களின் அகம் புறம் எனும் வாழ்வியலில் ஏற்பட்ட துரிசுகளை கலையும்

முக்கிய நூலாக திருக்குறள் விளங்குகிறது. திருக்குறளின் வழி தமிழர்களின் வாழ்வியல் மிகவும் செம்மைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக உயிர் கொலையை தவிர்த்தல் எல்லா உயிரையும் தன்னுயிர் என போற்றுதல் மனதிற்கான ஒழுக்க நெறிகள் என பல முக்கிய வாழ்வியல் அறநீதிகள் வகுக்கப்பட்டன. இதனை ஒட்டியே சிலப்பதிகாரத்திலும் திருக்குறளின் அற நீதியின் தாக்கங்களை காணலாம்.

பிற்காலத்தில் 18ம் நூற்றாண்டில் இத்தகைய தமிழர் வாழ்வியலின் அறத்தை அடியொற்றிய ஒளி வழிபாட்டையும் உயிர் இரக்கத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட சுத்த சன்மார்க்கத்தை வள்ளல் பெருமானார் அருளினார். அவரே தன் திருவாய் மலர்ந்து என் நெறியை தொன்மையான நெறி என்று பறைசாற்றியுள்ளார். அறிவு வளர்ந்த மனிதர்களுக்கு உயிர் இரக்கமே வழிபாடு என்று போதித்துள்ளார் வள்ளல் பெருமான். “ஈரம் பண்பும் கொண்டு இன்னருள் பெற்றேன், என் மார்க்கம் பிறப்பொளிக்கும் சன்மார்க்கம் தானே“ என்று விளக்கியுள்ளார். தமிழச்சமயம் அறநெறி கோட்பாடுகளை வலியுறுத்தும் சமயம். இச்சமயத்தின் வழியே மனிதன் இறைநிலையை அடைய முடியும் என்பதனை செய்தும் காட்டியுள்ளார் நம் வள்ளல் பெருமானார்.

தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய படைப்புகளை உற்று நோக்குகையில் தமிழ் மொழியும் தமிழ் சமயமும் ஒன்றே என்ற கூறலாம். கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மண்ணை அன்னியர்கள் ஆண்டதால் தமிழ் மொழியும் சமயமும் மறைக்கப்பட்டு மறுக்கப்பட்டு தன் நிலையிலிருந்து தோய்வு அடைந்துள்ளது. இருப்பினும் இக்கால கட்டத்தில் இத்தகைய மாநாடுகளின் வழி உயிர்பிக்கப்பட்டும் என்பது உறுதி. உண்மைக்கு என்றும் அழிவில்லை.

நிறைமொழி மாந்தர்களாலும் அறிவர்களாலும் சித்தர்களாலும் வடிவமைக்கப்பட்ட தமிழ் சமயத்தின் தொன்மையையும் உண்மையையும் மெய்யியலையும் இன்றைய தலைமுறையினருக்கு எடுத்து இயம்பி அவர்களை நல்வழிப்படுத்தும் பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ள ஐந்தாம் தமிழ் சமய மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவருளும் குருவருளும் கூட்டுவித்து இம்மாநாடு செம்மையே நடந்தேறி அதன் நோக்கத்தை சென்றடையும் என்பது திண்ணம்.

வாழ்கதமிழ்ச்சமயம்!
வாழ்க நீடுழி!



**தமிழே இறைமொழி**

அருட்சொல்லரசு **திரு. ச. திருச்சுடர் நம்பி**,
*B.A.(C. S), M.Com, M.Phil. (com), Dip. in Multimedia & Webmaster,*
*Dip. in Saiva Sithandham, M.A.Tamil,*

*28, சாய் ஹோம்ஸ், F3, முதல் மாடி, 1வது மெயின் ரோடு,*
*புருஷோத்தமன் நகர், குரோம்பேட்டை, சென்னை – 600044*

கைபேசி: +919500073756 ; மின்னஞ்சல்: tcnambi@gmail.com



உலகம் உவக்கும் தொன்மை மொழியாம் தமிழ் மீது ஆராக் காதல் கொள்ளும் முத்தமிழ் முருகன் அருள் விளங்கி இருக்கின்ற பத்துமலை தலத்தில் ஐந்தாம் தமிழ்ச் சமய மாநாடு 16-09-2025 அன்று நடைபெறுவது என்பது அன்பர்களின் முயற்சியால் நடைபெறுவது என்று கொள்வதை காட்டிலும் இது இறை திருவருள் தனக்கு உவப்பான சில தூய தமிழ் நெஞ்சங்களை தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் தமிழ்ச் சமய மீட்சி என்னும் முயற்சியை நடாத்தி கொண்டிருக்கிறது என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். திருவருள் நலத்தால் இதற்காக பல முயற்சிகளை அயராது செய்து வரும் தமிழ்ச் சமயப் பேரவையினர், உலகத் தமிழர் அனைவரும் திசைநோக்கி வணங்கி போற்றப்பட வேண்டியவர்கள். தமிழ்ச்சமூகம் என்றென்றும் இம்முயற்சிக்கு கடப்பாடுடையவர்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

சமயத்தின் நோக்கம் என்ன?, பேரின்ப வீட்டை அடைவிக்க வேண்டும் என்பது தான். அதனை அடைவதற்கு இன்றியமையாதது நல்வழி நடத்தல் மற்றும் கொண்ட கொள்கையிலிருந்து மாறாது இருத்தல். அந்த கொள்கையை நாம் அறிவதற்கு ஏதுவாயிருப்பன சமய நூற்கள். இவ்வகை சமய நூற்களுக்கு அடிப்படை இலக்கணமும் இலக்கியங்களும். ஆக இவ்வகைத் தெளிவும் சிறப்பும் தமிழ் மொழியில் மட்டுமே செம்மையாகவும் மெய்ம்மையாகவும் பல்கிப் பெருகி அமைந்திருக்கின்றன என்பது உலகறிந்த உண்மை. ஆகையால் தமிழ் மொழியைப் போற்றி பாதுகாப்பது நம் கடமை. அதனால் தான் இந்த மாநாடு வெறும் சமய மாநாடாக அல்லாமல் தமிழ்ச் சமய மாநாடாக நடைபெறுகிறது. இந்த உயர்ந்த சிந்தனையே இம்மாநாட்டின் வெற்றி எனக் கொள்ளலாம்.

தமிழர் சமயம் என்பது தமிழ்மக்களின் மெய்நெறிக் கொள்கையின் அறிவு நலங்களெல்லாம் பொதுள பொருந்தி அமைந்திருக்கிறது, அதில் ”அறிவோடு” வழிபாடு செய்வதைப் பற்றி மட்டுமே எடுத்துரைத்து வற்புறுத்தப்படுகிறதே தவிர இன்ன முறையில் தான் வழிபாடு செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்துவது இல்லை. வழிபாட்டு முறைகளை அவரவர் கருத்துகளுக்கு ஏற்பவும் வசதிகளுக்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ள தமிழ்ச்சமயத்தில் இடமுண்டு. அவரவர் விருப்பம் மற்றும் அவரவருக்கு ஏற்ப முடிந்த எளிய முறையில் இறைவனை வழிபாடு செய்யும்

சுதந்திரத்தை வழங்கியது தமிழ்ச் சமயம். இறை வழிபாடு என்பது உயிர்கள் இறைவனிடத்தில் அடைவதற்கு செய்யும் முயற்சி, அதை செய்வதற்கு அடிப்படை அன்பு என்பதனை தெளிவுறுத்தியது தமிழ்ச்சமயம். அதோடு மட்டுமல்லாமல் அந்த அன்பு நெறியில் வாழ்ந்து இறைவனை இவ்வுலகிலேயே கண்டு அவன் திருவடிக்கு ஆளான அருளாளர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை பலரும் அறியவும் பின்பற்றவும் ஏதுவாக தமிழ்ச்சமயம் அதனை இலக்கியங்களாக வடித்து முன்வைத்திருக்கின்றது.

முதலில் தமிழர் இறந்த முன்னோர்களையும், ஒளி மூலங்களாகிய சூரியன், சந்திரன். மற்றும் சில உயிரினங்களையும் வழிபட்டான். பின்னர் காலமாற்றத்தாலும் அறிவு விளக்கத்தாலும் அவன் வழிபாட்டு முறைகள் மாற்றம் அடைந்தன. பின்னர் தெய்வ வழிபாடு ஆண் வடிவம் மற்றும் பெண் வடிவம் என்ற அடிப்படையில் அமைந்தது. சிந்தனையின் வளர்ச்சியால் முழுமுதற் கடவுள் உண்மை என்பதனை உணர்ந்தபின், இறைவன் அருள் பெற்ற அருளாளர்கள் இறைவனை வணங்க ஒளிநெறியை பரப்பினார்கள். பின்னர் அதுவே அறுவகைச் சமயங்களாக மாற்றம் கொண்டது.

அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்ற கருதுகோளுக்கு ஏற்ப இறைவனை அப்பனாக வழிபடுவது சிவனியம் (அ) சைவ சமயம் என்றும், அம்மையாக வழிபடுவது சத்தி சமயம் (சாக்தம்) என்றும், சத்தியை ஆண் வடிவில் வழிபடுவது திருமால் வழிபாடாகிய மாலியம் (வைணவம்) என்றும், இறைப்பரம்பொருளை குழந்தை வடிவாக வழிபடுவது முருக வழிபாட்டுச் சமயம் (கௌமாரம்) என்றும், உலகப்படைப்புக்கு அடிப்படையாக அமையக்கூடி ஒலி வடிவமாக பிள்ளையார் வழிபாடு(காணாபத்யம்) என்றும், ஒளி மண்டல வழிபாடாக சூரியன் வழிபாடு (சௌரம்) என்றும் அறுவகைச் சமயக் கோட்பாடு நிறுவப்பட்டன. தமிழர் மெய்யியல் என்பது கொள்கையின் அடிப்படையில் உண்மைகளை உணர்த்தவும் பரப்பவும் குறிகளும் அடையாளங்களும் கதைகளும் தழுவிக் கொள்ளப்பட்டன. அதே நேரத்தில் பெரியோர்கள் அறிவுக்கு பொருத்தமில்லாத புராணக் கதைகள், வெற்று கற்பனைக் கதைகள் போன்றவற்றை ஒதுக்கிடவும் புறந்தள்ளவும் அறிவுறுத்தினார்கள்.

கண்ணப்பர் தனக்கு தெரிந்த முறையில் மாமிச உணவை வைத்து வாயில் நீரூற்றி பூசை செய்தார் அதனையும் இறைவன் அன்பு என்ற அடிப்படையில் ஏற்றுக் கொண்டு வீடு பேறு அளித்தான். சாக்கிய நாயனார் கல்லை மலராகத் தூவி இறைவனிடம் அன்பு செலுத்தினார். இறைவன் அதனையும் ஏற்று வீடளித்தான். துணி வெளுக்கும் தொழிலைச் செய்த திருக்குறிப்புத் தொண்டர் தனக்கு நன்கு தெரிந்த செயலை எந்த சூழலிலும் விடாது செய்ததோடு மட்டுமல்லாமல் அதற்கு தடை ஏற்படும் போது உயிரையும் விடத் துணிந்தார். இறைவன் வெளிப்பட்டு ஆட்கொண்டான்.

இப்படி பலர். அடியார்களுக்கு உடை மற்றும் உணவு அளித்தல், திருக்கோயிலை தூய்மை செய்தல், சந்தனம் அரைத்தல், குங்கிலியம் புகைத்தல், ஆலயத்தில் விளக்கேற்றுதல், உழவாரப் பணி செய்தல் என தங்களுக்குத் தெரிந்த தங்களால் இயன்ற பணிகளை தெரிவு செய்து கொண்டு அதில் உறைப்போடு நின்று எந்த தடை ஏற்பட்டாலும் விடாது கடைப்பிடித்து இறைவன் அன்பிற்கு தங்களை ஆளாக்கிக் கொண்டார்கள். அதனால் அவர்கள் நாயன்மார்கள் என்று கொண்டாடப்படுகிறார்கள்.

ஆண்டாள் பூமாலையை பெருமாளுக்கு சூடிக் கொடுத்து இறைவனை அடைந்தாள். திருமங்கை ஆழ்வார் களவாடியாவது அடியார்களுக்குத் தினமும் அன்னம் இட்டு, திருவரங்கத் திருக்கோயிலின் கைங்கரியங்களையும் செய்து திருமால் மீது அன்பு செலுத்தி வந்தார். இறைவனே இவர் களவாடும் பாதையில் வந்து இவரை ஆட்கொண்டார். இவர்கள் யாரும் ஒரே வழிபாட்டு முறையை மேற்கொண்டவர்கள் இல்லை. தமிழ்ச் சமயம் அப்படி எந்த கட்டுபாட்டையும் இடவில்லை. அதோடு மட்டுமல்லாமல் வழிபாட்டு முறைக் கட்டுப்பாடுகள் தான் இறைவனை அடைவிக்கும் என்ற கருதுகோள்களை தகர்த்து அன்பு நெறியே உயரிய நெறி என்று எடுத்து காட்டியது மேற்சொன்ன வரலாறுகள் இன்னும் பல உண்டு.

இதன் மூலம் அடியார் பெருமக்கள் நமக்குக் காட்டியது, நம்மால் இயன்ற ஒரு வழியைத் தெரிவு செய்து கொண்டு எதுவரினும் கொண்ட கொள்கையை விடாமல் முயன்றால், அம்முறை வழியே இறைவன் வந்து அருளுவான். அது எந்தச் சமயமாக இருந்தாலும் எந்த வழிபடும் மூர்த்தமாக இருந்தாலும், அந்தந்தச் சமயவழி நின்று செய்யப்படும் அம்முறையிலேயே இறைவனுடைய திருவருளை உறுதியாகப் பெறலாம் என்று நமக்கு உணர்த்தினார்கள். நாம் செய்ய வேண்டியது எதாவது ஒரு முறையைக் கைக்கொண்டு இறைவனை ஏத்துதல் வேண்டும்.

> “அப்பனை நந்தியை ஆரா அமுதினை
> ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
> எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
> அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே”

என்று திருமூலர் குறிப்பிடுவார். எப்பரிசாயினும் ஏத்துமின் என்று குறிப்பிடுவதன் மூலம் சமயம் ஒரு தடையல்ல. இறைவனை வணங்குதலே குறிக்கோள், அது சரியாக அமையுமானால் அங்கு இறைவன் ஈசனாக வந்து அருள் புரிவான்.

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கே யென் றருள்புரியும் எம்பெருமான்

என ஞானசம்பந்தரும்,

ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

என திருநாவுக்கரசரும்,

எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் (ஆதியுலா)

என சேரமான் பெருமாள் நாயனரும் அருளிய பொருளுரைகள் எல்லாம், எவ்வகைச் சமய நெறிகளில் நின்றாலும் துதித்தாலும் இறைவனே எளிவந்து நேர்நின்று அருள் புரிவான் என்னும் உண்மையை புலப்படுத்துகின்றன. இதனையே தமிழ்ச்சமயம் நமக்கு வலியுறுத்தி எடுத்து காட்டுகிறது என்பதை நாம் உணரலாம்.

இறைவனை வழிபடும் வழிபாட்டு முறைகளுள் ஒருமுறையை பின்பற்றுதல் என்பது ஒருவகை ஒழுங்கு முறையை கைக்கொள்ளவும் பின்பற்றவும் ஏதுவாக இருக்கும் என்பது உண்மையாக இருந்தாலும் பலமுறைகளுக்கும் இடம் கொடுத்து தமிழரின் உண்மையான உயர்ந்தக் கொள்கையாகிய செம்பொருட் துணிவு என்னும் நெறியை உயர்த்தி நிறுவியது தமிழ்ச் சமயம் என்றே சொல்லவேண்டும் அதோடு மட்டுமல்லாமல் அதன் பரந்த நோக்கமும் பெருந்தன்மையும் வியந்து பாராட்டப்பட வேண்டியது.

எனவே தான் நம் முன்னோர்கள் தமிழர் சமயம் அல்லது தமிழ்ச் சமயம் என்பதனை "திருநெறி" அல்லது "செந்நெறி" என்று எடுத்துரைத்தார்கள். தமிழர் நெறி விரிந்த நோக்கமுடையது என்பதால் தான் உலகிலுள்ள யாவராலும் தழுவப்படுதற்கு உரியதாய் திகழ்கிறது. புறநானூற்றுப் புலவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பேசியதற்கும் பாடியதற்கும் வழிவகுத்தது தமிழ்ச் சமயத்தின் உயர்ந்த பரந்து விரிந்த பார்வையின் முதிர்ச்சியே ஆகும்.

புறநானூற்றுப் புலவர் மட்டுமல்ல, "ஞாலம் நின்புகழே மிக வேண்டும்" என சம்பந்தரும், "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என சுந்தரரும், "சேரவாரும் செகத்தீரே" என தாயுமானவரும் பாடியதும் முன்னதின் தொடர்ச்சி என்றே கொள்ளுதல் வேண்டும். ராமானுஜர் எந்த குலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பரவாயில்லை மாலியத்தில் இணையலாம் என்று இணைத்து காட்டியதும் அவ்வழியே எனக் கொள்ளலாம். தமிழ்ச்சமயம் உலகத்தில் உள்ள யாவரும் உணர்ந்து அறிந்து சேர்தற்குரிய பெருந்தன்மை உடையது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இது செந்நெறி என்று அழைக்கப்படுகிறது என்பதை மேலே பதிந்தோம், அந்த செம்மைப் பண்பு என்பது இறைவனுக்கும் தமிழுக்குமே உரியது என்பதனால் தான் நம் முன்னோர்கள் தமிழ் விளங்கிய தமிழ்நாட்டில் திருச்சேறை என்ற தலத்தில் இறைவனுக்கே “செந்நெறி” என்று பெயரிட்டு இதுவே இறைவனை அடைவிக்கும் நெறி என்று குறிப்பால் உணர்த்தினார்கள். செந்நெறி அல்லது தமிழ்ச் சமயம் என்றப் பெயரே அதன் சிறந்த நோக்கத்தை உணர்ந்து போற்றி பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

உலகில் உள்ள எல்லாச் சமயங்களிலும், தமிழ்ச் சமயம் அல்லது தமிழர் நெறியான ”செந்நெறி” என்பது பரந்து விரிந்த நோக்கமும் அமைப்பும் உடையது. பிறப்பால் ஏற்றத் தாழ்வு கருதுவது, சாதிய கட்டுப்பாடு, சடங்குமுறைக் கட்டுபாடு என்பன போன்ற தடைகள் ஏதும் இந்த நெறிக்கு இல்லை. தமிழ் மொழிப்பற்றும் செந்நெறிக் கொள்கையுமே அதன் தலையாய கருதுகோள்களாகும். ஆகவே தமிழ்ச் சமயம் என்பது உலகத்துள்ளோர் அனைவர்க்கும் பொது நெறியாகும்.

தமிழ்ச்சமயப் பேரவையினரின் தளராத முயற்சி வெவ்வேறு பரிணாமங்களைப் பெற்று, செந்தமிழ் எப்படி எல்லாவற்றையும் உள்வாங்கி காலத்திற்கேற்ப தன்னைத் தானே செழுமைப்படுத்திக் கொள்ளுமோ அது போல தமிழ்ச்சமயப் பேரவையின் பரந்துரைகள் வெவ்வேறு தளங்களில் பரிமளிக்கிறது. நான்காம் மாநாட்டில் பத்துமலை பரந்துரையில் தமிழ்ச்சமயத்தின் முகாமையான கூறுகள் மூன்றென அடுக்கிய நிலையில் இம்முறை ஐந்தாம் மாநாடு ”தமிழ்ச்சமய இறையாண்மை” என்ற கருதுகோளில் நான்காக பரந்து விரிந்து பரிமளித்து பயணிக்க உள்ளது. பொதுவாக இறையாண்மை என்பது யாராலும் எதிர்க்க முடியாத முறியடிக்க முடியாத அதிகாரமும் வரையறையும் உருவாக்கும் தத்துவம் என்பர். அந்த வகையில் பேரவையினர் வகுத்த தமிழ்ச்சமயம் இறையாண்மை கொள்கைகள் நான்கினை ஐந்தாம் மாநாட்டில் ஆறுமுகன் தாள்நிழலில் ஆய்வு செய்வது என்பது எண்ணிக்கையின் ஏறுமுகம் மட்டுமல்ல தமிழர்தம் எண்ணம் மற்றும் கொள்கைப்பிடிப்பின் ஏறுமுகம் என்றே கருத வேண்டும்.

குறிப்பாக இம்முறைத் தமிழ்ச்சமய நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு தான் என்றும், அதுவே தமிழ் வேதம் என்னும் கருதுகோளை முன்னிலைப்படுத்தியுள்ளது. இதனைப் பல்காலும் தமிழ்நாட்டில் நிறுவிவரும் எனது தந்தையார் முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் அவர்களின் முயற்சிக்கு கரம்கோர்த்து வலிமை சேர்க்கும் முன்னெடுப்பாக பார்க்கிறேன். இதுகண்டு என் மனம் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறது.

மலேசிய தமிழ்ச்சமயப் பேரவையின் முயற்சி தமிழ்ச்சமயம் அல்லது செந்நெறி என்பதன் மீட்சி, அது குன்றின் மேலிட்ட விளக்கு பரந்துபட்ட ஒளியை வீசுவது போல் ஒளிரவேண்டும் என்று கருதி உலகில் உள்ள உயரமான பத்துமலை முருகன் முன்னிலையில் மீண்டும் ஏற்றப்பட்டுள்ளது. ஒளி எப்படி எல்லோருக்கும் பொதுவோ அது போல தமிழ்ச்சமயம் எல்லோருக்கும் பொது என்று உலகெங்கும் புத்தொளி வீசி தமிழ்ச் சமயம் என்ற செந்நெறிக் கொள்கை பரவட்டும். தமிழ்ச்சமயப் பேரவையாளர்கள் முயற்சி தொடர்ந்து பல்கி பெருகட்டும். அதற்கு முருகன் திருவருள் முன்னிற்பதாக என்று வேண்டி அமைகின்றேன்.

**வாழ்க தமிழ்ச்சமயம்! வளர்க செந்நெறி!!**



# தமிழே இறைமொழி



# குறைந்தபட்ச அரசு கட்டுப்பாடு கட்டமைப்பு: தமிழ்ச்சமய முன்னெடுப்பின் அடுத்த கட்ட வளர்ச்சியின் அச்சாணி

**வழக்கறிஞர் இரா பாலமுரளி**
ஆலோசகர் சட்டப்பிரிவு
மலேசிய தமிழ்ச்சமயப் பேரவை

நமது நாட்டின் சமயம் சார்ந்த தன்னுரிமை, உச்ச சட்டமான அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 11-இல் (இணைப்பு) பாதுகாக்கபட்டுள்ளது.

பிரிவு 11 (1) தனிமாந்தருக்கு தமது சமய சார்பை வெளிப்படுத்தவும் பின்பற்றவும் பிரச்சாரம் செய்யவும் உரிமை வழங்குகிறது (இஸ்லாமிய நபர்களிடையே தவிர). பிரிவு 11(3) ஒவ்வொரு சமயக் குழுவுக்கும் தமது சமயம் சார்ந்த விடயங்களை நிர்வாகம் செய்யவும். சமயம் மற்றும் தொண்டு செய்யும் நோக்கத்துக்காக நிறுவனங்களை அமைத்து நிர்வாகம் செய்யவும், சொத்துரிமை கொண்டு அதனை சட்டத்தின் அடிப்படையில் நிர்வாகம் செய்யவும் உரிமை வழங்குகிறது.

மக்கள் இந்தக் சமய ஒவ்வொரு சமயத்துக்கும் கட்டமைக்கப்பட்ட வழிபாட்டு முறைகள் உள்ளன் பெரும்பாலான கட்டமைப்பின் வழியாகவே தங்களது செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றனர். இந்த உரிமைகளின் அச்சாணி பிரிவு 1 1. ஆக தமிழ்சமயத்தின் வளர்ச்சிக்கும் நிறுவனப்படுத்தலுக்கும் பிரிவு 11-இன் ஆழ அகலத்தை உள்வாங்குவது அவசியம்.

நமது அரசமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியில் தனிமாந்தருக்கு கொடுக்கப்படும் அடிப்படை உரிமைகளைச் சீர்தூக்கும் போது பரந்த நோக்கத்தைச் செலுத்த வேண்டும். அரசமைப்பு தக்கார் ர்யசசல புசழளநள அவர்களது பார்வையில் மலேசிய அரசமைப்பின் சில பிரிவுகள், குறிப்பாக அடிப்படை உரிமைகள் சார்ந்தவை, அதிமுக்கியமானவையாக உள்ளன.

அதில் அடிப்படை உரிமைகளை பொதுவாக இரு வகையாக பிரிக்கிறார்:
i. வரம்பற்ற (கட்டுப்பாடு இல்லாத) பிரிவுகள்
ii. கட்டுப்பாடுகள் கொண்ட பிரிவுகள்.

வரம்பற்ற பிரிவுகள் பின்வரும் உரிமைகளைக் குறிக்கின்றன:
i. அடிமைத்தனம் இல்லாமை
ii. சமயத்தை வெளிப்படுத்தவும் பின்பற்றதலுக்குமான உரிமை
iii. சமயக் குழுக்கள் தாங்கள் சார்ந்த சமய விவகாரங்களை நிர்வாகம் செய்வதும். சமயம் மற்றும் தொண்டு சார்ந்த நோக்கத்துக்காக நிறுவனங்களை ஏற்படுத்துவதுக்குமான உரிமை்
iv. தமது சமயம் அல்லாத பிற சமயத்தையும் அதை சார்ந்த சடங்குகளில் பங்கெடுக்காமல் இருப்பதற்கும் தொழுகை வைக்காமல் இருப்பதற்குமான உரிமை.

அதாவது. எல்லா அடிப்படை உரிமைகளும் சம தராசில் இருப்பதில்லை; சில உரிமைகள் தொடப்பட முடியாதவை. சமய உரிமை இந்த வகையை சார்ந்தது.

மலாயா அரசமைப்புச் சட்ட உருவாக்கத்தின் போது, ரீட் உருவாக்க குழு ,ந்திய அரசமைப்புச் சட்டத்தை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டது. இந்திய சட்டமைப்பில் பிரிவு 11(1) மற்றும் பிரிவு 11 (3)-ல் சமய உரிமையை பொது ஒழுங்கு. பொது நலம் மற்றும் நல்லொழுங்கிற்கு கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் அவ்வேளையில், மலாயா அரசு அதனை ஏற்கவில்லை எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாத உரிமையாக சமய உரிமை திகழ வேண்டும் என்று அது கருதியத் அப்படியே அமைந்தது.

இதன் வேறுபாட்டை பிரிவு க0 அதாவது பேச்சுரிமையோடு ஒப்பிடும் போது இன்னும் இலகுவாக புரிந்து கொள்ளலாம்.

பிரிவு 10 பின்வருமாறு:
Freedom of speech, assembly and association
10. (1) Subject to Clauses (2), (3) and (4)-
(a) every citizen has the right to freedom of speech and expression;
(b) all citizens have the right to assemble peaceably and without arms;
(c) all citizens have the right to form associations.

(2) Parliament may by law impose
(a) on the rights conferred by paragraph (a) of Clause (1), such restrictionsas it deems necessary or expedient in the interest of the security of the Federation or any part thereof, friendly relations with other countries, public order or morality and restrictions designed to protect the privileges
of Parliament or of any Legislative Assembly or to provide against
contempt of court, defamation or incitement to any offence;
(b) on the right conferred by paragraph (b) of Clause (1), such restrictions as it deems necessary or expedient in the interest of the security of the Federation or any part thereof or public order;

(c) on the right conferred by paragraph (c) of Clause (1), such restrictions as it deems necessary or expedient in the interest of the security of the Federation or any part thereof, public order or morality.
(3) Restrictions on the right to form associations conferred by paragraph (c) of Clause (5) may also be imposed by any law relating to labour or education.
4) In imposing restrictions in the interest of the security of the Federation or any part thereof or public order under
Clause (2)(a), Parliament may pass law
prohibiting the questioning of any matter, right, status, position, privilege, sovereignty or prerogative established or protected by the provisions of Part III, Article 152,153 or 181 otherwise than in relation to the implementation thereof as may be specified in such law.

உட்பிரிவு (2) நாடாளுமன்றம் சட்டத்தின் வழியாக பின்வருவதை சுமத்தலாம் என்கிறது.

(a) பேச்சு மற்றும் வெளிப்படுத்தும் உரிமையின் மீது பாதுகாப்பு, பொது ஒழுங்கு அல்லது நன்னடத்தை முன்னிட்டு அவசியமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்கிறது.

(b) அமைதியான ஒன்று கூடல் உரிமையின் மீது பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கை முன்னிட்டு தேவையான கட்டுப்பாடுகளை போடலாம் என்கிறது.

(c) கழக அமைப்பு உரிமையின் மீது பாதுகாப்பு, பொது ஒழுங்கு அல்லது நன்னடத்தை முன்னிட்டு தேவையான கட்டுப்பாடுகளைச் சுமத்தலாம் என்கிறது.

எனவே பிரிவு 10 வெளிப்படையாகப் பேச்சுரிமை, ஒன்று கூடும் உரிமை மற்றும் கழக உரிமையின் மீது தேவையான சூழ்நிலைக்கிசைந்த கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பு. பொது ஒழுங்கு மற்றும் நன்னடத்தையின் பேரில் போடலாம் என்று சொல்கிறது.

இதன் அடிப்படையில்தான் 1957-லிருந்து நாடாளுமன்றம் மேல் குறிப்பட்ட உரிமைகளைப் பல்வேறு சட்டங்களின் வழி நெறுக்கி கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக அச்சகம் மற்றும் வெளியீட்டு சட்டம் 1983 (Printing Presses & Publications Act 1983), அதிகாரப்பூர்வ இரகசிய சட்டம் 1972 (Official Secrets Act 1972), போலீஸ் சட்டம் ககூகூ எ (Police Act 1967), கழகங்கள் சட்டம் ககூசுஎ (Societies Act 1966, 1959 (Trade Unions Act 1959).

பிரிவு 10 மற்றும் பிரிவு 11-க்கு இடையே முக்கியமான 3 கூறுகள் உள்ளன:
முதலாக, மலேசிய குடியுரிமை கொண்டவர்கள் மட்டுமே பேச்சுரிமை, ஒன்றுக்கூடும் உரிமை மற்றும் கழக உரிமை கொண்டுள்ளனர். மாறாக அனைவருக்கும் சமய உரிமை வழங்கப்படுகிறது.

இரண்டாவது, நாடாளுமன்றத்துக்கு தேவையான கட்டுப்பாட்டு சட்டங்களை இயற்ற பிரிவு 10-ஐ போல இடம் பிரிவு 11-இல் கிடையாது.

மூன்றாவது, பிரிவு 10-இன் கீழ் அமைகின்ற பெரும் கழக உறுப்பினர்களை விட பிரிவு 11-இன் கீழ் இயங்கும் சமய குழுக்களுக்கு விரிவான சுதந்திரம் உள்ளது.

பிரிவு 11(5): இது சமய சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்ட இயற்றலை தடுக்கிறது. ஒருவர் தமது சமய சுதந்திரத்தை நடைமுறைபடுத்தும் போது பொது ஒழுங்கு, பொது உடல்நலம் அல்லது நன்னடத்தை சார்ந்த சட்டங்களை மீறக்கூடாது என்று மட்டும் சொல்கிறது.

மொத்தத்தில் பிரிவு க க சமயம் சார்ந்த உரிமைக் கதவுகளை மற்ற பிரிவுகளை காட்டிலும் அகன்று வைக்கிறது. அரசு ஒருவரை சமய தேர்வு, சமய நிராகரிப்பு, சமய மாற்றம் சார்ந்த உரிமைகளின் மீது மேலாண்மை செய்ய முடியாது. இவ்வுரிமை முழுமையானது, நிறுவப்பட்டது, மாற்ற இயலாதது. Minister of Home Affairs v Jamaluddin (1989) 1 MLJ 418 உறுதிபடுத்தியுள்ளது.

கழகங்களின் சட்டம் 1966 பொதுவாக, சமய குழுக்கள் குறிப்பாக, கோயில் சார்ந்த கழகங்களின் பதிவாளரிடம் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று சொல்வர் சரி, கழகம் என்றால் என்ன என்பதை சட்டபிரிவு 2 வரையறுக்கிறது: அது மன்றம் (உடரடி), நிறுமம் (உழஅியலெ), பங்காண்மை (ியசவநெசளானி). அல்லது 7 அல்லது அதற்கு மேற்பட்டவரின் சேர்க்கை என்கிறது.

பிரிவு 11(3) இல் ஒரு சமயத்தைப் பின்பற்றி வெளிப்படுத்திப் பரப்புவர்களைச் சமயக்குழு (சநடபைழைரள பசழரி) என சொல்கிறது. இந்தச் சொல் அரசமைப்பு சட்டத்தில் விளக்கப்படவில்லை. எனினும் பொதுப் புரிதலில் அது பெருவாரியாக பின்பற்றபடும் சமய குழுக்களைச் சுட்டுவதாகக் கருதலாம். இதில் நாம் முக்கியமாக சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது, பிரிவு க க(ந) கீழ் வரும் சமயக் குழு கழகங்கள் சட்டத்தில் வரும் கழகமா? அப்படி இருந்தால் அதன் பதிவு கட்டாயமா?

பிரிவு 110-இல் பதிவு குறித்து எங்கும் வெளிப்படையாக சொல்லப்படவில்லை. ஆனால் பிரிவு 11(1) மற்றும் 1 1 (3) சமயம் மற்றும் அரசு நிர்வாகம் பிரிந்திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வெளிப்படுத்துகிறது. இது மலேசிய அரசின் சமய சார்பின்மையை வலியுறுத்துகிறது.

கழகங்களின் சட்டம், மாந்தர்களின் கூட்டமைப்பு என்ற ஏற்பாடு பிரிவு சு-இன் கீழ் பதியப்பட வேண்டும் என்கிறது. பதிவு இசைவை வழங்க, கழகங்களின் பதிவாளர் குறிப்பிட்ட கழகத்தின் சட்டவிதியில் அட்டவணை கஇல் வரும் விடயங்களை தாங்கி இருக்க வேண்டும். இல்லையேல் பதிவு வழங்கப்படாது: அதாவது உரிமை கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும், பதிவை மறுக்கவும், விதிகளை சுமத்தவும், விதிகளை மாற்றவும் உத்தரவிட அதிகாரம் பதிவாளரிடம் உள்ளது. பதிவான கழகத்தின் உள்விவகாரங்களில் பதிவாளர்தன்விருப்ப அடிப்படையில் நுழையலாம்.

ஒரு கழகத்தின் பதிவு இரத்து செய்யப்பட்டால் பிரிவு க எ பின்வருமாறு சொல்கிறது.
(a) கழகத்தின் சொத்து அரசு திவாலதிகாரியின் கட்டுப்பாட்டிற்குச் செல்லும்,
(b) சொத்துகளை விற்று கழகத்தின் கடன்பொறுப்பை நிவர்த்தி செய்து மீதம் இருந்தால் அரசிடமோ உறுப்பினர்களிடமோ கொடுக்க வேண்டும்.

இந்த நிலையில் பதிவாளரிடம் பதிவு பெற்ற ஒரு கழகம் பின்வரும் சூழ்நிலைகளை எதிர்நோக்கலாம்:
i. அமைப்புவிதிகள் மாற்றம்.
ii. கணக்கின் மீது விசாரணை
iii.புகார் மீது விசாரணை.
iv.சமய கூடங்கள் மீது சோதனை, பின்பு ஆவணங்கள் கைப்பற்றல்.
v. பதிவு இரத்து செய்யப்படுவது, அதனால் சமய நடைமுறையின் மீது ஏற்படும் சிக்கல். இந்த நேரத்தில் உச்ச சட்டமான அரசமைப்பு சட்டம் பிரிவு 11(3) ஒரு சமய குழு தமது சமய நிர்வாகத்தை அதுவே செய்யவும் சமய மற்றும் கொடை நோக்கத்துக்காக நிறுவனங்களை ஏற்படுத்தி நடத்தவும் முழு உரிமை தருகிறது. ஆனால் பதிவதிகாரியிடம் பதிவு பெற்றால் இது பாதிப்புக்குள்ளாகிறது.

எனவே எனது பார்வையில் பிரிவு 11(3) இன் கீழ் ஒரு சமய குழு கழகங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய தேவையில்லை. ஆனால் நடைமுறையில் பதிவாளரை தவிர்த்து சமய குழு தமது சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு கழகங்களின் பதிவாளர் (Registrar of Societies). அரசு வழக்கறிஞரிடம் அறக்கட்டளையாக பதியலாம். (Trustee Incorporation Act 1956).

இந்த சட்டங்களின் மூலம் அமையும் சமய குழுக்களின் மீது அரசு கட்டுப்பாடு பெருமளவில் குறைவாக இருக்கும். அதிலும் தமிழ் சமய முன்னெடுப்பாளர்களின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை வெகுவாக தவிர்க்கலாம். தமிழ்சமய முன் எடுப்புகளும் தமிழ் சமய பேரமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும். இந்த சுதந்திரம் மிகவும் தேவையானது. இது கிளை கட்டமைப்புகளை ஏற்படுத்த ஏதுவான சூழ்நிலையை கொடுக்கும்.



## தமிழே இறைமொழி

# இணைப்பு Article II

**FEDERAL CONSTITUTION OF MALAYSIA**

11. Freedom of religion

(1) Every person has the right to profess and practise his religion and, subject to Clause (4), to propagate it.

(2) No person shall be compelled to pay any tax the proceeds of which are specially allocated in whole or in part for the purposes of a religion other than his own.

(3) Every religious group has the right-

(a) to manage its own religious affairs;

(b) to establish and maintain institutions for religious or charitable purposes; and

(c) to acquire and own property and hold and administer it in accordance with law.

(4) State law and in respect of the Federal Territories of Kuala Lumpur, Labuan and Putrajaya, federal law may control or restrict the propagation of any religious doctrine or belief among persons professing the religion of Islam.

(5) This Article does not authorize any act contrary to any general law relating to public order, public health or morality.

**மலேசிய அரசமைப்பு சட்டம்**

11. மத சுதந்திரம்

(1) ஒவ்வொரு நபருக்கும் தனது மதத்தை வெளிப்படுத்தவும், பின்பற்றவும் உரிமை உண்டு, மேலும் பிரிவு (4) க்கு உட்பட்டு, அதைப் பிரச்சாரம் செய்யவும் உரிமை உண்டு.

(2) எந்தவொரு நபரும் தனது சொந்த மதத்தைத் தவிர வேறு ஒரு மதத்தின் நோக்கங்களுக்காக முழுமையாகவோ பகுதியாகவோ ஒதுக்கப்பட்ட எந்தவொரு வரியையும் செலுத்த கட்டாயப்படுத்தப்படக்கூடாது.

(3) ஒவ்வொரு மதக் குழுவிற்கும் கீழ்வரும் உரிமைகள் உண்டு-(3)

(a) அதன் சொந்த மத விவகாரங்களை நிர்வகிக்க்

(b) மத அல்லது தொண்டு நோக்கங்களுக்காக நிறுவனங்களை நிறுவி பராமரிக்க் மற்றும்

(c) சட்டத்தின்படி சொத்துக்களை கையகப்படுத்தி சொந்தமாக்கிக் கொள்ளவும், அதை வைத்திருக்கவும் நிர்வகிக்கவும்.

(4) மாநில சட்டம் மற்றும் கோலாலம்பூர், லாபுவான், புத்ராஜெயா ஆகிய கூட்டாட்சி பிரதேசங்களைப் பொறுத்தவரை, இஸ்லாமிய மதத்தை வெளிப்படுத்தும் நபர்களிடையே கூட்டாட்சி சட்டம் எந்தவொரு மதக் கோட்பாட்டை, நம்பிக்கையின் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

(5) இந்தப் பிரிவு பொது ஒழுங்கு, பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கம் தொடர்பான எந்தவொரு பொதுச் சட்டத்திற்கும் முரணான செயலை அங்கீகரிக்கவில்லை.



## பண்டை தொட்டு வளர்ந்து வரும் தமிழ்ச்சமயம்

தமிழ்த்திரு த.செ.இளங்குமரனார்
பேரா-மலேசியா

மாந்தனின் ஒழுக்க நெறியும் பழக்கவழக்கங்கத் திருந்தி சீர்படும் முறையே பண்படுதலாகும். ஒழுக்கம் என்கின்றது முதலில் நம் உள்ளத்தில் தோன்றும். அதுவே அனைத்து அறத்திற்குரியது. பண்+படு = பண்படு > பண்பாடு. அப்படி உள்ளம் தூய்மை அடைய, அதனின் வெளிப்பாடே புறத்தின் நடைமுறைகள். உணவு, உடை, பண்டிகை, கலை, சமயம் மற்றும் அனைத்துமே நாகரிகமாகும். மாந்தன் வாழ்க்கைக்குத் துணையானது அவன் சார்ந்த நிலமாகும். குறிப்பிட்ட நிலத்தில் வாழ்ந்து நெறிப்படுத்திய அக வாழ்க்கை மற்றும் புற வாழ்க்கை முறைகளே பண்பாடாக அமைகின்றன.

தொல்காப்பியர் ஐந்திணை பற்றி குறிப்பிடுகின்றார். குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் எனப்படும் ஐந்து வகையான நிலங்கள் தமிழ்கூறு நல்லுலகத்தில் தோன்றி இருப்பதேயாகும். ஒவ்வொரு நிலங்களில் வெவ்வேறான இயற்கை சூழலும், மக்களின் நடைமுறை வாழ்க்கை முறையும், பண்பாடும் மாறியிருந்தன. உள்ளம் பண்படுவது பெரும்பாலும் கல்வியால். இதைத் தான் Oxford அகராதிரியும் தெரிவிக்கின்றது. "Culture is not just about ideas, customs, social behaviour, but manifestation of human intellectual collectively".

மாந்தனின் உள்ளம் மற்றும் அறிவு சிந்தனை உயர்ந்து வளர்ச்சி அடையத்தக்கது. இதனால் தொல்காப்பியர் உயிரினங்களை இரண்டாக பகுத்து, அறிவால் மேம்படும் உயிர்களை உயர்திணை என்றும் மற்ற அனைத்து உயிர்களையும் அ.ஃ.றிணை என்றார்:- ”உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அ.ஃ.றிணை என்மனார் அவரல பிறவே. ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே” (சொல்லதிகாரம் 1). அங்ஙனம் நகரத்தில்வாழ் மக்களின் அக வாழ்கை அல்லது ஒழுக்கம் சீர்மை கண்டு பண்பட்டது. அகத்திணை அல்லது அக ஒழுக்கம் மாந்தனின் உள்ளம் சார்ந்தது. அன்பு, காதல், நட்பு, இல்லறம் போன்ற பண்புகள் அக வாழ்க்கைக்குள் அடங்கும். அவ்வகையில், நகர மக்களின் திருந்திய வாழ்க்கை முறையே நாகரிகமானது. சொல்லின் அமைப்பு :- நகர் + அகம் = நகரகம் >, நகரிகம் >, நாகரிகம்.

எல்லா நாட்டிலும், மாந்தர் முதல் நகர நிலையிலேயே நாகரிகமடைந்துள்ளனர். பிறகு புற வாழ்க்கை வாயிலாக உழவு தொழிலும் நிலையான குடியிருப்பும் ஊர்பெருக்கமும் நாகரிகம் தோன்றுவதற்குப் பெரிதும் துணைசெய்தன. பண்டையக் காலத்தில், நாகரிகம் என்ற சொல்லையே பண்பாடென்னும் பொருளிலும் ஆண்டனர். அதனாலேயே, பண்பாட்டுக் குணமான கண்ணோட்டத்தை நாகரிகம் என்றார் திருவள்ளுவர் :- “ பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்”-(குறள் 580)

பண்பாடு உயர்வதற்கு சமய நெறிகளும் துணை செய்கின்றன. குறிப்பாக தமிழர் பண்பாடு ஓங்குவதற்கு தமிழர் சமயங்களின் பங்கு அளப்பரியது. கோயிலுக்கு செல்வது என்றால் முதலில் உடல் புறத்தை தூய்மை செய்கின்றோம். பெரும்பாலும் குளித்து அல்லது நீராடுவோம்.இதனால் தான் கோயில் புறத்தில் குலத்தை வெட்டி அமைத்தார்கள். குழாய் இல்லாத காலத்தில் குலமே உடல் தூய்மை செய்யும் இடமாக அமைந்தது.

ஆலயம் தொழுவதின் மூலம் அடக்கம் தேவை. அதனால் தலையை நிமிராமல், பணிந்து செல்ல வழியுருத்துகிறது அப்பாடல் வழிபாடு முறையில் அகம் புறம் என்று வகைபடுத்தலாம். புறத்தில் செய்யும் கோயில் தொண்டும் பூசனையின் பயனே அக வழிபாட்டிற்கு துணை நிற்கும். ”மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கள் ஈசனை காட்டும் உடம்பு” என்கின்றாள் ஔவை பிராட்டி. புற வழிபாடு சரியாக கடைப்பிடித்தால், அதுவே அக ஒழுக்கத்திற்கு கைக்கூடும். நம் உள்ளத் தூய்மை அடைந்தால் மட்டுமே இறைவன் அதில் கோயிலாக கொள்வான் என்று ”நாடும் நகரமும் நற்றிரு கோயிலும், தேடி திரிந்து சிவபெருமான் என்று பாடுமின், பாடிப் பணிமின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்தை கோயிலாக் கொள்வனே” (திருமந்திரம் 1445).

ஆகவே, கோயிலுக்குச் செல்வது, விழாவில் கலந்து கொள்ளுதல், மெய்யன்பர் திருக்கூட்டத்தொடு யாத்திரை செல்லுதல், கோயிலில் உழவார தொண்டு புரிதல், பூசனையில் கலந்து உதவி செய்தல், திருவமுது தயார் செய்தல் மற்றும் பரிமாறுதல் போன்ற அனைத்து தொண்டின் பயனே நம் உள்ளத்தில் இறையன்பு விளைவிப்பதற்காகத் தான். அதுவின்றி, உள்ளத்திலே மெய் உணர்வு ஏற்படும் நிலையில், இடைவிடாமல் இறையைச் சிந்தையால் நினைதல் மற்றும், மனத்தின் கண் வாயிலாக, அறிவால் இறையை உணர்ந்து கொள்வதே அக வழிபாடாகும்.

சிவனியச் சமயம் இப்படியான நிலையை ஓக நெறி மற்றும் ஞான நெறி என்று கூறும். ”ஞானத்தால் தொழுவார் சிலஞானிகள் ஞானத்தால் தொழுவேன் உனை நான் அலேன் ஞானத்தால் தொழுவார்கள் தொழ கண்டு, ஞானத்தாய் உனை நானும் தொழுவனே” (திருமுறை 5.91.3) என்று திருநாவுக்கரசரின் வாக்கு. அறிவின் வாயிலாக இறைவனை தொழுபவர் சிலர் மட்டுமே. தொண்டு நெறியில் நின்ற திருநாவுக்கரசர், அறிவால் கடவுளை வழிபடுவோரை கண்டு அவரும் அறிவு வடிவில் உணர்ந்து தொழுவார் என்று குறிப்பிடுகின்றார். எனவே இப்படி போன்ற உயர்வு சிந்தனைக்கொண்ட தமிழ்ச்சமய கோட்பாடுகளே, அகப்புற நெறிகள் மூலமாக தமிழர் பண்பாடு நிலைபெறுவதற்கும் வளர்வதற்கும் துணை நின்றன

ஓங்கி செழிப்பாக நின்றிருந்த தமிழர் இனம் மொழி சமயத்தில், கிட்டதட்ட 2700 ஆண்டுகளுக்கு முன்பே ஆரியத்தினால் தாக்கம் ஏற்படத் தொடங்கியது. அத்தாகத்தின் மீட்சியே தொல்காப்பியம் மற்றும் திருக்குறள். வடமொழி கலப்பினால் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட கலப்புகளைப் பார்த்து கண்டித்தார் தொல்காப்பியர் :- "வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்து சொல்லாகுமே" (தொல்-சொல் 401). தமிழில் வடமொழி சொற்கள் அல்லது எழுத்துகள் கலந்தால், அது தமிழின் தனித்தன்மையை கெடும். அவ்வாறு கெடாமல் இருப்பதற்கு, வடவெழுத்து நீக்கி தமிழ் எழுத்துகளில் எழுத புரட்சி செய்தவர் தொல்காப்பியர்.

தவிர, தமிழ்ச் சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் தீங்கு ஏற்பட்ட காலத்தில், திருவள்ளுவர் செய்த புரட்சியின் வெளிப்பாடே தமிழ் வேதமான திருக்குறள். உலக நலத்திற்காகவும் பிற உயிர்கள் நலத்தோடு வாழ செய்யப்படும் சிவ வேள்வி மெல்ல நழுவி, ஆரிய நெறியான வைதீக மரபின்படி கொலை வேள்வி செய்யத் தொண்டங்கினார்கள். கொல்லா நெறியை வழியுறுத்த :-"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள் 259). வேள்வியில் இடும் பல பொருள்களோடு பிற உயிர்களையும் வெட்டி நெருப்பில் இட்டார்கள். அதை மறுப்பதற்கு, ஆயிரம் பொருட்கள் தீயில் இட்டாலும், ஒரு உயிரைக் கொன்று உண்ணாமல் இருப்பதே தவம் என்று ஆணித்தனமாக அறத்தை மீட்டெடுத்தவர் திருவள்ளுவர்.

தொடர்ந்து பல்லவர்கள் ஆட்சி செய்த சங்கம் மருவிய காலத்தில் சிலப்பதிகாரம் என்கின்ற வரலாற்று மற்றும் கலை மீட்சி நூல் அரங்கேறியது. தமிழிசையை தொன்முறை இயற்கை என்று அழைத்த இளங்கோவடிகள் தமிழிசை மற்றும் நடன இலக்கணங்களை வெளிப்படுத்தி மக்கள் இடத்தில் காப்பியமாக சேர்ப்பித்தார். தோல் கருவி வகைகள். தாள வகைகள், யாழ் வகைகள், நரம்பு கருவிகள், குழல், ஏழிசை வகைகள், பண் வகைகள், ஆளத்தி (குரலை நீடித்து பாடுவது) போன்ற நுட்பங்கள் பதிவிடப்பட்டுள்ளன. இதுவே தமிழர் பண்பாட்டினையும் வரலாறும் அழியாமல் காக்க வேண்டும் என்பதற்காக அமைந்தன.

பத்தி இயக்க காலத்தில் இசையைத் தற்காத்து மெய்யியல் மெய்மங்களை மக்கள் இடத்தில் எளிதாக சேர்ப்பதற்காக பண்ணிசையோடு பறைசாற்றினார்கள். சிவனியம் மற்றும் மாலியம் போன்ற சமயங்கள் எழுச்சி கண்ட அக்காலத்தின் கருவூலமானது பன்னிரு திருமுறைகளும் நாலாயிர திருவாய்மொழிகளே. 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் அரும்பாடுபட்டு மூட நம்பிக்கைகள், சாதி தீண்டாமை. மெய்யரிவின்மை போன்ற அறியாமையில் சூழ்ந்த நம்மை விடுதலை செய்வித்தவர்கள். உயர்ந்த சிந்தனைகள், அறம் சார்ந்த வழிபாடு, எளிதான பூசனை, தொண்டு செய்தல், மெய்யடியார்களை பேணுதல் போன்ற நெறிகளை எளிமைப்படுத்தி தந்தார்கள்.

இத்தமிழ் ஞானப் பரம்பரை தொடர்ந்து பல நூற்றாண்டுகள் கடந்து பல அருளாளர்கள் வந்துகொண்டே உலகம் உய்வதற்கு அறநெறிகளை நிலைப்பெற பாடுபட்டார்கள். சோழ மன்னர்கள், தெய்வ சேக்கிழார், சந்தான குரவர்கள், பட்டினத்தார் அடிகள், அருணகிரிநாதர், தாயுமானவர். இராமலிங்க அடிகள் வரை தமிழ் ஞானத்தைத் தொடர்ந்து 19-ஆம் நூற்றாண்டு வரை பரவ செய்தார்கள். "வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ" என்று வள்ளல் பெருமான் தானே தமிழ் ஞான மர மரபில் ஒருவனே என்று குறிப்பிடுகின்றார். அறநெறியே அக ஒழுக்கத்தைக் கட்டிக்காக்கும் ஆதலால் தமிழர் பண்பாடும் செழித்தன.

ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட தென்னிந்தியப் பஞ்சம் (South Indian Famine) இரண்டு ஆண்டுகளுக்கு நடைபெற்று (1876-1878) தமிழர் மாண்புக்கு அழிவு ஏற்படுத்தியது. அக்காலத்தில் உலக தேவைப்பொருள் பருத்தி மற்றும் அபின்(opium) மிகுதியாக இருந்ததனால், வழக்கமாக பயிரிடும் நெல், உளுந்து, காய்கறிகள் போன்றனவற்றைத் தவிர்க்க ஆணையிட்டார்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்கள். அதையும் மீறி பயிரிட்டால், அப்பொருளை வாங்காமல் ஊதியத்தை முடக்கினார்கள்.

எல்லா உழவர்கள் இக்கட்டத்திற்குள் தல்லபட்டதனால், அதனின் விளைவு உணவு தட்டுப்பாடு. இது இயற்க்கையால் தோன்றிய பஞ்சம் அல்லாமல், மாந்தனின் பேராசையினால் உருவாக்கப்பட்டது.

பஞ்சத்தின் விளைவு 50 இலட்சம் தமிழர்கள் பட்டினியில் இறந்தனர். மேலும் 2 இலச்சத்திற்கும் மேற்பட்டவர் பிற நாடுகளுக்கு அடிமை தொழிலாளர்களாக சென்றார்கள். அவைகளில் ஒன்று மலேசிய திருநாடு. இதனால் குடும்பப் பிணைப்புகள், உறவுகள் முறிந்து, தனிமைப்படுத்தப்பட்டார்கள். உழவு தொழிலே முதன்மை தொழிலாக திகழ்ந்தன தமிழர்களிடத்தில், ஆனால் பஞ்சத்தின் பிறகு எத்தனையோ வேளாண்மை நிலங்களை இழந்தார்கள். உழவுத் தொழில் கைவிடப்போக, அதனின் தொழில் அறிவு, நுட்பங்கள், முறைமைகள் அழிந்தன. தொடர்ந்து பட்டினியும் உணவு தட்டுப்பாடு நீடித்ததனால், மக்களுக்கு உடலியல் சிதைவுகள் ஏற்பட்டன. உடம்புக்கு தேவையான ஊட்டச்சத்து இல்லாமல் போக, குழந்தைகளின் உடல் வளர்ச்சியைத் தாக்கியது பொது உயரம் 1.8உ அ குறைந்தது.

இவ்வழிவுப் பாதையை முன்னதாகவே கண்டார் இராமலிங்க அடிகள். பசியே மாந்தனின் முதல் பிணி, அதுவே அவனின் ஒழுக்கத்தையும் பண்பாட்டினையும் சீர் கெடச் செய்யும் என்று உணர்ந்தார். சீவ காருணியம் அடிப்படையில் சத்திய தருமச்சாலை அமைத்தார். எந்நேரத்தில் யார் யார் பசியோடு வந்தாலும், அதை போக்கினார். அதுதான் அணையா அடுப்பு என்கின்றது, உணவு தயார்செய்வதில் ஓய்வு கிடையாத நிலை. அங்கனம் சீவ காருணியத்தில் மூழ்கி இருந்த சூழலில், வாடியப் பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார். பயிர் வாடினால் உணவு உற்பத்தியாகாது. அதனால் பிறரின் பசியை போக்குவதற்கு தடை வந்துவிடுமோ என்று வருந்தி ஏற்பட்ட வாக்கியம்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்பார் திருமூலர் மேலும் பஞ்சத்தின் பிறகு, உயர்ந்த கல்வி இன்மை, தமிழ் மொழி அறிவின்மை, பகுத்து அறிவின்மை, அடிமைக்குணம், கண்ணியமின்மை, வீரம் இழந்த நிலை, பிரிவினை போன்ற பல பாதகங்கள் தமிழர்களின் மத்தியில் ஏற்பட்டன. சமயத்திலும் வாழ்வியலும் பண்பாட்டு சிக்கல்கள் பல நேர்ந்தன. வாழ்க்கையில் தோய்ந்து போனவர்கள் மத்தியில் அச்சம் தொடர்ந்தன. கரணங்களில் மூட நம்பிக்கைகள் பல திணித்த வேளையில் அதை பகுத்து அறியக் கூடிய அறிவு இல்லாமல் போக, மறுப்பு தெரிவித்தால் இறை குற்றமாக மாறிவிடுமோ என்று அஞ்சி, அதனால் தொடர்ந்து அவர்களின் வாழ்க்கை வாட்டி எடுத்துவிடுமோ என்று பயந்து சொன்னபடி ஏற்றுக்கொண்டார்கள்.

இவ்வழிவுப் பாதையை முன்னதாகவே கண்டார் இராமலிங்க அடிகள். பசியே மாந்தனின் முதல் பிணி, அதுவே அவனின் ஒழுக்கத்தையும் பண்பாட்டினையும் சீர் கெடச் செய்யும் என்று உணர்ந்தார். சீவ காருணியம் அடிப்படையில் சத்திய தருமச்சாலை அமைத்தார். எந்நேரத்தில் யார் யார் பசியோடு வந்தாலும், அதைப் போக்கினார். அதுதான் அணையா அடுப்பு என்கின்றது. உணவு தயார்செய்வதில் ஓய்வு கிடையாத நிலை. அங்கனம் சீவ காருணியத்தில் மூழ்கி இருந்த சூழலில், வாடியப் பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார். பயிர் வாடினால் உணவு உற்பத்தியாகாது, அதனால் பிறரின் பசியைப் போக்குவதற்குத் தடை வந்துவிடுமோ என்று வருந் டுமோ என்று வருந்தி ஏற்பட்ட வாக்கியம்.

புதுப்புது சடங்குகள், பரிகாரங்கள், அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரங்கள், தன்னலம் மையப்படுத்திய வழிபாடு போன்ற முறைக்கேடுகளின் விளைவு சமய வழிபாட்டின் சீர்மையும் ஒழுக்கமும் குலைந்தன. தாய் மொழியான தமிழைத் தவிர்த்து பிழைப்பதற்கு பிற மொழிகள் கற்றால், தன் வாழ்க்கைக்கு கைக்கூடும் என்ற மாயை மக்கள் மனதில் பதிந்தன. அதனால் தமிழ் மொழியைக் கழற்றிவிட்டார்கள்.

தன்னை அறிதல், தன் இனத்தை அறிதல், தாய் மொழி அறிதல், தன் பண்பாடு சமயம் கலை அறிதல் போன்ற சிந்தனைகள் மருவி அயல் மோகம் வளர்ந்தன. தமிழ் பண்பாட்டு விழாவில் அயல் இசை புகுந்தன, பாரம்பரிய உடைகளைக் கைவிட்டோம், அறிவும் அன்பும் நிறைந்த தமிழ் உணவு பழக்க வழக்கங்களைக் கைவிட்டோம், சங்கீத் (Sangeet) போன்ற அயல் நிகழ்வுகளை நம் மங்கள விழாவில் புகுத்தினோம். இவ்வளவு சீர்குலைவுகள் நம்மிடத்தில் நேர்ந்துவிட, தன்மானமும் இனமானமும் இல்லாத குருடர்கள் போல ஆகிவிட்டோம்.

இப்படி போன்ற மாயையில் இருந்து நம்மைத் தட்டி எழுப்புவதற்கு கடந்த நூற்றாண்டு பல தமிழ்ச் சான்றோர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார், மறைமலை அடிகள், தேவநேய பாவாணர், குன்றக்குடி அடிகள், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற எந்தனையோ சான்றோர் பெருமக்கள் தம் வாழ்கையே தமிழ் மொழி இனம் சமய மீட்சிக்காக உழைத்தார்கள். அவர்கள் போட்ட உழைப்பை பின் நம் கையில் ஒப்படைத்துவிட்டு சென்றனர்

தொடர்ந்து தமிழ் மொழி இனம் சமய மீட்சிக்காக சில பரிந்துரைகளை முன்வைக்கின்றேன். முதல் தமிழ்ச் சமய மாநாடு மறைமலை அடிகள் தலைமையில் நடந்தேறியது. சமய ஆசிரியர்களும் சான்றோர்களும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில், அடுத்த தலைமுறையினர்களுக்கு ஆர்வமும் ஈடுபாட்டினை வளர்க்க தொடர்ந்து நாம் செயல்பட வேண்டும். அடுத்த 5 - 10 ஆண்டுகளில், நம் நாட்டில் குறைந்தது 50 சமய ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். பிற கோயிலுடன் இயக்கங்களுடன் சமயப் பண்பாட்டினை வளர்க்கும் முன்னெடுப்புகளில் உடனுழைத்தல் சிறப்பு.

மக்கள் தொண்டு மகேசன் தொண்டு போன்ற நற்பணியை செய்து, தமிழ்ச் சமய கோட்பாட்டுடன் நடைமுறைப் படுத்தும் கோயில்கள், இயக்கங்கள், தனிநபர்களை அங்கீகரித்து, வாழ்த்தி ஊக்கத்தை வளர்த்தலே நன்று. வாழ்த்து செய்திகளை ஊடகம் வாயிலாகவும் தெரிவிக்கலாம். தமிழ்ச் சமய விழிப்புணர்வு பற்றியான கணக்கெடுப்புகள் மற்றும் கருத்தாய்வுகளைத் தொடர்ச்சியாக ஆராயவேண்டும்.

தொடர்ந்து எளிதான முறையில் சமயப் பண்பாடு தெளிவினைகளும் மெய்யியலையும் மக்கள் இடத்தில் சேர்க்க வேண்டும். சமயத்திலும் வாழ்வியல் கரணங்களிலும் காணும் சிக்கல்களைக் கண்டறிந்து தக்க தீர்மானங்களை முன்வைத்து ஏடல் வழங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும். வழிமுறைகளை, மெய்யியல் கருத்துகளை ஆவணப்படுத்துதலும், பட்டறை, வகுப்புகள். பங்கேற்பாளர்களை அதிகரிக்கவும் வேண்டும்.
எனவே, பாவலரேறு பெருஞ்சித்திரனார் வாக்கின்படி, ”எதுவரை எம்மூச்சு இயங்குகின்றதோ-எதுவரை எம்உடல் இம்மண் தோயுமோ-எதுவரை எம்மனம் நினைவலை எழுப்புமோ-அதுவரை மொழி இன ஆர்ப்படங்காது” என்ற எழுச்சியுரை போல, அவரவர் இயலும்படி தம் இடத்தில், மேல் சொன்ன முன்னெடுப்புகள் தொடர்ந்து செய்துவந்தால், நம் தமிழ் குமுகாயத்திற்குள் புதிய உருமாற்றத்தையும் வளர்ச்சியும் கண்டறியலாம். இவர்களே உலகத்திற்கு முன் எடுத்துக்காட்டாக திகழ்வார்கள். வாழ்க வெல்க உயர்க தமிழர் இனம் மொழி மற்றும் சமயம்.

”தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு,
அமிழ்தம் அவனுடை மொழியாகும், அன்பே அவனது வழியாகும்”



# தகவல் தொழில்நுட்ப உலகில் தமிழ்சமயத்தின் இருப்பின் முக்கியத்துவம்

**தமிழ்த்திரு மோகனராசன் மோகன் குமார்** BSc
ஆலோசகர் வணிக சந்தை

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு. - குறள் 426

உலகத்தார் உறையும் முறை காலத்திற்கு ஏற்ப பல பரிமாங்களைக் கடந்து வளர்ந்து கொண்டே இருக்கின்றதோ அவ்வாறே அந்த வளர்ச்சியோடு பொருந்தி உறைவது இன்றியமையாதது. மனித வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களிலும் தொழில்நுட்பம் தனது தடமிட்டு வருகிறது. கல்வி, மருத்துவம், வணிகம், அரசியல், என அனைத்திலும் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கம் அதிகளவில் ஊடுருவியுள்ளது. அதிலும் அண்மை காலமாக இந்த தகவல் தொழில்நுட்ப உலகம், “செயற்கை நுண்ணறிவு = செ.நு” Artificial Intelligence- AI எனப்படும் புதிய செயல்பாட்டின் பேரலையில் அடித்துச் செல்லப்படும் புதிய பரிமாணமாக மாறியுள்ளது. இணையம், மென்பொருள், தரவுத் தொகுப்புகள் எல்லாம் இன்று செ.நு/AI எனும் சக்தியின் கீழ் செயல்பட தொடங்கி வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில், செயற்கை நுண்ணறிவின் தரவு பெரும் முறையில் ஆதிக்க மொழியாக ஆங்கில மொழி இருந்து வருகின்றது. ஒரு சராசரி மனிதன் இணையத்திலும், செயற்கை நுண்ணறிவு துணையுடைய தொழில்நுட்பங்களிலும் ஏதேனும் தகவலை தேட, ஆங்கிலத்திலுள்ள தரவுகளே முதன்மையாக அவனுக்கு முன்னே வந்து சேர்க்கின்றன. இதனால், இணையத்திலிருக்கும் ஆங்கில மொழி மற்றும் அதன் பெயர்பில் இருக்கும் தரவு குறிப்புகளே முதன்மையாக காணப்பட்டு, படிக்கப்பட்டு அதையே உண்மை என நம்பப்படும் சூழல் அதிகளவில் பெருகியுள்ளது.

அறிவார்ந்த சொந்தங்களே, நமது தமிழ்ச் சமயம் (வுயஅடை ளுயஅயலயஅ) என்ற தனித்த இறையாண்மையின் இருப்பும் மெய்மையும் தகவல் தொழில்நுட்ப பேரலையில் தக்க தரவுகளுடன்தமிழ் மொழியிலும் அதற்கு ஏற்ற ஆங்கில மொழி பெயர்பிலும் இருப்பது மிக முக்கியமானதாகும். ஒரு நல்ல செய்தி என்னவென்றால், செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களில் தமிழில் உறையாடினால் பதிலுக்கு அதுவும் தமிழில் உரையாட தொடங்குகிறது. அது. சரியான தகவல்களை எடுத்துத் தருகின்றதா என்று ஆராய்ந்து பார்த்தால் இல்லை.

தமிழில் இருக்கும் சில தரவுகளை எடுத்துத் தருவதோடு, பெரும்பாலும் ஆங்கிலத்தில் இருக்கும் தகவல்களை எடுத்துத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தே தருகின்றது. திரும்ப திரும்ப சரியான தகவல்களை நாம் அதனிடம் சொன்னால் அவை கற்பூரம் போன்று விரைவில் பிடித்துக் கொள்ளும் ஆற்றல் செயற்கை நுண்ணறிவுக்கு இருந்த போதிலும், இணைய உள்ளடக்கங்களில் அந்தப் புதிய கருத்துகள் பதிவடையாமல் போகின்றன. ஆகையால், தகவல் தொழில்நுட்ப தளங்கலில், தமிழ்ச் சமயம் சார் தகவல்கள் இணையத்தில் தமிழுலும் அதன் ஆங்கில மொழி பெயர்பிலும் இருக்கச் செய்ய நாம் தொடர்ந்து வினையாற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றோம். செய்து கொண்டும் வருகின்றோம். எனினும், அவ்வாறான முயற்சிகளில் ஒரு சில சவால்கள் எழுந்துள்ளன. கீழே அந்த சிக்கல்கள் மற்றும் அவற்றிற்கு உரிய தீர்வுகள் விரிவாக தரப்பட்டுள்ளன.

சிக்கல் 1 - தகவல் தணிக்கை, உள்ளடக்க அகற்றம் மற்றும் தவறான தகவல் பிரச்சாரம் போன்ற கீழறுப்பு செயல்கள்

சில நேரங்க + ளில், இணைய தளங்களில், அல்லது சமூக வலைத்தளங்கள், காரணமின்றி அல்லது தவறான புரிதலால், எதிர் வினையாற்றும் சக்திகள் தமிழ்ச் சமயம் சார்ந்த உள்ளடக்கங்களை அறிந்தும், அறியாமலும் அகற்றி கொன்டு வருகின்றனர். தமிழ்ச் சமயத்தைப் பற்றிய இணைய உள்ளடக்கங்கள் உன்மையாக எழுதி பதிவேற்றம் செய்து வைக்கப்பட்ட போதிலும், சிலர் அரசியல், மத, அல்லது தனிப்பட்ட கீழறுப்பு நோக்கத்தால் அவற்றை அகற்றி, திரித்துத் தவறான தகவல்களைப் பதிவேற்றம் செய்து பரப்புகின்றனர். இதன் விளைவாக, செயற்கை நுண்ணறிவின் தகவல் சேகரிப்பு வழிமுறையின் நம்பகத்தன்மை வெகுவாக பதிப்புக்குள்ளாகிறது.

இதற்கான தீர்வு:

**இணையதளம் மற்றும் தரவுத்தளம் உருவாக்கம்** - நம்பகமான ஆய்வுகள், வரலாற்று ஆவணங்கள், புகைப்படங்கள், காணொளிகள் ஆகியவற்றை ஒரே இடத்தில் சேகரிக்கும் அதிகாரப்பூர்வ இணையதளம் அமைப்பு.

**இணைய காப்பகம் அமைத்தல்** - உருவாக்கப்படும் அனைத்து முக்கியமான பதிவுகளையும் தனியார்சர்வர்களில் மற்றும் எண்முறை (னுபைவையட) காப்பகங்களில் பாதுகாத்தல்.

**கூட்டுறவு மற்றும் ஒத்துழைப்பு** - உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் சமயம் சார்ந்த அமைப்புகளுடன் இணைந்து, பல தளங்களில் ஒரே நேரத்தில் உள்ளடக்கங்களைப் பகிர்ந்து பரவலாகப் பரப்புதல்.

**சமூக வலைத்தளங்களில் செயற்பாடு** - சுருக்கமான விளக்கப்படங்கள், காணொளிகள், கதையாடல்கள் மூலம் உண்மையான தகவல்களைப் பரப்புதல்.

**ஏற்படும் நன்மை**

தகவல் தொழில் நுட்ப இணைய உள்ளடக்கங்களில் உறுதியான அடித்தளைத்தை பெற்று உலகளாவிய அளவில் தமிழ்ச்சமயத்தின் குரல் வலிமையாகப் பரவி, அதன் மரபுகள் நிலைத்திருக்க வாய்ப்புண்டாகும். பொது மக்களிடத்தில் சரியான தகவல் பரிமாற்றத்திற்கும் புரிதலுக்கும் வழி வகுக்கும்.

**சிக்கல் 2-இணைய தாக்குதல், துன்புறுத்தல்கள் மற்றும் பயனர் பாதுகாப்பு**

தமிழ்ச் சமயம் சார்ந்த கருத்துகளை வெளிப்படையாக பகிரும் நபர்கள் மீது சமூக வலைத்தளங்களில் இகழ்ச்சி. மிரட்டல். அவதூறு போன்ற தாக்குதல்கள் ஏற்படுகின்றன. மேலும் தமிழ்ச் சமயம் தொடர்பான நிகழ்வுகளில், புலன குழாம் கலந்துரையாடல்களில் பங்கேற்கும் நபர்களின் தனிப்பட்ட தகவல்களை (தொலைபேசி எண், மின்னஞ்சல்) ஒரு சில அறம் அற்ற நபர்கள்.்.இயக்கங்கள் சேகரித்து தணிப்பட்ட தாக்குதல்கள், துன்புறுத்தல்கள் செய்கின்றனர்.

**இதற்கான தீர்வு:**

பயனர் பாதுகாப்பு ரூ சமூக ஆதரவு வலையமைப்பு - பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்ட, தொழில்நுட்ப மற்றும் சமூக ஆதரவை வழங்கும் செயல்களை முன்னெடுத்தல்.

சட்ட முறைபடி நடவடிக்கை எடுத்தல் தாக்குதல்கள், துன்புறுத்தல்கள் செய்பவர்கள் மீது சட்ட முறைப்படி விசாரித்து, தக்க நடவடிக்கை எடுத்தல்.

பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் - குறியாக்க வசதிகள் கொண்ட தொடர்பு கருவிகள், பாதுகாப்பான சேவைகளைப் பயன்படுத்துதல், மற்றும் பயனர்களுக்கு இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு அளித்தல்.

சமூக பிரபலங்களின் பங்களிப்பு சமூக ஆர்வலர்கள், தலைவர்கள், அறிஞர்கள், பிரபலங்கள் ஆகியோர் முன்னின்று தமிழ்ச் சமயம் சார்ந்த நேர்மையான கருத்துக்கள் பேசி பகிர்வது.

**ஏற்படும் நன்மை**

தமிழ் சமயம் நிகழ்சிகளில் பங்கேற்கும் நபர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். தமிழ்ச் சமயக் கருத்துகளை சட்டம் முறைபடி துணிச்சலுடன் அச்சமின்றி பகிர முடியும். சமூக ஆர்வலர்கள், தலைவர்கள், பிரபலங்களின் பங்களிப்பு சமூகத்தில் மரியாதை, ஒற்றுமை, மற்றும் நேர்மையான உரையாடலைகளை ஊக்குவித்து துன்புறுத்தல்களையும் வெகுவாக குறைக்கும்.

**சிக்கல்3- தகவல்குறைவால் இளம் தலைமுறை விலகுதல்**

தமிழ்ச் சமயம் சார்ந்த தரமான உள்ளடக்கங்கள் இணையத்தில் குறைவாக இருப்பதால், இளம் தலைமுறை வேறு மொழிகளில் வரும் தகவல்களையே அதிகம் அணுகுகின்றனர். இதனால், தமிழ் மொழி சார்ந்த இறையான்மை அறிவு தெளிவு மங்குகிறது. அயலார் சமயத்தின் தாக்கத்திற்கு ஆளாகி, வழி நெறி தவறி போகின்றனர்.

**இதற்கான தீர்வு:**

தகவல் தொழில்நுட்பக் கல்வி மற்றும் சிந்தனை ஊக்குவிப்பு -ஊடகக் கல்வி, விமர்சனச் சிந்தனை பயிற்சிகள் மூலம் இளம் தலைமுறை தவறான தகவல்களை அடையாளம் கண்டு மறுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் செயற்பாடு சுருக்கமான விளக்கப்படங்கள், காணொளிகள், கதையாடல்கள் மூலம் உண்மையான தகவல்களைத் தொடர்ந்து பரப்புதல்.

இணைய விளம்பரம் - புழுபடந யுனள, குயஉநடிழழம யுனள போன்ற டிஜிட்டல் விளம்பரங்கள் மூலம் தமிழ்ச்சமயம் சார்ந்த நிகழ்வுகள், பாடநெறிகள், காணொளிகள் ஆகியவற்றை பரப்புதல்.

**ஏற்படும் நன்மை:**

தகவல் தொழில்நுட்ப கல்வி, சமூக வலைத்தளச் செயற்பாடு, மற்றும் இணைய விளம்பரங்கள் மூலம் இளம் தலைமுறைக்கு உண்மையான தமிழ்ச் சமய அறிவு எளிதில் சென்றடையும். மேலும், தவறான தகவல்களை அடையாளம் கண்டு மறுக்கும் திறன் உருவாகி, தமிழ் இறையாண்மையின் அடிப்படைகள் மீதான பற்று வலுப்படும்.

**முடிவுரை**

அன்பான சொந்தங்களே, தகவல் தொழில்நுட்பம் உலகத்தை கணநேரத்தில் இணைக்கும் வல்லமை பெற்றுள்ள இன்றைய காலத்தில், தமிழ்ச் சமயத்தின் மெம்மையான இறையான்மை, வரலாறு, இணைய சமூக வலைதளங்களிலும், செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களிலும் உறுதியான இடத்தைப் பெறுவது காலத்தின் தேவை. இதற்காக, நம்பகமான தகவல் பரவல், பயனர் பாதுகாப்பு. மற்றும் ஒத்துழைப்பு செயற்பாடுகள் ஆகிய மூன்று கோனத்தில் நாம் அனைவரும் இயங்க வேண்டும். எனவே, தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், அறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், தலைவர்கள் பிரபலங்கள், இளம் தலைமுறை என்று தமிழ் மொழி இறைமொழி என முழங்கும் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமை உணர்வுடன் ஒன்றுபட்டு செயல்படுவது அவசியம். எத்தகைய சவாலையும் வென்று, தமிழ்ச் சமயம், தகவல் தொழில்நுட்ப இருப்பும் பாதுகாப்பும் உறுதி பெற்று தலைமுறைகள் தாண்டி பிரகாசிக்கும்.

வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி வணக்கம்.

இந்த நேரத்தில் உச்ச சட்டமான அரசமைப்பு சட்டம் பிரிவு 11(3) ஒரு சமய குழு தமது சமய நிர்வாகத்தை அதுவே செய்யவும் சமய மற்றும் கொடை நோக்கத்துக்காக நிறுவனங்களை ஏற்படுத்தி நடத்தவும் முழு உரிமை தருகிறது. ஆனால் பதிவதிகாரியடம் பதிவு பெற்றால் இது பாதிப்புக்குள்ளாகிறது.

எனவே எனது பார்வையில் பிரிவு 11 (3) இன் கீழ் ஒரு சமய குழு கழங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய தேவையில்லை. ஆனால் நடைமுறையில் பதிவாளரை தவிர்த்து சமய குழு தமது சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு நிறுவனங்களின் பதிவாளர் (registrar of society), அரசு (Trustee incorporation Act) 1956.

இந்த சட்டங்களின் மூலம் அமையும் குழுக்களின் மீது அரசு கட்டுப்பாடு பெருமளவில் குறைவாக இருக்கும். அதிலும் தமிழ் சமய முன்னெடுப்பாளர்களின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை வெகுவாக தடுத்து விடும். தமிழ் சமய முன் எடுப்புகளும் தமிழ் சமய பேரமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும். இந்த சுதந்திரம் மிகவும் தேவையானது. இது கிளை கட்டமைப்புகளை ஏற்படுத்த ஏதுவான சூழ்நிலையை கொடுக்கும்.



# தமிழே இறைமொழி

# தமிழர் மரபார்ந்த நிகழ்ச்சிகள் வழிநடத்துனர் தொடர்பு

**மலேசிய தமிழ்ச்சமய தென் மண்டல ஒளி வட்டம்**
அருள்மொழி ஆனந்த தமிழன் : 016 665 3718

**மலேசிய சைவ சமயப் பேரவை**
முனைவர் நாகப்பன் ஆறுமுகனார் : 016 969 1090

**தமிழியல் ஆய்வு களம்**
தமிழ்த்திரு இர. திருச்செல்வனார் : 012 524 6471
தமிழ்த்திரு அ. பன்னீர்ச் செல்வனார் : 012 400 5070

**தமிழ் வாழ்வியல் இயக்கம், பாரிட் புந்தார்**
தமிழ்த்திரு க. முருகையனார் : 012 428 7965
தமிழ்த்திரு ம. தமிழ்ச்செல்வனார் : 013 439 2016

**மலேசிய சைவ நற்பணிக் கழகம்**
தமிழ்த்திரு ந. தர்மலிங்கனார் : 012 327 7061

**வள்ளலார் அன்பு நிலையம், ஈப்போ**
தமிழ்த்திரு க. கலையரசனார் : 011 5503 1454

**மலேசிய சுந்தரர் சிவயோக ஆசிரமம்**
தமிழ்த்திரு அண்ணாதுரைனார் : 012 358 3363
தமிழ்த்திரு சுந்தரம் சிவபூசகனார் : 019 211 0923

**கம்பார் தமிழர் விழிப்புணர்வு இயக்கம், பேராக்**
தமிழ்த்திரு ம. தமிழரணார் : 018 773 2521

**தமிழ்நெறி வாழ்வியல் இயக்கம்**
தமிழ்த்திரு மா. அருள்முனைவனார் : 017 331 5341
தமிழ்த்திரு சி. மாசிலனார் : 013 332 1375

**மலேசிய தங்கத் தமிழர் இயக்கம்**
தமிழ்த்திரு சு. இலக்கியவாணனார் : 016 283 7759

**உலகத் தமிழர் பாதுகாப்பு செயலகம்**
தமிழ்த்திரு வீ. பாலமுருகனார் : 014 309 9379

**அருள்மிகு கயிலாய நாதர் சிவன் கோவில்**
தமிழ்த்திரு இரா.தில்லைத்தமிழ் : 016 220 2596

# தமிழ்ச்சமய இறையாண்மை

**தமிழே இறைமொழி**

**தமிழ்ச்சமயமே தாய்ச்சமயம்**

**தமிழ்ச்சமய இறையியல் மரபு, சமயம், அகம்**

**தமிழ்ச்சமய நான்மறை அறம், பொருள், இன்பம், வீடு**




facebook/TamilsamayamMalaysia
www.worldtamilarprotections.com
+6014 309 9379, +6012 679 1574, +6016 665 3718


TAMILSAMAYAM


Designed & Printed by : தமிழர் மின்னியல் அச்சகம் 05-241 4545, 012-517 5954
KV Media